பூமியில் புளிக்காரம்

சமூக ஈடுபாட்டிற்கான சமயச் சிந்தனைகள்

கு.அமிர்தராஜ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பூமியில் புளிக்காரம்

சமூக ஈடுபாட்டிற்கான சமயச் சிந்தனைகள்

கு. அமிர்தராஜ்

களரி
வெளியீட்டகம்

இறையரசு
இயக்கம்

தலைப்பு	: பூமியில் புளிக்காரம்
ஆசிரியர்	: கு. அமிர்தராஜ் cruzcaramir @ yahoo.com
உரிமை	: ஆசிரியருக்கு
முதல் பதிப்பு	: ஏப்ரல், 2005
வெளியீடு	: **இறையரசு இயக்கம்** பனங்காலவிளை, அழகிய மண்டபம், முளகுமூடு - 629167. **களரி வெளியீட்டகம்** களரி மக்கள் பண்பாட்டு மையம் அ.பெ. எண். 17 ஆயர் இல்லம் நாகர்கோவில் - 629 001. kalari94@sancharnet.in
அளவு	: Demi 1 x 8
பக்கங்கள்	: 140
பிரதிகள்	: 2000
கணினியாக்கம்	: வ. சகாய மேரி
நூல் வடிவமைப்பு	: சு. ஆரோக்கிய திரேஸ் பாபி
அட்டை வடிவமைப்பு	: விக்கிரமன்
அச்சகம்	: அன்னை அச்சகம் 25 மீட் தெரு நாகர்கோவில் - 1 தொலைபேசி : 223346
கிடைக்குமிடம்	: களரி மக்கள் பண்பாட்டு மையம் அ.பெ. எண். 17 ஆயர் இல்லம் நாகர்கோவில் - 629 001. தொலைபேசி : 04652-220742 அலைபேசி : 94431 56065
விலை	: ரூ. **55/-**

பொருளடக்கம்

		பக்கம்
	ஒரு சீடனின் நன்றிக்கடன்	5
	அணிந்துரை	7
	என்னுரை	9
1.	மனித வாழ்வின் அர்த்தம்	13
2.	இறைத்திட்டம்	23
3.	கடவுள் யார்?	41
4.	மதம்	55
5.	இறைவாக்கினர்கள்	65
6.	இயேசு கிறிஸ்து யார்?	77
7.	திருச்சபை	91
8.	பொதுநிலையினர் அருள்வாழ்வு	105
9.	சமூகப் பகுப்பாய்வு	117
10.	இறையரசு இயக்கம்: ஓர் அறிமுகம்	129

ஒரு சீடனின் நன்றிக்கடன் . . . .

களரி வெளியீட்டகமும் இறையரசு இயக்கமும் இணைந்து வெளியிடும் பூமியில் புளிக்காரம் என்ற இந்த நூலையும், அதன் ஆசிரியரையும் அறிமுகப்படுத்துவது மகிழ்ச்சியையும் நிறைவையும் தருகிறது.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னரே இந்நூல் வெளிவந்திருக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் கத்தோலிக்க திருச்சபைக்குள்ளே சமுதாய மாற்றத்தின் **புளிக்காரமாக** செயல்பட்ட இயக்கம் தான் இறையரசு இயக்கம். இந்த இயக்கத்தின் சித்தாந்தம், கொள்கைகள், அணுகுமுறைகள், செயல்பாடுகள் இவற்றின் இறையியல் அடிப்படைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் முயற்சியின் நீட்சிதான் இந்நூல். **பூமியில் புளிக்காரம்** என்பது மிகவும் பொருத்தமான தலைப்பு.

இந்நூல் ஒரு முழுமையான ஈடுபாட்டு இறையியல். பொது நிலையினருக்கான அருள்வாழ்வு. "மகிழ்ச்சி என்பதே இறைவனின் சித்தம்: இம்மகிழ்ச்சியை எல்லா மனிதரும் அடைய வேண்டும் என்பதே அவர் விருப்பம்" என்ற விவிலிய மையச் சிந்தனையின் அடிப்படையில் ஒரு சமூக ஈடுபாட்டு இறையியலை தெளிவாக, கோர்வையாக, எளிதாக புரியும் விதத்தில் ஆசிரியர் படைத்துள்ளார். இதைத் திறந்த மனதுடன் வாசித்து, யோசிப்பவர் எவரும் சமூக மாற்றத்திற்காக தன் வாழ்க்கையை அற்பணிக்காமல் இருக்க முடியாது.

இந்நூலின் ஆசிரியர் பணி. கு. அமிர்தராஜ் தான் இறையரசு இயக்கத்தின் சிந்தனைக் கருவூலம். அவருடைய தெளிவான சிந்தனைகள், கொள்கைப்பிடிப்பு, அற்பணம் போன்றவை பல நல்ல பணியாளர்களையும், சமூக அற்பணமுள்ள பொதுநிலையினரையும் உருவாக்கியுள்ளது.

தூய சவேரியார் பொறியியல் கல்லூரியின் தாளாளரான பணி. கு. அமிர்தராஜ் 1968-ம் ஆண்டு கோட்டாறு மறைமாவட்ட குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பிரான்ஸ் நாட்டில் (Institute Catholique de Paris) இறையியலில் முதுகலைப்பட்டமும் (Master of Theology)மைசூர் பல்கலைக் கழகத்தில் அரசியலில் முதுகலைப் பட்டமும் (M.A. Political Science) பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவத் துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பெங்களூர் தேசிய நடுநிலையத்தில் (NBCLC) சுவாமி அமலோற்பவதாசுடன் 1975 முதல் 1981 வரை பணியாற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் கொணர்ந்த மறுமலர்ச்சியைத் தந்தை அமலோருடன் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் ஊன்றச் செய்தவர். வத்திக்கான் சங்கத்தின் புதிய பார்வையில் அருட்பணியையும், வழிபாட்டையும், திருச்சபை அமைப்புகளையும் சமுதாய மாற்றம் ஏற்படுத்தும் விதத்தில் சீரமைக்க பங்களவிலும், தமிழக அளவிலும், தேசிய அளவிலும் பல முயற்சிகளை மேற்கொண்டவர்.

காஞ்சாம்புரம், பாகோடு, ஆலஞ்சி கூட்டுப்பணிக்குழு போன்ற பங்குப் பணிகள் இதற்கு சில உதாரணங்கள். மேலும், இந்நோக்கத்திற்காகவே குமரி மாவட்டத்தில் இறையரசு இயக்கம் (IAI), தேசிய அளவில், அகில இந்திய கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம் (CRMI) மற்றும் அகில இந்திய கத்தோலிக்க குருக்கள் பேரவை (CPCI) போன்ற அமைப்புக்களை இணைந்து ஆரம்பித்து முழு வீச்சோடு செயல்படக் காரணமாயிருந்தவர். கருத்தரங்குகள், மறையுரைகள், வகுப்புகள் மூலம் தான் பெற்ற தெளிவை பிறரோடு பகிர்ந்து கொள்ளத் துடிப்பவர். ஆழமான கருத்துக்களை வித்தியாசமான கோணத்தில் எளிமையாகவும் அழுத்தமாகவும் எழுதவும், பேசவும் ஆற்றல் பெற்றவர்.

எளிமையான வாழ்க்கையும் உயர்வான சிந்தனையும் உடையவர். நீதிக்கான தாகம், அடிப்படை சமுதாய மாற்றம் இவற்றில் ஆழ்ந்த அற்பணம் உடையவர். தொலை நோக்குப் பார்வையோடு இறைவாக்குரைக்கத் தயங்காதவர். சமூக மாற்றத்திற்கான ஒரு கிரியா ஊக்கியாக - புளிக்காரமாக வாழ்ந்து மடிவதே தன் வாழ்க்கைக்கு அவர் கொடுத்திருக்கும் அர்த்தம்.

இவர் ஒரு மா மனிதர். இவரின் உண்மை ஆற்றலை இன்னும் பலர் சரியாக உணரவில்லை. இந்த மறைமாவட்டமும் உணரவில்லை. இவர் ஆற்றலைக் கண்டு பயப்படுகிறார்கள். எனவே ஒதுக்கவும் மூடி மறைக்கவும் பார்க்கிறார்கள். ஆனால் இனி இவர் தன் எழுத்துக்களால் இக்கல்லறைகளை உடைத்தெழுவார். தன்னை இவ்வுலகில் நிரந்தரப்படுத்திக் கொள்வார்.

இவர் என்னுடைய ஆசான் என்று கூறிக் கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறேன். இந்நூல் வெளிவருவதில் என்னுடைய சிறிய பங்களிப்பு இருக்கிறதென்றால் அது ஒரு சீடனின் நன்றிக்கடன்.

வின்சென்ட் பெ. வில்சன்
இயக்குநர்
களரி மக்கள் பண்பாட்டு மையம்

அணிந்துரை . . .

பணி. கு. அமிர் எழுதிய **'பூமியில் புளிக்காரம்'** என்ற இந்த புத்தகத்திற்கு அணிந்துரை எழுத எனக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை, வாழ்க்கையில் எனக்கு கிடைத்த ஒரு பெரும் பேறாகவே கருதுகிறேன். இயேசு தம் சீடர்களின் பாதம் கழுவியபோது பேதுருவிற்கு ஏற்பட்ட இன்ப அதிர்ச்சிதான் எனக்கும். 'நானா அணிந்துரை எழுதுவது? அழகுக்கு யாராவது அலங்காரம் செய்ய முடியுமா?' என்ற கேள்வி எழுந்த போதிலும், இறையரசு இயக்கப் பொதுச் செயலர் என்ற உறவிலே 'நான் எழுதாவிடில்'; 'உனக்கு என்னோடு பங்கில்லை' என்று சொல்லிவிடக் கூடாது என்ற மரியாதையின் நிமித்தம், என் உண்மையான உணர்வுகளை மட்டும் வார்த்தையாக்குகிறேன்.

புத்தகத்தை முதல் முறை படித்த போது, புத்தகத்தின் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு பக்கமாக விரிவுபடுத்தலாம்; ஒவ்வொரு வரியும் ஒரு அத்தியாயமாக விரிவுபடுத்தலாம்; ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு புத்தகமாக வெளியிடலாம் என்ற உணர்வுதான் என்னில் மேலோங்கி நின்றது. அவ்வளவு ஆழமான அர்த்தம் நிறைந்து தென்பட்டது. ஆழமான ஒரு மனிதரின் உள் ஆழத்திலிருந்து வெளி வந்திருக்கும் உண்மையான வார்த்தைகள்தான் இந்த **'பூமியில் புளிக்காரம்'**. என்பது மட்டும் எனக்கு வெளிச்சமானது. இறை நம்பிக்கையையும், சமூக கரிசனையையும் இணைந்து வாழ்விற்கு அர்த்தம் கற்பிக்கும் இவ்வரிய முயற்சி, சாதாரணமாக இறையியலாரும், சமூகவியலாரும் செய்யாத ஓர் புது முயற்சி என்றே சொல்லத் தோன்றுகிறது. புத்தகத்திற்கு அணிந்துரை எழுத வேண்டும் என்ற

அன்பு கட்டளை வந்தபோது, மீண்டும் ஒரு முறை புத்தகத்தைக் கவனமாகப் படிக்க வாய்ப்பு கிடைத்தது. 'அள்ள அள்ளக் குறையாத அமுதம் போல' என்னில் முதல் முறை வாசித்தபோது ஏற்பட்ட பிரமிப்பு இன்னும் சற்று அதிகமானதாக உணர்கிறேன். நான் கொண்டிருக்கும் இறை நம்பிக்கையை இன்னும் உறுதிப்படுத்தும் ஓர் ஊன்றுகோலாக இப்புத்தகம் எனக்குத் தென்படுகிறது. சமய தளத்தில் இருந்து கொண்டே அர்த்தமுள்ள சமூகப் பணிகள் செய்ய முடியும் என்ற நம்பிக்கை என்னில் மேலோங்குவதை உணர்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இப்புத்தகம் தரும் வெளிச்சத்தில், 'என் வாழ்வே'- 'எனக்கு அர்த்தமுள்ளதாக'- நான் கண்டு கொள்வது போல உணர்கிறேன்

விஞ்ஞானப் பார்வையோடு வாழ்வை எதிர்கொள்ள விழையும் எல்லா நல்லுள்ளம் கொண்ட மனிதர்களும், விசுவாசத்தில் உறுதிபடவும், இறைநம்பிக்கையில் வளரவும், சமூக ஈடுபாட்டில் வாழ்வின் அர்த்தத்தையும், ஆன்ம திருப்தியையும் கண்டு கொள்ள இப்புத்தகம் நிச்சயம் உதவும் என நான் தீர்க்கமாக நம்புகிறேன். "பூமியில் புளிக்காரம்"- தன்னையே புளிக்காரமாக மாற்றிக் கொண்ட பணி. கு. அமிரின் 'வாழ்க்கை மேல்வரிச் சட்டம்'; இறையரசு இயக்கத்தின் கொள்கைப் பிரகடனம். இப்புத்தகப் படைப்பால் இறைவன் மகிமை பெறட்டும் . . . இம்மண்ணும் மக்களும் வாழ்வு பெறட்டும் . . . அதுவும் நிறைவாக பெறட்டும் . . . பணி. கு. அமிரின் எழுத்துப் பயணம் தொடரட்டும்.

என்றும் தோழமையுடன்,

பணி. க. ஜார்ஜ்

இறையரசு இயக்கப் பொதுச் செயலர்

என்னுரை . . .

இந்த ஏட்டிற்கு ஒரு வரலாறு உண்டு. நாற்காலியில் அமர்ந்து புத்தகம் ஒன்று தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு, கருத்துக்களைச் சேகரித்து தயாரிக்கப்பட்ட ஏடு அல்ல இது.

சமயதளத்தில் நின்று, சமூக ஈடுபாடு கொண்டு சமயத்தையும் சமூகத்தையும் சீராக்க வேண்டும் என்ற இலட்சியம் கொண்ட இறையரசு இயக்க உறுப்பினர்களின் முயற்சி இது.

இயக்கத்தில் புதிதாகச் சேர்கிற உறுப்பினர்களுக்கு இயக்கத்தை அறிமுகப்படுத்தவும், இயக்கத்தில் இருப்பவர்களின் ஈடுபாட்டை ஆழப்படுத்தவும், பயிற்சி தேவை என்று உணரப்பட்ட போது அதற்கான பாடக் குறிப்புகளை தயாரிக்கும் முயற்சியின் விளைவு இது.

இயக்க உறுப்பினர்கள் வில்சன், பெர்ட்டி, ஸ்டெல்லா, லூயிஸ், யூஜின், அமலி ஆகியோர் ஒன்று சேர்ந்து சிறிது சமயம் செலவிட வாய்ப்பு கிடைக்கும் போது எனது மனதிலுள்ளச் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். 1996-ம் ஆண்டில், சுங்கான்கடை திருமலை ஆசிரமத்தில் கூடிவந்த வேளையில் எனது கருத்துக்களை உரையாடல் மொழியில் சொன்னேன். அது ஒலிப்பதிவு செய்யப்பட்டது. குறிப்புகளும் எடுக்கப்பட்டன.

அருட்பணி. வில்சன் அவர்களின் பொறுப்பில் களரி பண்பாட்டு மையப் பணியாளர்கள் ஒலிப்பதிவு செய்ததை கையெழுத்துப் படிவமாக்கினார்கள்.

அப்பொழுதே வில்சன் சொன்னார், புத்தகமாக வெளியிடுவோமென்று. நான் உற்சாகமின்றி இருந்தேன். வேலைப்பளு ஒரு காரணமும் கூட. பேச்சு வடிவில் இருப்பதை கட்டுரை வடிவாக்குவதின் சிரமத்தை மேற்கொள்ளும் அளவுக்கு உந்துதல் கிடைக்கவில்லை. பயனுள்ளதாக இருக்குமா? என்ற கேள்வி இருந்து கொண்டேயிருந்தது.

இருப்பினும் வில்சன் வற்புறுத்திக் கொண்டேயிருந்தார். அதோடு ஓரிருவர் கூடச் சேர்ந்து கொண்டனர். இறையரசு இயக்கத்தின் பணிகளில் முக்கியமான கருத்துருவாக்கம், கருத்துப் பரவலாக்கம் என்பது மாதப் பத்திரிகையோடு புத்தகங்கள் வழியும் நடைபெற வேண்டும் என்று தெளிவான போது தேவையான உற்சாகம் ஏற்பட்டது.

வெளியீட்டுப் பணிகளை வில்சன் அடிகளாரும், அவரது பணியாளர்களும் பொறுப்புடன் செய்தனர். இராபர்ட், திரு.வி.எம்.ஏ. தாஸ், திருமதி. ஆக்னஸ் குளோறி, வில்சன் ஆகியோர் முதல் வரைவை வாசித்து உருப்படியான பல கருத்துக்களைத் தந்தனர். பூமியில் புளிக்காரம் உங்கள் கையில் தவழ்கிறது.

இறையரசு இயக்கம் உருவாகி கால் நூற்றாண்டு ஆகப்போகிறது. கடந்த 23 ஆண்டுகளில் எவ்வளவோ நடந்திருக்கின்றன. எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்கள்? (மத் 21:23) என்று வெளிப்படையாகவும் மறை முகமாகவும் இறையரசு இயக்க உறுப்பினர்களைப் பலரும் கேட்டிருப்பார்கள். ஒவ்வொரு செயல்பாட்டிற்குப் பின்னும் ஒரு புரிதலும் நம்பிக்கையும் உண்டு. இறைமையும் உண்மையும் தரும் வலிமையே இறையரசு இயக்கத்தின் ஆற்றலாக இருக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். இறைமையும் உண்மையும் சமூகமாகவே உரசிப் பார்க்க வேண்டியவை. அதனாலேயே 'எந்த அதிகாரத்தால்' நாங்கள் செயல்படுகிறோம் என்பதை மனித, கிறிஸ்தவ சமூகங்கள் முன் வைத்திருக்கிறோம். கருத்துப் பரிமாற்றத்தை வரவேற்கிறோம்.

கிறிஸ்தவ சமய தளத்திலே ஈடுபாடு கொண்டிருக்கிறவர்களை சமூக ஈடுபாடு கொள்ள உற்சாகமூட்டும் வகையிலும் அவர்கள் கிறிஸ்தவ நெறியைப் புரிந்து கொள்ளும் வகையிலும் கருத்துக்கள் முன் வைக்கப் பட்டுள்ளன.

சமூக ஈடுபாடு கொண்டிருக்கிற கிறிஸ்தவர்கள் இறைநம்பிக்கையும் மதங்களும் முழுமையாகப் பிற்போக்குத்

தனமானவை என்று கருதி இறையியல், அருள்வாழ்வு ஆகியவற்றின் வளங்களைப் பெறாமல் ஈடுபாட்டில் ஊனமுற்றுவிடக் கூடாது என்பதும் இவ்வேட்டின் நோக்கமாகும்.

தனியாக வாசிப்பது மட்டுமல்ல, குழுவாகச் சிந்திப்பதற்கும் உதவியாக ஆய்வுக் கேள்விகள் தரப்பட்டுள்ளன.

நேர்மையான, நல்லெண்ணம் கொண்ட சமய நெறியாளர்களுக்கும் சமூக ஈடுபாடு என்பது எளிதாக வரவேண்டுமென்றில்லை. ஈடுபாடுகளின்றியே இறைவனோடு நேர்முகமாக ஒன்றித்து வாழ்க்கையின் இலக்கை அடைந்து விடலாம் என்று அவர்கள் நினைப்பதே இதற்குக் காரணம்.

ஈடுபாடு என்பது சிரமமானது. தன்னை விட்டுச் சென்று, தன்னைக் கடந்து நின்று, இன்னொன்றில் ஆர்வம் காட்டிச் செயல்படுவதை நமது ஊன் மிக எளிதாக ஏற்றுக் கொள்வதில்லை.

சமூக ஈடுபாடு என்பது அதைவிடச் சிரமமானது. பொது மக்களின் பார்வைக்குத் தன்னை இலக்காக்கி, விமர்சனங்கள் செய்ய உரிமை கொடுத்து, பலவற்றையும் இழக்க வாய்ப்பாகும் சமூகப் பணியை நமது பாதுகாப்புணர்வு எளிதாக ஏற்றுக் கொள்வதில்லை. அதிலும் மோத வேண்டியிருக்கும், காயப்படவும் சந்தர்ப்பம் வரலாம் என்பதெல்லாம் நம்மை அச்சப்படுத்துபவை.

இந்த நிலையிலே நமது இலக்கோடு சமூக ஈடுபாடு இன்றியமையாமல் இணைந்திருப்பதையும் மதச் செயல்பாடுகள் சமூக ஈடுபாடின்றி சாரமிழந்து விடும் என்பதையும் புரிந்து அதனடிப்படையில் பெறும் உந்துதலிலேயே சமூக ஈடுபாடு நமக்குக் கைவர வாய்ப்புள்ளது.

இந்த ஏடு இதில் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

இந்த ஏடு வெளிவருவதற்கு முக்கிய காரணமான வில்சன் அடிகளாருக்கும் இறையரசு இயக்க உறுப்பினர்கள் நிர்வாகிகளுக்கும் இதயம் நிறைந்த நன்றி.

இறையாட்சி இம்மண்ணில் மலரட்டும்.

கு. அமிர்தராஜ்

1

மனித வாழ்வின் அர்த்தம்

பொதுவாக நம்மில் பலர் வாழ்வைப் பற்றியும், அதன் நோக்கத்தைப் பற்றியும் சிந்திப்பது இல்லை. பந்தைகளைப் போன்று நாம் நடத்திச் செல்லப்படுகிறோம்.

[illegible]

திருடர்கள் வண்டியிலுள்ளவர்களைக் கொள்ளையடித்துக் கொல்வார்களாம்.

இதைப் போல மந்தைத்தனமே நம் வாழ்வில் மேலோங்கி நிற்கிறது. நம் முன்னே செல்பவர்கள், நம்மோடு இருப்பவர்கள் நமது வாழ்க்கைப் பாதையை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம் வாழ்வின் நாயகர்கள் நாமாக இருப்பதற்குப் பதிலாக இந்த சமுதாயம், இதன் அமைப்புகள் நம் வாழ்வின் போக்கை நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றன. மனித வாழ்வின் அர்த்தம், குறிக்கோள் என்ற சிந்தனைக்கே இங்கு இடமில்லை.

நாம் வாழ்கின்ற சமுதாயத்திலே நம்மைப்பற்றிய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. நன்றாகப் பணம் சேர்க்கத் தெரிந்தவரை மக்கள் பாராட்டுகின்றனர். அவரால் பலதும் சாதிக்க முடிகின்றது. நிறைய லஞ்சம் வாங்கும் வாய்ப்பு உள்ள வேலைக்கு போட்டா போட்டி. அப்படிப்பட்ட வேலை கிடைத்துவிட்டவருக்கு சமூகத்திலே நல்ல அங்கீகாரம். அவரை வரன் கேட்டு வரிசையில் நிற்கின்றார்கள்.

நன்கு படித்து நல்ல மதிப்பெண் எடுத்த மாணவருக்கும் காப்பியடித்து முதலிடத்தைப் பிடித்தவனுக்கும் எந்த வித்தியாசமும் பாராட்டுவதில்லை இன்றைய சமுதாயம். படிக்காமல் மதிப்பெண் பெற்றுவிட்டவனை புத்திசாலி என்றுகூட மாணவ சமுதாயம் நினைக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலே எது சரியானது? எது தவறானது? எது நல்லது? எது தீயது? என்று பிரித்துப் பார்க்க முடியாத குழப்பம்.

அப்படிப் பகுத்துப் பார்த்து விட்டாலும் பலரும் வித்தியாசமாக வாழ்கிறபோது சரியான பாதையிலே செல்வதில் பெரும் சிரமங்கள்.

இப்படியாகப் பலரும், தம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் என்ன நினைக்கிறார்களோ, எப்படிச் செயல்படுகிறார்களோ அதைப் பின்பற்றியே மந்தைத் தனத்தோடு வாழ்ந்து வருகிறோம். இந்நிலையிலே கேள்வி ஒன்று எழுகிறது.

அர்த்தம் தரும்
இறைநம்பிக்கை

உண்மையிலேயே இவ்வுலக வாழ்விற்கு அர்த்தம் உள்ளதா?

இறைநம்பிக்கை உடையவர்கள், அன்பும் அறிவுமுள்ள ஆற்றலை இறைவனாக நம்புகிறவர்கள், இவ்வுலகத்திற்கு அர்த்தம் உண்டு என்று பறைசாற்றுகிறார்கள்; நம்பிக்கையாக அறிக்கை இடுகிறார்கள். **இறைநம்பிக்கை உடையவர்கள் வாழ்க்கைக்கு அர்த்தமுண்டு என்று நம்புகிறவர்கள்.**

மந்தைத்தனத்தோடு வாழ்பவர்களுக்கு இந்தக் கேள்வியே எழுவதில்லை. கேள்வியெல்லாம் கேட்டு மனதைக் குழப்புவதற்குப் பதிலாக பலரும் வாழ்வதுபோலவே வாழ்ந்துவிட்டுப் போய்விடுவோம் என்று நினைக்கின்ற பலரும் உள்ளனர்.

வேறுசிலர், இந்த உலக இயக்கம் தற்செயலாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கலாம். இதற்குப் போய் அர்த்தம் தேடுவது அபத்தம் என்றும் கருதலாம்.

மாறாக இறை நம்பிக்கை கொள்கிறவர்கள், கடவுள் என்ற சக்தி ஒன்று உண்டு, அது இந்த உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது என்று நம்புகிறார்கள். இறைவன் அறிவுடையவர், அறிவுடமையுடனேயே அவர் அனைத்தையும் செய்கிறார் என்று நம்புகிறார்கள்.

இப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டவர்கள் உலகமானது இந்த இறைவனாலேயே உருவாக்கப்பட்டது என்று நம்புகின்றனர். இறைவன் அறிவுடையவர் என்று கருதுவதால் இந்த உலகமும் அறிவுடைமையுடனேயே உருவாக்கப்பட்டது; ஒரு நோக்கத்துடனேயே இவ்வுலக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது; எனவே இவ்வுலகிற்கு அர்த்தம் உண்டு என்று நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கையானது வாழ்க்கையிலும் வாழ்க்கை நிகழ்வுகளிலும் அர்த்தத்தைத் தேடும் மனப்பக்குவத்தைத் தருகிறது.

இறை மறுப்பும் அர்த்தம் தேடுதலும்

இறைவனை நம்புவதில்லை என்று சொல்கின்ற அனைவரும் வாழ்க்கை அர்த்தமில்லாதது என்று கருதுகிறார்கள் என்று சொல்ல முடியாது. கம்யூனிஸ்டுகளில் சிலர் தாங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று சொன்னாலும் வாழ்க்கைக்கு அர்த்தமுண்டு என்பதிலே உறுதியாய் இருந்து வாழ்க்கை நிலையைச் சீராக்குவதற்கு பல பெரும் தியாகங்களைச் செய்ய முன்வருகிறார்கள்.

இவர்களில் பலர், இவ்வுலகிற்கு அர்த்தம் உண்டு என்பது நம்பிக்கை தானேயன்றி அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கக்கூடிய ஒன்று அல்ல என்பதைப் புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இவ்வுலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வளர்ச்சி இவ்வுலகம் இலக்கை நோக்கி அர்த்தத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தினாலும் இவ்வுலகில் ஏற்படும் இயற்கையின் அழிவு, மனிதன் ஏற்படுத்தும் சுற்றுப்புறச் சூழல்களின் சீர்கேடு, போர்கள் இவையெல்லாம் உலக வாழ்வு அழிவை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது என்ற உணர்வையே தருகிறது.

இந்நிலையில் உலகின் தொடக்கத்தைப் பற்றியோ, இறுதியைப் பற்றியோ அறிவியல் அடிப்படையில் எதனையும் அறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் உலக இயக்கத்திற்கு அர்த்தம் உண்டு என்று கருதுவதே நல்லது செய்வதற்கு நமக்கு உந்துதலைத் தரவல்லது என்ற புரிதலில் இவ்வுலகிற்கு அர்த்தம் உண்டு என்று நம்பிச் செயல்படுகிறோம். இவ்வுலகிற்கு அர்த்தம் உண்டு என்ற உறுதிப்பாடு நம்பிக்கையினால் மட்டுமே நிகழவல்லது.

வாழ்க்கையின் அர்த்தம் என்ற உறுதிப்பாடு நம்பிக்கையினால் ஏற்படுவது என்று புரிந்திருப்பவர்கள் சிலரும் கடவுள் நம்பிக்கை கொள்ளாமலிருப்பதற்குக் காரணம் கடவுள் நம்பிக்கையைப் பலரும் மூடநம்பிக்கையாகவும் அநீதியின் கருவியாகவும் பயன்படுத்துவதனாலேயாகும். கடவுளை நாங்கள் நம்ப விரும்பவில்லை; ஆனால் இவ்வுலகிற்கு அர்த்தமுண்டு என்று நாங்கள் நம்புகிறோம் என்பதே அவர்கள் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் இறைவனை நம்புகிறவர்கள் வாழ்க்கைக்கு அர்த்தமுண்டு என்று ஏற்றுக்கொள்வதால் வாழ்வின் உட்பொருளைத் தேட வேண்டும். அது அவர்களுக்கு பயனுள்ள, அர்த்தமுள்ள வாழ்வு வாழ உறுதுணையாக இருக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் வாழ்வைக் கடவுள் நமக்குத் தந்திருக்கிற கொடையாகப் பார்க்கிறோம். வாழ்வு என்பது ஏதோ தற்செயலாக நிகழ்வதல்ல. அது நமக்கு ஒரு திட்டத்தின் அடிப்படையில் தரப்பட்டிருக்கிறது. ஒரு நோக்கத்தோடு, ஒரு குறிக்கோளை முன் வைத்து இவ்வுலக வாழ்வு நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது நமது நம்பிக்கை. அந்தக் குறிக்கோளும் நோக்கமும் என்ன? வாழ்வின் உட்பொருள் யாது?

இதற்குரிய பதில் விவிலியத்திலே சுருக்கமாக, அழகாகத் தரப்பட்டுள்ளது.

வாழ்வும் செலவும்

செலவிடப்படுவதற்காகவே வாழ்வு நமக்குத் தரப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பதற்காக அல்ல, வாழ்வு செலவிட்டுச் சிதைப்பதற்காகவே நமக்குத் தரப்பட்டிருக்கிறது.

இயேசு, வாழ்வை கோதுமை மணியோடு ஒப்பிட்டுச் சொல்கிறார். கோதுமை மணியின் நோக்கம் என்ன? அது கோதுமையாகவே உருக்குலையாமல், உருச்சிதையாமல் அப்படியே இருப்பது அல்ல.

> "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்".
>
> யோவான் 12:24,25

மாறாக கோதுமை மணி மண்ணில் விதைக்கப்பட வேண்டும். மண்ணில் விழுந்து சேற்றில் கலக்க வேண்டும்.. தோல் கழன்று உருமாற்றம் பெற்று புதிய பயிராக வளர வேண்டும். அப்போது தான் அது பல கோதுமை மணிகளைக் கொடுக்க முடியும். இவ்வாறு கோதுமை செலவிடப் படவேண்டும். இது இயேசு சொன்னது.

விதைக்கப்படாத கோதுமை மணி மாவாக அரைக்கப் பட வேண்டும். உணவாக பதப்படுத்தப்பட்டு உரு இழக்க வேண்டும்.

வயிற்றிலே சென்று இன்னும் உருக்குலைந்து, தனது சத்தை இரத்தத்தோடு பங்கிட்டு விலங்கு உயிருக்கோ, மனித உயிருக்கோ வளர்ச்சியின் காரணமாக வேண்டும். கோதுமையின் தாவரத்தன்மை விலங்கு உயிராகவோ மனித உயிராகவோ உயர வேண்டுமென்றால் அது செலவிடப் பட வேண்டும்.

இதனை இன்னொன்றோடும் தொடர்புபடுத்திச் சொல்லலாம். கற்பூரம், மெழுகுதிரி, விளக்குத்திரி ஆகியவற்றை எடுத்துக் கொள்வோம். இவையெல்லாமே தம்மைச் சிதைக்கின்றன, அழிக்கின்றன. கற்பூரம் தன்னை ஒன்றுமில்லாமலே ஆக்கிவிடுகிறது. மெழுகு, திரி ஆகியவற்றில் சிறிது மிஞ்சலாம். இப்படித் தம்மை அழித்து இவை உலகிற்கு ஒளியைத் தருகின்றன. இதுதான் இவற்றின் நோக்கம்; இவற்றின் இயல்பு.

இயற்கையின் இயக்கம் எல்லாமே இப்படித்தான், இது தான் வாழ்வின் அடிப்படைத் தத்துவம். செலவிடப் படுவதே வாழ்வின் நோக்கம்.

வாழ்வின் நோக்கத்தை அடைவதற்கு மனித உயிர் செலவிடப்பட வேண்டும் என்று சொல்வதோடு இயேசு நின்று விடவில்லை. இவ்வாறு செலவிடப்படாத உயிர் சீர்கெட்டுப் போகிறது என்றும் சொல்லியிருக்கிறார்.

> "தம் உயிரைக் காக்க வழி தேடுவோர் அதை இழந்து விடுவர்; தம் உயிரை இழப்பவரோ அதைக் காத்துக்கொள்வர்."
> லூக்கா 17:33

உயிரைச் செலவிடாமல் பாதுகாக்க விரும்புகிறவர்கள் உயிருக்குத் துரோகம் செய்கிறார்களாம். உயிரை இழந்து விடுவார்களாம். பயன்படுத்தப்படாத இரும்பு துருப்பிடித்துப் போவது போல, பயன்படுத்தப்படாத பாட்டரி வீரியம் குன்றிப் போவது போல, மனித வாழ்வும் பயன்படுத்தப்படாவிட்டால் அது பயனுள்ள வாழ்வு என்று கருதமுடியாது என்கிறார் இயேசு.

செலவிடுதலும் மறுவாழ்வும்

உடல் உழைப்பின் மூலமாகவே வாழ்வானது செலவிடப்படுகிறது. உடல் உழைப்பினைச் செலவிடும் மனிதரும் பயனடைகிறார். மனித இனமும் பயனடைகிறது.

உழைப்பினால் மனிதர் நல்ல ஆரோக்கியமான வாழ்க்கை நிலை அடைகின்றார். மருத்துவர்கள் சீரான உடற்பயிற்சியை காரணத்தோடு தான் பரிந்துரை செய்கிறார்கள். நல்ல உடல் உழைப்பு நோயற்ற வாழ்வுக்கு வழியாகும். நோயற்ற நல்வாழ்வைப் பெற உடலுழைப்பில் வாழ்வைச் செலவிடுவது தவிர வேறு வழியில்லை.

மனித உழைப்பானது மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமாகிறது. இயற்கையின் சக்திகளை நமக்கு சாதகமாக்கிக் கொண்டு நமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்றால் உடல் உழைப்பு அவசியம். இயற்கை இலவசமாக வழங்கும் காய் கனிகளைப் பறித்து உண்ணவும், விவசாயம் செய்து அவற்றை உற்பத்தி செய்யவும் உழைப்பு பயன்படுகிறது. வாழ்வைச் செலவிடாமல் சோம்பியிருப்பவர்கள் வாழ்வை வளர்த்துக் கொள்ள முடியாதவர்.

உழைப்பு உடலுக்கும் மனதிற்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. உழைத்துப் பசியோடு உண்ணும் உணவிற்குத் தனி ருசியே இருக்கிறது. மனதிலிருக்கின்ற பாரங்கள் உழைக்கும் போது சிறிதாவது கரைந்து குறைய வாய்ப்பு உண்டு. தான் உருவாக்கிய, உற்பத்தி செய்த ஒன்றை பயன்படுத்தும்போது அதில் தனி ஒரு சுகம் இருக்கிறதல்லவா?

இதனால் சில மனநோய்களுக்கும் கூட உடல் உழைப்பு மருந்தாக அமைகிறது. இறுகியிருக்கும் மனம் உடல் உழைப்பால் இளக முடியும்.

உடல் உழைப்பைப் போலவே மூளை வேலையும், புத்தியினாலான உழைப்பும் மனிதனுக்கு நல்ல நிறைவைத் தருகின்றன. இயற்கையின் ஆற்றல்களைக் கண்டுபிடித்து அவற்றை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்திப் புதியன பல உருவாக்குவதில் மனித மனம் அலாதியான ஒரு பேரானந்தத்தைப் பெறுகிறது.

[illegible]

[illegible]

[illegible]

சக்கரத்தைக் கண்டுபிடித்தது அது பயன்படுத்தப்பட்டது என்பது மனித நாகரீகத்திலே மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. சக்கரத்தைக் கண்டுபிடித்த மனிதனைப் பற்றி நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவன் இன்றும், அவன் கண்டுபிடித்த உருளை என்ற தத்துவத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த நிரந்தரப்படுத்தப் பட்டிருக்கின்றான்.

தம் குழந்தைகள் வழியாக, குழந்தைகளின் குழந்தைகள் வழியாக, நம் மூதாதையர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இறந்து பட்டிருக்கலாம். ஆனால் வாரிசுகளிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது குறிப்பிட்ட கோதுமை மணி உலகையிலே விளைந்து வரும் கோதுமைப் பயிரிலும் அதிலிருந்து வரும் பல புதிய மணிகளிலும் உருக்குலைந்து அழிந்து விட்ட கோதுமை மணி நிலைத்து விட்டது. நிரந்தரமாகி விட்டது. அதற்குத் தான் என்ன விலை கொடுத்திருக்கிறது? எவ்வளவு செலவு செய்திருக்கிறது? தன்னையே அல்லவா அது கையளித்திருக்கிறது!

வாழ்வின் அர்த்தம் செலவிடப்படுவது. அதிலே வாழ்வு நிரந்தரப்படுத்தப்படுகிறது.

தீமையும் நிரந்தரமாகும்

பூமியில் புளிக்காரம்

வாழ்வின் நிலையானது என்பது நல்லவர்களுக்கு மட்டுமல்ல தீயவர்களுக்கும் பொருந்துமே

அவர்களுக்கும் நிலைவாழ்வு கிடைக்கிறதல்லவா? என்று சிந்திக்கலாம்.

உழைக்கிறவர்கள் எல்லாருமே வாழ்வில் முத்திரை பதிக்கிறார்கள். நல்லதற்காக உழைக்கிறவர்களின் நன்மை நிலைபெறுகிறது. அந்த நன்மையை அவர்கள் நல்ல கனிகளாக முதுமைப் பருவத்திலும் அவர்களுக்குப் பின் மக்கள் சமுதாயமும் அனுபவிக்கிறது. அவர்களது நினைவு நல்ல உணர்வுகளாலும் வாழ்த்துதல்களாலும் நிரம்பியிருக்கிறது.

அதுபோலவே தீமை செய்கிறவர்களின் கெடுதலும் தீங்கும் நிரந்தரமாகின்றன. அவர்கள் வாழ்விலும் அதனை அனுபவிப்பார்கள். அவர்களுக்குப் பிறகு சமுதாயமும் அந்தத் தீமையினால் பாதிப்படைந்து கொண்டேதான் இருக்கும். அதைச் சரி செய்வது வரையிலும் பாதிப்பு தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். இந்தத் தீமையை அனுபவிக்கும் சமுதாயம் அதற்குக் காரணமான வரை தூற்றிக் கொண்டேயிருக்கும். மக்கள் மத்தியிலே அவர் சபிக்கப்பட்டவராகவே இருப்பார்.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

1. நமது வாழ்வின் திசையை, அர்த்தத்தைப் பிற மனிதர்களும் சமுதாயமும் நிர்ணயிக்கின்றனர் என்பது உண்மைதானா? எப்படி?
2. இவ்வுலக வாழ்விற்கு அர்த்தம் உண்டு என்று அறிவியல் அடிப்படையில் நிரூபிக்க முடியுமா?
3. இறை நம்பிக்கை உடையவர்கள் எல்லோருமே வாழ்வு அர்த்தமுள்ளது என்று ஏற்றுக் கொள்கிறார்களா? ஏன்?
4. வாழ்வின் அர்த்தம் என்று இயேசு கூறுவது பற்றி உங்கள் கருத்து என்ன?
5. செலவிடப்படும் வாழ்வானது நல்ல மறு வாழ்வையும் நிலைவாழ்வையும் தருகிறது என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா? ஏன்?

2

இறைத்திட்டம்

வாழ்வின் அர்த்தத்திற்கும் இறைத் திட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஒரு காரியம் சரியாக செய்யப்பட வேண்டுமென்றால் அதைத் திட்டமிட்டவரின் நோக்கம், குறிக்கோள் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும். இதுதான் அதன் அர்த்தம் என்கிறோம்.

ஒரு கருவியை எடுத்துக் கொள்வோம். அது எப்படி செயல்பட வேண்டும் என்று அதனை உருவாக்கிய நபர், அதன் பொறியியலாளர் தான் முடிவு செய்கின்றார். எனவே அதனை எவ்வாறு இயக்க வேண்டும், அதனுடைய அர்த்தம் என்ன என்பதனை அவரே தான் எடுத்துச் சொல்ல முடியும்.

இது போல, இந்த உலகத்தை இறைவன் படைத்தார் என்று நாம் நம்புகிறோம் என்றால் இந்த உலகின் அர்த்தம், மனித வாழ்வினுடைய அர்த்தம் ஆகியவற்றை இறைவனிடம் இருந்து தான் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இறைவன் இயேசு வாழ்வுக்குக் கொடுத்த அர்த்தத்தைப் பற்றி கடந்த பிரிவில் பார்த்தோம்.

வாழ்வுவெளிப்படுவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால் எதற்காக? எதனை உருவாக்குவதற்காக? வாழ்வை கொண்ட வேண்டும் என்பது இயல்பாக எழும் கேள்வியாகும்.

இவ்வுலகிலே வாழ்விலே என்ன நிகழ வேண்டுமென்று இறைவன் திட்டமிட்டிருக்கிறார். இவ்வுலக இயக்கத்திற்கு இறைவன் வகுத்துள்ள திட்டம் என்ன என்பதைக் கண்டுணர்வது அவசியம்.

இறைத்திட்டம் பற்றிய தவறான சிந்தனைகள்

இறைவனுடைய திட்டத்தைப் பற்றி இரண்டு முக்கியமான தவறான சிந்தனைகள் உள்ளன.

முதலாவது, சிற்றின்பத்தைப் பற்றியது. முன்பு எல்லாம் அருள் வாழ்வு, ஞான வாழ்வு, ஆன்மீக வாழ்வு பற்றிப் பேசும் போது சிற்றின்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. சிற்றின்பம் என்பது இறைவனின் திட்டத்திற்கு எதிரானது என்ற எண்ணம்.

இனிப்பு சாப்பிடும் போது சுவையாக இருக்கிறது. பசியாக இருக்கும் போது உணவு உண்டால் நிறைவாக இருக்கிறது. அழகான காட்சிகளைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்பு செய்யும் நபர்களோடு பழகும் போது திருப்தியாக இருக்கிறது. இந்த இன்பங்கள் எல்லாம் சிற்றின்பங்கள் என்று கருதப் பட்டன. இவை குறைபட்டவை. இறைத்திட்டத்திற்கு எதிரானவை என்று கருதப்பட்டது. இவற்றை விட, இன்பத்தை மறுப்பது, அன்பு செய்யத் தோன்றும் எண்ணத்தை அடக்கிக் கொள்வது, சாப்பிடத் தோன்றும் போது சாப்பிடாமல் இருப்பது, உபவாசம் இருப்பது போன்றவை உயர்வாகக் கருதப் பட்டன. இன்பங்களைத் தவிர்ப்பது தன்னிலையே நல்லது என்றும் துன்பங்கள், வேதனைகள், சிறந்தவை, உயர்ந்தவை என்றும் கருதப்பட்டது. எங்கு இன்பம் உள்ளதோ அங்கே குறைபாடு உள்ளது. எங்கு துன்பம் உள்ளதோ அங்கே நன்மை உள்ளது. எனவே மனிதர் துன்பப்படுவது தான் கடவுளுடைய விருப்பம். இது தான் இறைவனின் சித்தம் என்று பரவலாகத் தவறாகக் கருதப் பட்டது.

பழைய சின்னக் குறிப்பிடத்தில் கடவுள் மனிதனை எதற்காகப் படைத்தார்? என்ற கேள்வியைக் கேட்டு விட்டு அதற்கு பதில், "தம்மை அறிந்து, சிநேகித்து, சேவித்து, அதனால் மோட்சமடைவது" என்று இருந்தது. இதுவே கடவுளுடைய திட்டம் என்று புரிந்து கொள்ளப்பட்டது.

இதில் மூன்று காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றும் கடவுளை மையமாகக் கொண்டவை. முதலில் கடவுளை அறிய வேண்டுமாம். கடவுளை அறிய மறைக்கல்வி கற்க வேண்டும், மறையுரை கேட்க வேண்டும். இரண்டுமே சாதாரணமாக ஆர்வத்தைத் தூண்டுபவை அல்ல.

இரண்டாவது அவரை "சிநேகிக்க" வேண்டும். இயல்பாகக் கடவுளை அன்பு செய்யத் தோன்றாது. இருந்தாலும் நற்கருணை முன் அமர்ந்து அவரை அன்பு செய்ய வேண்டும். எப்படியாவது அவர்பால் ஒரு ஈடுப்பாட்டை ஏற்படுத்தி, "என் உள்ளத்தில் வாரும் ஆண்டவரே, நான் உமக்காக ஏங்குகிறேன்" என்றெல்லாம் பாடி செயற்கையாக ஏக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். திருப்பலி போன்றவற்றிற்கு செல்ல வேண்டும் என்று ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் கடவுள் மீது அன்பை வலிந்து உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது கடவுளுக்கு சேவை புரிய வேண்டும். கடவுள் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படும் பக்திச் செயல்களை அவை நமக்குப் பொருத்தமானவையல்ல என்று தோன்றினாலும் அவற்றையெல்லாம் செய்ய வேண்டும். மதப்பணிகள் ஆற்ற வேண்டும். நேர்ச்சைகள் நேர்ந்து, நோன்புகள் இருந்து அவருக்குச் சேவை செய்ய வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்ததற்காக, கடவுள் நமக்கு மோட்சம் என்ற வெகுமதியை நாம் இறந்த பிறகு தருவார். கடவுளின் திட்டம் இது தான். இறைத்திட்டத்தைப் பற்றி இது இரண்டாவது தவறான சிந்தனையாகும்.

கடவுளை அறிவதற்கும் அன்பு செய்வதற்கும் அவருக்கு சேவை செய்யவும் ஆட்கள் தேவை என்பது போலவும் இதற்காகவே இறைவன் மனிதர்களைப் படைத்தார் என்றும் இந்தப் புரிதல் அமைகிறது. மனிதர்களுக்காக மனிதர்களைக் கடவுள் படைக்கவில்லை என்பது போலவும், தனக்காகவே, தன் சுய நலத்திற்காகவே கடவுள்

மனிதர்களைப்படைத்தார் என்னும் உணர்வை தருகிறது. அவர் விரும்பும் காணிக்கைகளைக் கொடுப்பது பலிகள் செலுத்துவது நிறைய வேதனைப்பட்டு அவரிடம் ஜெபிப்பது போன்றவற்றையெல்லாம் செய்யும் போது ஆண்டவர் வெகுமதியாக இந்த உலகத்தில் அல்லது உலகத்தில் அவர் நமக்கு நன்மைகளைச் செய்வார், பேரின்பத்தை அருளுவார். அது தான் மோட்சம் என்பது போன்று இந்தச் சிந்தனைப்போக்கு அமைகிறது.

ஆனால் நாம் விவிலியத்தைப் புரட்டிப் பார்க்கும் போதும், அதிலுள்ள உண்மையான தத்துவங்களை உணரும் போதும் இந்தப் புரிதல் முற்றிலும் தவறானது என்பதைக் காண முடியும்.

உண்மையான இறைத்திட்டம் என்ன?

தொடக்கநூலில் கடவுள் மனிதர்களை படைக்க நினைக்கும் போது, தனக்கு ஏதாவது தேவை என்று நினைத்ததாகவோ, தனக்குச் சேவை செய்யமனிதர்கள் அவசியம் என்று கருதியதாகவோ, எந்தக் குறிப்பும் இல்லை.

"அப்போது கடவுள்,
'மனிதரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்.
அவர்கள் கடல் மீன்களையும்,
வானத்துப் பறவைகளையும்,
கால்நடைகளையும்,
மண்ணுலகு முழுவதையும்,
நிலத்தில் ஊர்வன
யாவற்றையும் ஆளட்டும்'
என்றார்" (தொநூ 1:26)

இந்த அழகிய உலகத்தை ஆண்டு அனுபவிப்பதற்காக மனிதர்களைப் படைத்தது போலவே உணர்வு ஏற்படுகிறது.

அதைப்போலவே தொடக்கநூல் 2:8-9-ல் ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்து தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான மரங்களையும் . . . மண்ணிலிருந்து வளரச் செய்தார்" என்று உள்ளது.

கடவுள் உலகையும் அதன் வனப்பையும், காற்று, ஒளி, மழை போன்ற வசதிகளையும் பயிர்வகைகள் உயிரினங்கள் எல்லாவற்றையும் உருவாக்கியதும் மனிதனது தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மனிதனை மகிழ்ச்சி அடையச் செய்யவுமே என்று புரிகிறது.

மனிதனை வாழவைக்கும் ஏதேன் தோட்டத்தைப்

பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார் (தொ.நூ.2:15). எனவே மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு, கடவுளின் திட்டம் அவனது மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் காரணமாயிருக்கும் வசதிகளைப் பேணி வளர்க்க வேண்டும் என்பதாகும்.

மனிதர்களைக் கடவுள் ஆணும் பெண்ணுமாகப் படைத்தது கூட அவர்கள் தனிமையின் தொல்லையை அனுபவிக்காமல் நட்புறவுடனும் ஆண்-பெண் உறவுடனும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதாகும். விலங்குகளோடும் உயிரினங்களோடும் பழகும் மனிதன் தனக்கு சமமான துணையின்றி அதனைத் தேடும் போது தான் ஆண் - பெண் என்று மனிதம் வடிவெடுக்கிறது என்கிறது. **தொடக்கநூல் 2 : 18-23**

விடுதலைப் பயண நூலில் அந்நிய நாட்டில் அகதிகளாக இருந்த மக்கள் படும் துன்பத்தைக் கண்டு இரங்கி இறைவன் அவர்களது பிரச்சனைகளுக்கு விடிவு ஏற்படும் வகையில் அவர்களைத் தனி நாட்டிற்கு அழைத்துச் சென்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (விடுதலைப்பயணம் 3:7-12). அதுவும் பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டிற்கு. இதிலும் கடவுளுக்கென்று எந்த எதிர்பார்ப்பும் இல்லை. மனிதர்களின் நல்வாழ்வே அவரது விருப்பம் என்பதே புலப்படுகிறது.

> "அதன்பின், படைத்தலைவர்கள் வீரர்களிடம் கூற வேண்டியது: 'புது வீட்டைக் கட்டி, அதை அர்ப்பணம் செய்யாதவன் தன் வீட்டுக்குத் திருபோகட்டும். அவன் போரில் இறக்க நேரிட்டால், வேறு ஒருவன் அதை அர்ப்பணம் செய்ய வேண்டியிருக்கும். திராட்சைத் தோட்டம் அமைத்து அதன் பயனை அனுபவிக்காதவன் தன் வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும். அவன் போரில் இறக்க நேரிட்டால், வேறு ஒருவன் அதன் பயனை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஒரு பெண்ணை மண உறுதிப்பாடு செய்தும் அவளோடு கூடி வாழாதவன் தன் வீட்டிற்குத் திரும்பிப் போகட்டும். அவன் போரில் இறக்க நேரிட்டால் வேறு ஒருவன் அவளை மணக்க வேண்டியிருக்கும்."
>
> இணைச்சட்டம் 20:5- 7

இணைச்சட்டத்திலே இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு அளித்த சட்டங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. புது வீட்டைக் கட்டி அதில் குடிபுகாமல் இருப்பவனும் திராட்சைத் தோட்டத்தை அமைத்து அதன் பலனை அனுபவிக்காமல் இருப்பவனும் திருமண உறுதிப்பாடு செய்து மனைவியோடு கூடி வாழாமலிருப்பவனும் போருக்கு அழைத்துச் செல்லப்படக் கூடாது

[illegible]

என்கிறது கூட்டம். வாழ்வின் சிறு சிறு இன்பங்களை தன் மக்கள் அனுபவிக்க வேண்டுமென்று இறைவன் விரும்புவது தெரிகிறது. இவற்றையெல்லாம் சிற்றின்பம் என்று ஒதுக்கிவிடவில்லை.

எசாயா இறைவாக்கினர் பிற இறைவாக்கினர்களைப் போல இஸ்ரயேல் மக்களை ஆண்டவரின் வழியில் அழைத்துவர முயன்றார். நாம் இறைவனை 'சேவிக்க' என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ அவற்றையெல்லாம் குறிப்பிட்டு இறைவன் அவற்றை விரும்புதில்லை என்கிறார். பலிகள் தேவையில்லை என்கிறார். வழிபட வரும்போது பலிசெலுத்த ஆடுமாடுகளைக் கொண்டுவரச் சொன்னது யார்? என்று கேட்கிறார். தூபங்கள், வழிபாட்டுக் கூட்டங்களெல்லாம் இறைவனுக்கு பெரும் சுமை என்கிறார். கை உயர்த்தி ஜெபிப்பதிலும் இறைவன் நாட்டம் காட்டவில்லை. அப்படியென்றால் எதில் தான் கடவுள் நாட்டம் கொண்டிருக்கிறார்? "நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள்." (எசா.1:17)

இங்கு கடவுளுக்கென்று எதுவுமே கேட்கவில்லை. மாறாக, இவ்வுலக இன்பங்களை அனுபவிக்க

முடியாமல் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டிருக்கும் மக்களுக்கு சேவை செய்வதையே அவர் விரும்புகிறார் என்பது தெளிவு.

மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி ஏடுகளிலே இறைவனின் கட்டளைகளையெல்லாம் இறைவனை அன்பு செய்வது மனிதர்களை அன்பு செய்வது என்ற இரண்டு கட்டளைகளில் சுருக்கிச் சொல்வதைப் பார்க்கிறோம்.

"ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள், என்னும் புதிய கட்டளையைநான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்".

யோவான் 13:34–35

ஆனால் யோவான் நற்செய்தியிலே இயேசு புதிய கட்டளை ஒன்றினைக் கொடுக்கிறார். "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல் நீங்களும் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்று. இறைவனைப் பற்றிய பேச்சே வரவில்லை.

இதனை உறுதிசெய்வது போல மத்தேயு நற்செய்தி இறுதித் தீர்ப்பைப் பற்றிச் சொல்லும்போது "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று இயேசு தெளிவாக்குகிறார்.

கடவுள் மனிதரை ஏன் படைத்தார்? இதற்கு **மனிதர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றே கடவுள் மனிதர்களைப் படைத்தார் என்பதே விவிலியம் தரும் விளக்கம்.** கடவுள் மனிதர்களை மையமாக வைத்தே அனைத்தையும் படைக்கிறார். மனிதரைப் படைக்க

"வானதூதர் அனைவரும் புடைசூழ மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்றுகூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் [illegible] வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள், நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பார்."

மத்தேயு 25 : 31–45

வேண்டும் என்று [illegible]
மனிதர்களின் மகிழ்ச்சியே இறைவனின் திட்டம்.

ஐம்புலன்கள் தரும் இன்பம்

கடவுள் மனிதனுக்கு ஐம்புலன்களைத் தந்து படைக்கிறார். இந்த ஐம்புலன்கள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒன்றை எதிர்பார்க்கின்றன. நாக்கிற்கு சுவையான உணவு வேண்டும். காதுக்கு இனிமையான இசை. கண்ணுக்கு நல்லக் காட்சிகள், அழகிய வடிவங்கள். இவை கிடைக்கும் போது ஒரு வகை இன்பம் ஏற்படுகிறது.

இந்த நிலை பாவத்தினாலோ இறைவனின் திட்டம் அறியப்படாதாலோ ஏற்பட்டது அல்ல. மனிதன் பாவம் செய்வதற்கு முன்பே கடவுள் மனிதர்களை ஐம்புலன்களோடு படைக்கிறார். அந்தப் புலன்களுக்கு திருப்தி அளிப்பதற்குத் தேவையானவற்றையும் படைக்கிறார். இதிலிருந்து ஐம்புலன்களின் பல்வேறு தேவைகள் நிறைவடைவதில் ஏற்படும் மகிழ்ச்சி இறைவனின் திட்டத்தைச் சார்ந்ததாகும் என்று புரிகிறது.

புலன்களைத் திருப்தி செய்வது அதில் கிடைக்கின்ற இன்பம் இது வெறும் சிற்றின்பம் அல்ல. இதுவும் வாழ்வின் குறிக்கோளில் இடம் வகிக்கிறது. இந்த உலகத்தில் மனிதன் வேதனைப் படுவதை அல்ல, மகிழ்ச்சியாக இருப்பதையே விரும்புகின்றார் நாம் நம்பும் இறைவன்.

புதிய வானம் புதிய வையகத்தைப் பற்றி விவரிக்கும் எசாயா இறைவாக்கினர், "அவர்கள் வீடு கட்டி அங்குக் குடியிருப்பார்கள்; திராட்சை நட்டு அதன் கனிகளை உண்பார்கள்" (எசாயா 65:21)

இவ்வுலகைப் பற்றி கடவுளின் கனவு என்ன என்பதை இதிலிருந்து புரிந்துக் கொள்ள முடிகிறது. நாமெல்லாம் [illegible]

கனிகளை உண்பதும், உடலுக்குச் சுகமாக வீடுகளில் குடியிருப்பதும் கடவுளின் திட்டமாகும்.

உறவில் ஏற்படும் இன்பம்

மனிதனிடத்தில் இருக்கின்ற இன்னொரு ஏக்கம் மனித உறவு சார்ந்தது ஆகும்.

கடவுள் படைத்த மனிதர் அனைத்தையும் பயன்படுத்தினாலும் அவரிடத்தில் வெற்றிடம் ஒன்று இருந்தது. அதனை ஏற்படுத்தியவரும் இறைவனே. அது தான் மனிதர் மனிதரோடு கொள்ளும் ஆள் உறவு மற்றும் ஆண் பெண் உறவு. நட்பு என்பதும் பாலுணர்வு என்பதும் சிற்றின்பம் அல்ல; இறைவனின் திட்டத்தோடு தொடர்பு அற்றதும் அல்ல.

மனிதரிடத்திலே ஏக்கம் உண்டு. யாராவது தன்னை அன்பு செய்ய வேண்டும், யாரையாவது தான் அன்பு செய்ய வேண்டும் என்ற ஆசை.

எனவே தான் யாராவது நம்மைப் பார்த்துப் புன்சிரிக்கும் போது, நம்மை நட்போடு கவனிக்கும் போது, நம்மீது அக்கறை காட்டும் போது, நம்மைப் பாராட்டும் போது நமக்கு நிறைவு கிடைக்கிறது. அதுபோலவே நாம் பிறரோடு நட்போடு பழகும் போதும், பிறர்மீது அக்கறை காட்டும் போதும் பிறரைப் பாராட்டும் போதும் நாம் நிறைவான உணர்வைப் பெறுகிறோம். காரணம், இறைவன் மனிதர்களைத் தனித் தீவுகளாகப் படைக்கவில்லை. மனிதர்களைச் சமூகமாகப் படைத்துள்ளார். சமூக உறவு என்பது இறைவனின் திட்டத்தில் உள்ளது; அதற்குப் புறம்பானது அல்ல.

மனித உறவுகளில் முக்கியமானதொரு வடிவம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்கின்ற கவர்ச்சி; ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டுமென்றும், அன்பு செய்யப் பட வேண்டுமென்றும் ஏங்குகிற ஏக்கம்..

படைப்புப் பொருட்கள், விலங்குகள் ஆகியவற்றில் கிடைக்காத துணைக்காக ஏங்கும் போது தான் கடவுள் ஆண், பெண் உறவைப் படைக்கின்றார். எனவே ஆண்கள் பெண்களிடையே உள்ள ஈர்ப்பு, அதனடிப்படையில் உறவை ஏற்படுத்திக் கொள்ள எடுக்கிற முயற்சிகள், அந்த உறவின் நிறைவாக நடைபெறுகின்ற உடலுறவு,அது தருகின்ற ஆனந்தம் இவையெல்லாம் இறைத் திட்டத்திற்குப் புறம்பானதல்ல; பாவமுமல்ல.

உருவாக்குவதில் ஏற்படும் இன்பம்

மனிதரிடமுள்ள இன்னொரு ஏக்கம் புதியன படைத்தல் பற்றியதாகும். மனிதருக்கும் சிருஷ்டிக்கும், படைக்கும் சக்தி உள்ளது.

இயற்கைத் தரும் வளங்களையும், ஆற்றல்களையும் பயன்படுத்தி இயற்கையில் வெளிப்படாமலிருக்கும் வசதிகளை உருவாக்குவது மனிதனுக்கு குறையாத இன்பம் தருவது.

பள்ளம் நோக்கிப் பாய்ந்தோடும் தண்ணீரைத் தேக்கி, வாய்க்கால் வெட்டி தண்ணீரில்லாதப் பாலைவனப் பகுதியை வளப்படுத்தும் போது மனிதர் படைப்பாளியாகிறார். செழித்து நிற்கும் பாலைவனப் பகுதியைப் பார்க்கும் போது கிடைக்கிற இன்பம் அலாதியானது. அனைத்தையும் ஆளும்படிப் பணித்த இறைத்திட்டத்தில் அடங்குவது ஆகும் இது.

மனித உயிரைப் படைப்பதில் இன்பம்

வெறும் பொருட்களைப் படைப்பதோடு நில்லாமல், இன்னொரு மனிதரையுப் படைப்பது சொல்லொண்ணாப் பேரின்பம் தருவதாகும். ஆங்கிலத்தில் இதனை திரில் (thrill) என்று சொல்வார்கள். தன்னைப் போன்ற ஒரு ஜீவனை உருவாக்கும் சக்தி தன்னிடம் இருக்கிறது என்பதை உணரும் போது, அதை அனுபவிக்கும் போது ஏற்படும் இன்பத்திற்காகவே கடவுள் மனிதர்களைப் பலுகிப் பெருகும் படியாகப் படைத்திருக்கிறார்.

குழந்தைகளை வளர்ப்பதில் இன்பம்

குழந்தைகளைப் பெறுவதில் மட்டுமல்ல அவர்களை வளர்ப்பதிலும் அளப்பெரிய மகிழ்ச்சி உள்ளது. நமது பேணுதலில் வளர்ச்சி ஏற்படும் போது அதில் இன்பம் இருக்கிறது.

தாவர உயிர்கள், செடிகள் வளர்வதில் நமக்கு ஒரு லயிப்பு ஏற்படுகிறது. விதைகள் முளைப்பது, முதல் இதழ் விரிவது, வளர்ந்துசெடியாகி பூ மலர்வது, காய் கனியாதல்; இந்தப் பருவங்களையெல்லாம் பார்த்து ரசிப்பதிலே ஒரு ஆனந்தமுண்டு.

இதுவே இப்படியென்றால், மனித உயிர்கள் குழந்தைகளாக, இளைஞர்களாக வளர்வதற்கு நாம் உதவும் போது, அந்த வளர்ச்சியைப் பார்த்து நாம் பிரமித்துப் போகிறோம். குழந்தைகளின் ஸ்பரிசம், புன்முறுவல், முதல் அடி எடுத்து வைப்பது, அம்மா, அப்பா என்று அழைப்பது ஆகியவற்றில் லயித்துப் போகாதவர் யார்?

முதுமை எய்துகிறவர்களுக்குச் சாதாரணமாக எல்லாமே அலுத்துப் போய் விடும். ஆனால் பேரக் குழந்தை ஒன்று கிடைக்கும் போது முதுமையெல்லாம் மறைந்தோடி வாழ்வில் இளமை நுழைந்து விடுகிறது. எல்லாமே புதிதாக மகிழ்ச்சி தரத் தொடங்கி விடுகிறது. இது தான் குழந்தைச் செல்வம் சாதிக்கும் புதுமை.

இவையெல்லாமே இறைவனின் திட்டத்திற்கு உட்பட்டவை தாம். இதில் ஒரு சந்தேகம் எழலாம். குடும்ப வாழ்வு, உலக இன்பங்கள் இவை இறைவனின் சித்தமென்றால் இவை பணியாளருக்கும் துறவியருக்தகும் மறுக்கப்படுவது ஏன்? (இது பற்றிய விரிவான விளக்கத்தை 107 - 109 பக்கங்களில் பார்க்கலாம்)

மகிழ்ச்சி, இன்பம் என்பவை கடவுளின் விருப்பத்திற்கு முரணானவை அல்ல. நாம் மகிழ்ச்சியாக இருப்பதே கடவுளின் விருப்பம். எனவே கடவுள் மனிதரைத் தனக்காகவே, தனது இன்பத்திற்காக மட்டுமே படைத்தார் என்ற புரிதலும் வாழ்வின் இன்பங்களும் மகிழ்ச்சியும் கடவுளின் திட்டத்திற்கு புறம்பானவை என்ற புரிதலும் முழுக்க முழுக்கத் தவறானவையாகும்.

இப்படிப்பட்ட தவறான புரிதல் திருச்சபையில் எவ்வாறு வரவேற்பைப் பெற்றது? (இது பற்றிய விளக்கத்தை ஏழாவது பிரிவிலே பார்க்கலாம்) தாம் அனுபவிக்கும் இன்பம், மற்றும் சுவையான வாழ்வு எல்லாவற்றையும் பலரும் அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தால் இறைவன் மனிதரைப் படைத்தாரே தவிர, தனது சுயநலத்திற்காக மனிதரைப் படைக்கவில்லை என்பதே கிறிஸ்தவ விசுவாசம்.

சட்டங்கள் எதற்காக

நமது மகிழ்ச்சிதான் இறைவனின் விருப்பம் என்றால் நாம் தவறுகள் செய்து, தண்டனை பெறக் காரணமாக இறைவன் ஏன் சட்டங்களைத் தந்திருக்கிறார் என்ற கேள்வி எழுவது இயல்பு.

மனிதர்களின் இன்பமே கடவுளின் திட்டம் என்பது உண்மை. ஆனால் இந்த மகிழ்ச்சியை உத்தரவாதப் படுத்தவும் ஆழப்படுத்தவும் இந்த மகிழ்ச்சி மனிதர் அனைவருக்கும் உரியதாகவும் வேண்டுமென்றால் சில கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள் தேவை.

பத்துக் கற்பனைகளை எடுத்துக்கொள்வோம். இந்தப் பத்துக் கட்டளைகளும் கடவுளை மையமாகக் கொள்ளாமல் மனிதர்களையே சார்ந்தவை என்று விவிலிய வல்லுநர்கள் கூறுகிறார்கள். மனிதர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நான்காவது கட்டளையிலிருந்து பத்தாவது கட்டளை வரையிலும் இது தெளிவாகவே தெரிகிறது. மகிழ்ச்சியின் முக்கியமான தளங்களில் ஒன்று குடும்பம். இதில் கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவருக்குப் பிரமாணிக்கமாக இருக்கும் போது தான் குடும்ப உறவில் மகிழ்ச்சி கிடைக்கும். பிற ஆண்களையோ பெண்களையோ நாடும் போது தற்காலிகமான சுகம் கிடைக்கலாம். அதிலே தனது குடும்பமும் பாதிக்கப்பட்டு பிறர் குடும்பத்திலும் குழப்பம் ஏற்படும் போது தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சி குறையுமே ஒழிய நிறைவடையாது.

குடும்ப உறவைப்பற்றி, ஒருவருக்கு அடுத்தவர் மீது உள்ள பொறுப்பையும் கடமையையும் பற்றிக் கவலைப்படாமல் தனது இன்பத்திற்காக ஆண் பெண் ஒருவர் ஒருவரைப் பயன்படுத்திக் கொள்வது உடனடியாகத் திருப்தியைத் தருவதாக இருந்தாலும் திருமண உறவோடு தொடர்புபடுத்தும் போது அதில் ஏற்படும் நிறைவை பாதிக்கும். இதனால் தான் 'மோகம்' கூடாது என்ற கட்டளை.

பொறுப்பான பெற்றோரை மதியாத சிறுவரும் இளைஞரும் அவர்களது வழிகாட்டுதலினால் பயனடையாமல் பாழ்பட்டுப்போக வாய்ப்பு இருக்கிறது.

மனித உறவிலே நேர்மை, நாணயம் என்பது இன்றியமையாதது. போலி வேடங்கள், நடிப்புகள், ஏமாற்றுதல்கள் எல்லாமே மனித உறவை சீர்கெடச் செய்து மகிழ்ச்சியைக் குறைக்கும்.

மனிதர்கள், ஒருவர் உயிரை மற்றவர் பறிக்கும் எதிரிகளாக மாறிவிட்டால் வாழ்வில் பயம் தானே மிஞ்சும். உயிரைப்

[illegible] போலவேதான் மனித உயிர் வாழத் தேவையான [illegible] கவர்வதும், களவாட ஆசைப்படுவதும்.

இவ்வாறு ஏழு கற்பனைகள் மனிதரின் மகிழ்ச்சியை [illegible]க் கொண்டவை. ஆனால் முதல் மூன்று கற்பனைகளும் [illegible]க்காக உருவாக்கப்பட்டவை என்று தோன்றும். சற்று ஆய்வு [illegible] பார்க்கும் போது இது உண்மையல்ல என்பது புலப்படும்.

இஸ்ராயேல் மக்கள் தம் துன்பத்தில் குறிக்கிட்டு தங்களுக்கு [illegible] வாங்கித் தந்தவரையே இறைவனாகக் கருதினார்கள். [illegible] 'யாவே' என்று அழைத்தார்கள். மனிதர்கள் [illegible]டுவதைப் பொறுத்துக் கொள்ளாதவர் அவர்.

ஆனால் எகிப்தில் ஆளும் வர்க்கம் வழிபட்டு வந்த இறைவன் [illegible]ப்பட்டவர் அல்ல. அரசுகள் போற்றி வளர்த்த இறைவன்களும்" யாவேயைப் போன்றவர்கள் அல்லர். அவர்கள் [illegible]டு மக்கள் ஏழை மக்களை அடிமைப்படுத்தி அவர்களைச் [illegible] தம்மை வளப்படுத்திக் கொள்வதை ஆதரித்தவர்களாக [illegible]ப்பட்டவர்கள். எனவே இவர்கள் உண்மை இறைவன் அல்ல; [illegible] சிலைகள். இதுவே இஸ்ராயேல் மக்களின் விசுவாசம்; இறைவனின் படிப்பினை. இந்தச் சிலைகளையும் போலி தெய்வங்களையும் வணங்குவதால் சுரண்டல், அடிமைத்தனம், ஏற்றத்தாழ்வு பெருகுமே ஒழிய மக்கள் அனைவரும் மகிழ்வாக [illegible] முடியாது. எனவே தான் விடுதலை தரும் இறைவனைத் [illegible] வேறு எந்த தெய்வங்களும் சிலை வழிபாடும் இஸ்ராயேலருக்கு வேண்டாம் என்று இறைவன் கட்டளை கொடுத்தார்.

கடவுளின் நாமத்தை, தாம் சொல்வது உண்மை என்று சத்தியம் [illegible]றுக்கே மக்கள் பயன்படுத்தினர். வீணாகப் பயன்படுத்தும் போது [illegible]யமாக மனிதர் நலம் பேணப்படாது.

கடவுளின் திருநாள் என்பது ஓய்வுநாள். உழைத்து உற்பத்தி [illegible]வதில் சுகம் இருக்கிறது. ஓய்வெடுத்து உற்பத்தி செய்ததைப் [illegible]த்து ரசித்து அதற்கு வகை செய்த வாழ்வு என்ற கொடையை [illegible]றியோடு பார்த்து, காரணமான கடவுளை அன்போடு வாழ்த்தும் போது மகிழ்ச்சி பன்மடங்காகிறது. ஓய்வெடுத்தால் தான் உருப்படியாகப் [illegible] திறனோடு உருவாக்க முடியும். சுரண்டும் சமுதாயத்திலே ஓய்வுநாளைக் கட்டாயப்படுத்தும் போது தான் அடிமைகளுக்கும்

தொழிலாளர்களுக்கும் ஓய்வு கிடைக்கும். இதனால்தான் ஓய்வுநாள் பற்றிய கட்டளை.

மொத்தத்தில் சட்டங்கள் எல்லாமே மனிதர் அனைவரின் மகிழ்ச்சியை உத்தரவாதப் படுத்துவதற்காகவே.

ஒரு சில மனிதர்கள் மட்டுமல்ல எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பது தான் இறைவனின் விருப்பம். மனித குலம் முழுவதுமே பார பட்சமின்றி இன்பத்தைச் சுவைக்க வேண்டுமென்றால், இறைவன் அளித்த இயற்கை வளம் போன்ற கொடைகளைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் மனிதர்களுக்குள்ளே கட்டுப்பாடு தேவை, ஒழுங்குகள் அவசியம்.

இதற்காகவே சட்டங்கள். இவை மனிதர் மனதிலே பதிய வைக்கப்பட்டுள்ளன. அவற்றை உணர்ந்து கொள்ள இயலாதவர்களுக்கு உதவியாக, உணர்ந்து கொண்டவர்களின் வாயிலாக சட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சட்டங்கள் இறைவனின் அதிகாரத்தைப் பறை சாற்றுவதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல.

ஒரு குறிப்பிட்ட மரத்திலுள்ள கனிகளைப் புசிக்கக் கூடாது என்று இறைவன் கட்டளை கொடுத்ததாகத் தொடக்க நூலில் பார்க்கின்றோம். இது கதை வடிவிலே வெளியிடப்பட்ட உண்மை. இதை ஒரு உண்மையான சட்டமாக எடுத்துக் கொண்டால் கூட தோட்டத்தின் கனிகளை ஆதிப்பெற்றோர் தவிர பிறரும் உண்டு அனுபவிப்பதற்காக இறைவன் செய்த ஏற்பாடு என்று கூடப் புரிந்து கொள்ள முடியும். தோட்டத்திலுள்ள எல்லாவற்றையும் அனுபவித்துக் கொள்ளுங்கள், கொஞ்சத்தை மட்டும் விட்டு வையுங்கள் என்று இறைவன் சொல்கிறார் என்றால் அந்தக் கொஞ்சம் இறைவனுக்குத் தேவை என்பதனால் அல்ல. 'ஆதாம் ஏவாள்' அல்லாத பிற மனிதர்களுக்குத் தேவை என்பதனால் ஆதாம் குடும்பம் இன்ப நுகர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும், அப்போது தான் அனைவரும் அவர்களைப் போல் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும் என்றும் புரிந்து கொள்ளலாம்.

எனவே சட்டங்கள் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்டவை; மனிதர் அனைவரும் இன்பத்தைத் தாராளமாக அனுபவிப்பதற்காகத் தரப்பட்டவை.

பாவம் என்றால் என்ன

அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற இறைவனின் திட்டத்தைப் புறக்கணிப்பதே பாவம். அனைவரும் இன்பம் பெற அக்கறைப் படாமலிருப்பதே பாவம். இன்பத்தைப் பெருக்க முயற்சிக்காமல் இருப்பதே பாவம்.

மனிதர்கள் இயல்பாகவே மகிழ்ச்சியை விரும்புகின்றனர். எனவே தான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற நாட்டமும் அதற்கு ஒத்த செயல்பாடும் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது.

ஆனால் அது போலவே தன்னைச் சுற்றி இருக்கிறவர்களும் இன்பம் பெற வேண்டும் என்ற எண்ணம், துடிப்பு இருக்க வேண்டும். இந்த எண்ணம் இறைவனிடம் அதிகமாகவே இருந்தது. ஆகவே அவர் தன் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள மனிதர்களைப் படைத்தார்.

இந்த இறைவனின் உணர்வானது, உந்து சக்தியானது ஒவ்வொரு மனிதனிலும் ஊன்றப்பட்டுள்ளது. படைப்புக் கதை விளக்கத்திலே ஆண்டவர் மனிதரில் ஊதித் தம் ஆவியை, தம் மனநிலையை, உணர்வைத் தந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால், இந்த உணர்வின் வீரியம் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு விதமாகச் செயல்படுகிறது.

தன்னோடுள்ள அனைவரும் இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் குறைவாக இருக்கும் போது அடுத்தவர் தம் இன்பத்தைப் பங்கு போட்டுக் குறைப்பவர் என்ற அறியாமை ஏற்பட்டு விடுகிறது. உறவினால் இன்பத்தைப் பெருக்க வேண்டியவர் இன்பத்தைத் திருடிச் செல்லும் எதிரியாகக் கருதப் படுகிறார், போட்டியாளராகிறார்.

இதனால் இன்பம் பறிபோய் விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. ஆற அமர மகிழ்ச்சியை அனுபவிப்பதற்குப் பதிலாக அவசரப்பட்டு அளவுக்கதிகமாக இன்பத்தைச் சேகரிக்க மனிதர் முன் வருகின்றனர். சேகரித்து வைத்திருப்பதைப் பறித்துக் கொண்டுப் போய் விடுவார்களோ என்று பயப்பட்டு இன்பத்தை அனுபவிக்க மறந்து விடுகின்றனர். இன்பத்தில் பங்கு கேட்டு வந்திருக்கும் எதிரியை அழிக்க முன்

வருகிறோம். அது நம்மைக் குற்றப்பழி என்ற நரகத்தில் தள்ளுகிறது. இதுவே பாவ நிலை. சகோதரரோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள முன் வராத நிலை. இன்பத்தை சேகரித்து வைத்திருந்தும் அனுபவிக்க முடியாதவனும், அடுத்தவர் சேகரித்து வைத்திருப்பதைப் பார்த்து ஏங்குகிறவனும் என்று யாருமே மகிழ்ச்சி அடையாத அவல நிலை.

இந்தப் பாவ நிலை இறைவனின் திட்டத்திற்கு முரண்பட்டது.

இந்தப் பாவச் சூழ்நிலையிலே பெறும் இன்பத்தைத் தான் சிற்றின்பம் என்று ஞானிகளும் அறிஞர்களும் அழைத்தனர். குறைபட்ட ஒரு பகுதியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு முழுமையானதைக் கைவிடுவது தான் சிற்றின்பம்.

தானும் பிறரும் மகிழ்ச்சியாக இருப்பது என்பது முழுமையான இன்பத்தை முழுமையாகச் சுவைப்பது. புத்திசாலித் தனமானது. அதனை விரும்பாமல் **தனது மகிழ்ச்சியிலிருந்து அடுத்தவர்களை ஒதுக்கி வைத்து, அந்நியரான அவர் தம் மகிழ்ச்சியைக் களவாடிக் கொண்டு போய் விடுவார் என்று பயந்து செத்துக் கொண்டிருப்பதிலே காணும் இன்பம் தான் சிற்றின்பம்.**

பேரின்பத்தை இழந்து சிற்றின்பங்களை அனுபவிக்கும் வகையிலே தான் சமூக அமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. தனியார் சொத்துடமை என்பது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. தனக்கென்று சொத்தை தனிமைப்படுத்தி, வேலியிட்டு, களவாடிக் கொண்டு போய் விடுவார்களோ என்று பயந்து வாழ்கின்ற பணக்கார வாழ்வே, பாவ வாழ்வே முதலாளித்துவம் நம் முன் வைத்திருக்கும் வாழ்க்கை முறை. இதையே அமைப்பு முறை பாவம் (structural sin) என்கிறோம்.

இதன் விளைவாக இந்த உலகம் "கண்ணீர் கணவாய்" ஆகி விடுகிறது: துன்பத்தின் தளமாகி விடுகிறது. இது கடவுளின் திட்டத்திற்கும், சித்தத்திற்கும் முற்றிலும் முரணானது.

இன்பமும் முற்போக்கு இயக்கங்களும்

இத்தகைய சூழ்நிலையில் இறையரசு இயக்கம் போன்ற முற்போக்கு இயக்கங்களின் உறுப்பினர்கள் செய்ய வேண்டியது என்ன? அவர்களது அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்? முதலில் நாம் மகிழ்ச்சியாக

இருக்க வேண்டும். மகிழ்ச்சியைப் பெறுவதும் பகிர்வதும் வாழ்வின் இலட்சியம் என்ற தெளிவு இருக்க வேண்டும். நம் நியாயமான தேவைகளை, பிறரது நியாயமான மகிழ்ச்சிக்கு தடையாக இல்லாமல் முடிவாகப் பூர்த்தி செய்து கொள்ள முயல வேண்டும். அத்துடன் நம் அடுத்திருப்போரும் மகிழ்ச்சியாக இருக்க வழிகளைத் தேடிச் செயல்பட வேண்டும். அப்போது தான் நாம் கடவுளின் விருப்பத்திற்கேற்ப மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

நம் வாழ்விலுள்ள நலன்களைக் கண்டு மகிழும் பக்குவம் வேண்டும். வாழ்வில் நல்லவைகள் ஏராளம் இருப்பினும் பல வேளைகளில் கஷ்டங்களும், நல்லதல்லாத காரியங்களுமே நமக்குத் தென்படுகின்றன. ஒரு பெண் குழந்தையைப் பெற்ற தாய் அதைப் பார்க்கும் போது வரதட்சணைக் கொடுமை என்று அதன் எதிர்காலத்தைப் பற்றி மட்டுமே எதிர்மறையாகச் சிந்தித்தால் அக்குழந்தை மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை தவற விட்டு விடுவார் அல்லவா? அன்றாட வாழ்வில் இயற்கையின் வனப்பு, வாழ்வின் சிகரம், உறவு நெருக்கத்தின் சுவை, இசையின் இனிமை ஆகிய அனைத்தையும் சுவைக்கும் ரசனை வேண்டும்.

அன்றாடம் நாம் பயன்படுத்தும் உணவை ருசித்து உண்பது, கலைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சி காண்பது, குடும்பத்தில் வரும் இன்பத்தை நிறைவான விதத்தில் சுவைப்பது, குடும்பத்திலும் குழந்தைகளோடும் போதிய நேரம் செலவழிப்பது, எழுதுவது, வரைவது, தோட்ட வேலை செய்வது, ஏழைகள் மேல் தனி அக்கறை கொள்வது, சமூக ஈடுபாடு போன்றவை மகிழ்ந்து வாழ அவசியமானவையாகும்.

இவ்வாறு மகிழ்ந்து வாழ்கிறவர்களே மனநிறைவோடு பிறரது மகிழ்ச்சிக்காகப் பாடுபடுவர். முற்போக்கு மனநிலையும் சமூக சிந்தனையும் உள்ளவர்கள் தங்களைச் சுற்றி மகிழ்ச்சியைப் பரவவிடும் தன்மையைப் பெற வேண்டும். பிறரிடமுள்ள நல்லவற்றைச் சுட்டிக்காட்டுவது, தட்டிக் கொடுப்பது, உற்சாகப்படுத்துவது, தானே முன்வந்து புன்முறுவல் பூத்து பிறர் முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்துவது, பிறரைப் புண்படுத்தாமல் நகைச்சுவைகள் சொல்லி சுற்றுப்புறத்தை மலர வைப்பது இவற்றை நமது இயல்பாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

மனிதர் அனைவருக்கும் இன்பம் எப்படியாவது கிடைக்க வேண்டும் என்ற வெறியோடு மனிதர்கள் அனைவரும் மகிழ்ந்திருக்கத்

தடையான அனைத்தையும் உடைத்தெறியும் உறுதியும் தேவை. இதில் வரும் சிரமங்களையும் இடர்களையும் வேண்டா வெறுப்புடனோ, கட்டாயத்தினாலோ என்றில்லாமல் நிறைவோடும் மனதின் ஆழத்தில் சன்னமான மகிழ்ச்சியோடும் சந்திக்கின்ற மனநிலையும் பெற்றுவிட்டோமென்றால் எப்போதும் மகிழ்ந்திருக்கும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டவர்களாவோம்.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

?

1. இறைவனின் திட்டத்தைப் பற்றிய இரண்டு தவறான சிந்தனைகள் எவை?

2. இறைவன் தனக்கென்று எதனையும் தேடாமல் மனிதர்களுக்கென்றே அனைத்தையும் செய்கிறார் என்பது உண்மை தானா? விவிலியத்தில் ஆதாரம் உள்ளதா?

3. கடவுள் மனிதர்களைத் தனக்கு சேவை செய்யவே படைத்தார் என்பது உண்மை தானா?

4. ஐம்புலன்களால் கிடைக்கும் இன்பம், உறவில் ஏற்படும் மகிழ்ச்சி இவற்றை 'சிற்றின்பம்' என்று உதறித்தள்ளி விட முடியுமா? அவை எப்போது சிற்றின்பமாகின்றன?

5. நம்மை அடக்கி வைத்துத் துன்புறுத்துவதற்காகத் தானே சட்டங்கள் தரப்பட்டுள்ளன? இல்லையென்றால் வேறு எதற்காக?

6. பாவம் என்றால் என்ன? நமது மகிழ்ச்சியைக் கெடுப்பதற்குத் தானே பாவத்தைப் பற்றி பேசுகிறார்கள்? பாவம் நிலையான மகிழ்ச்சியைத் தர முடியுமா?

7. சமூக உணர்வு கொண்டவர்களுக்கும் மகிழ்ச்சிக்கும் உள்ள தொடர்பு என்ன?

3

கடவுள் யார்?

இறைவன் யார்?

இன்பத்தைப் பெருக்குவதே இறைவனின் திட்டம் என்ற புரிதல். இது தொடர்பாகப் பரவலாக இருக்கும் கருத்துக்களிலிருந்து மாறுபட்டிருக்கிறது.

இந்தப் பார்வையிலே இறைவனைப் பற்றியும் அவரது சிறப்புத் தன்மைகள் பற்றியும் நாம் சிந்திப்பது நல்லது. ஏனெனில் இது பற்றியும் பல தவறான கருத்துகள் உள்ளன.

இறைவன் யார்?

இந்த வினாவை சற்று வித்தியாசமாகவும் கேட்க வேண்டும். இறைவன் என்றால் என்ன? என்றும் கேட்க வேண்டும். யார் என்று கேட்கும் போது அதிலே இறைவன் ஆள்தன்மை கொண்டவர் என்பது தொக்கி நிற்கிறது. இறைவனை நம்புகிறவர்கள் எல்லாருமே அவர் ஆள்தன்மை கொண்டவர் என்று நம்புவதில்லை.

இந்து மதத்திலே "அத்வைதா" சித்தாந்தமானது இறைவனை ஆள்தன்மை கொண்டவராகப் பார்ப்பதில்லை. இறைவனை ஒரு பரம் பொருளாகவும் மெய்மையாகவும் பார்க்கிறது. இறைவனை 'அது' என்று சொல்வது தான் பொருத்தம் என்பது அவர்களது கருத்து.

இறைவனை ஆளாகப் பார்க்கும் போது அவரது அன்புடைமை தெளிவாக வெளிக்காட்டப் படுகிறது. ஆனால் அவரை பல மனிதர்களில் ஒருவராகப் பாவிக்கும் தவறும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஆள்தன்மை என்று வரும் போது இறைவனை ஆணாக மட்டுமே பாவிப்பது பெருந்தவறு ஆகும்.

நாம் ஏன் இறைவனைப் பற்றிப் பேசுகிறோம்?

இறைவனைப் பற்றிய பேச்சு ஏன் எழுகிறது தெரியுமா? **இந்த உலகம் எழுப்பும் சில கேள்விகளும் உணர்வுகளுமே இறைவனைப் பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன.**

இந்த உலகத்தையும், வாழ்வின் இயக்கத்தையும் பார்த்து பிரமித்து நிற்கும் போது இவ்வுலகம் எப்படி வந்தது? இதில் திட்டமிட்டது போல் பலவும் நிகழ்வது யாரால்? எதனால்? எப்படி? என்ற கேள்விகள் எழுகின்றன.

இன்று கடல்நீரை எடுத்துக் குடிநீராக்கும் திட்டம் சில இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இயற்கையிலேயே கடல்நீர் நீராவியாக்கப்பட்டு சுத்தமான மழைத் தண்ணீராக நமக்குப் பயன்படும் வகையில் உப்புத்தன்மை நீக்கப்பட்டு வந்தடையும் போது பிரமிப்பும் அதில் தொக்கி நிற்கும் கேள்வியும் நம்மில் எழும். இது இயல்பு.

நிகழ்கின்றவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொண்டு மந்தைத் தனத்தோடு வாழ்கிறவர்கள் தாம் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

இறைவனை யாரும் வலிந்து இவ்வுலகில் திணிக்க வேண்டிய தேவையில்லை. இவ்வுலகத்தின் தன்மைகளே இறைவனைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும் வைக்கின்றன.

எனவே இறைவனைப் பற்றி நாம் சொல்லக் கூடியவை இவ்வுலகத்தின் புதிரான காரியங்களுக்கு நாம் தரும் விளக்கமாகவும் அமைகின்றன.

இவ்வுலக இயக்கத்தின் தொடக்கம் என்ன? குறிக்கோள் யாது? இதனைத் தாங்கி வழி நடத்துவது யாது? என்னும் கேள்விகளுக்கு அறிவியல் பூர்வமாக அல்ல, நம்பிக்கையாக நாம் தரும் பதில் இறைவன் என்ற வடிவத்தில் அமைகிறது.

இந்தப் பதில் வெறும் வார்த்தைகளில் அமைவதில்லை. புரிந்து விட்டவற்றை விளக்குவதற்கு வார்த்தை பயன்படலாம். புதிரானவற்றை எடுத்துச் சொல்வதற்கு சின்னங்களே உதவுகின்றன. சின்னங்களில் தெளிவாகவும் தெளிவற்ற நிலையிலும் உணர்வுகளையும் நம்பிக்கையையும் ஒரு சேர வெளிப்படுத்த முடியும்.

வாழ்வின் புதிர்களுக்கு இறை நம்பிக்கை உடையவர்கள் தரும் பதில் இறைவன் என்ற சின்னம் எனலாம்.

மேற்சொன்ன கேள்விகளுக்கான பதில்களை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகச் சொல்கின்றன. ஆனால் நாம் விவிலியத்தின் பின்னணியில், கிறித்தவ மதத்தின் பின்னணியில் இறைவன் என்பது என்ன? இறைவன் யார்? என்று புரிந்துக் கொள்ளப் பார்ப்போம்.

இறைவன் எங்கே உள்ளார்?

இன்று சிலர் இறைவனை உலகத்திலிருந்து தூரமாக, அந்நியமாக இருப்பவராகவும் நம்முடைய வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு ஒதுங்கி நிற்பவராகவும் பார்க்கிறார்கள்.

இறைவனை உலகின் பாலும் நம்மீதும் ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டுமென்றால் அவரை வசப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். இவர்கள் புரிந்து கொள்ளும் இறைவன் தனக்கென்று அதிகம் தேடுபவராக இருப்பதால் அவர் விரும்புகின்ற காணிக்கைகளைக் கொடுப்பது, பலிகள் ஒப்புக் கொடுப்பது, நைவேத்தியம் செய்வது ஆகிய வழிகளில் நம்மை வருத்திக் கொள்வது, நோன்பு இருப்பது, தரையில் உருளுவது, தலையை மொட்டையடித்துக் கொள்வது போன்றவை இறைவனை இரங்க வைக்கும் என்று தவறாகக் கருதுகிறார்கள்.

ஆனால் விவிலிய விசுவாசத்தின் படி இறைவன் எங்கோ இருப்பவர் அல்ல. கடவுள் இங்கே இருக்கிறார். "இம்மானுவேல்" என்பது அவரது பெயர். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்று அர்த்தமாகும் (மத் 1 : 22-23).

இவ்வுலகத்திற்கும் இறைவனுக்கும் பிளவு இல்லை. இணைக்க முடியாத இடைவெளி இல்லை. இந்த உலகத்தோடும் அதன் இயக்கத்தோடும் இறைவன் பின்னிப் பிணைந்திருக்கிறார்.

கடவுள் இயற்கையில் நிறைந்திருக்கின்றார் என்பது எல்லா மதங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

ஆனால் கடவுள் மனிதருடைய வரலாற்றில் இருக்கின்றார் என்பது விவிலியத்தில் அழுத்தம் பெறுவதாகும். கடவுளுடைய செயல்பாடு வரலாற்று வளர்ச்சியில் கலந்து இருக்கின்றது. வரலாற்று வளர்ச்சியோடு கடவுளின் வெளிப்பாடும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

இந்த வரலாற்று இறைவன் மனிதரிலே சிறப்பாக வெளிப்படுகிறார். கடவுள் தன் உருவிலே (தொ.நூல் 1 : 27) மனிதரைப்படைத்தார் எனும் போது கடவுளிடத்திலிருக்கிற பல பண்புகள் மனிதரிடம் உள்ளன என்றும் கடவுளை சந்திப்பதற்கு மனிதர்களே சிறந்த தளம் என்றும் தெளிவாகிறது.

கடவுள் தன்மை என்ன?

விவிலியமானது இஸ்ராயேலரின் உயர்ந்த அனுபவங்களைப் பதிவு செய்துள்ளது. இஸ்ராயேலர் இறைவனை எவ்வாறு உணர்ந்தார்கள்?

விவிலிய வல்லுநர்களின் கருத்துப்படி இஸ்ராயேலர் இறைவனை முதலில் படைப்பவராக உணரவில்லை. அவரைப் பற்றிய அவர்களது முதல் அனுபவம் அவர் அளித்த விடுதலை அனுபவம் ஆகும்.

இஸ்ராயேல் மக்கள் என நாம் அழைப்பவர்கள் துவக்கத்திலேயே ஓர் இனமாகவோ, குலமாகவோ இருக்கவில்லை. அவர்கள் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு இடத்தில்

வாழ்ந்தவர்கள். இவர்கள் எல்லாரும் வாழ்க்கைச் சூழலில் அடிப்படையில் சுரண்டப்பட்டவர்கள்.

இவர்களில் சிலர் எகிப்தில் அகதிகளாகச் சென்று அடிமைப்படுத்தப்பட்டவர்கள். வேறு சிலர் நில உடமை சமுதாயத்தில் மேல் குடிமக்களால் சுரண்டப்பட்டு அவதிப்பட்டவர்கள். எகிப்திலிருந்து தப்பி ஓடிய மக்களோடு சேர்ந்து தம் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து மாற்று சமத்துவ சமுதாய அமைப்பை உருவாக்கியவர்கள்.

இவர்கள் எல்லோருக்குமே பொதுவான அனுபவம் ஒன்று உண்டு என்றால் அது இவர்கள் பெற்ற விடுதலை அனுபவமாகும். இவ்வாறு விடுதலை அனுபவத்தில் பங்குப் பெற்றவர்கள், இந்த விடுதலைக்குக் காரணமானவர் இறைவன் என்று உணர்ந்தார்கள். இறைவனை விடுதலையோடு தொடர்பு படுத்திப் பார்த்தார்கள். அதனால் இறைமை என்றாலே விடுதலை தருவது என்று புரிந்து கொள்கிறார்கள். அழிவிலிருந்தும், தீமையிலிருந்து விடுதலை தருவது; தீமையிலிருந்து விடுதலை தருவது மட்டுமல்ல, முழுமையான நனமைக்கும் கூட்டிச் செல்வது தான் இறைமை என்று புரிந்து கொள்கின்றனர். இந்த விடுதலை அனுபவமும், இறைவனை இதனோடு தொடர்புபடுத்திய இறையனுபவமுமே இவர்களை ஓரினம் ஆக்குகின்றது.

> அப்போது ஆண்டவர் கூறியது: எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன், எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு – அதாவது கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர், வாழும் நாட்டிற்கு – அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன். இப்போது, இதோ! இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன்.

விடுதலை தருவது இறைவனின் பண்பு என்றால் அந்த விடுதலையை அவர் எவ்வாறு அளித்தார் என்ற விவரத்தில் இறைமையைப் பற்றிய வேறு தெளிவுகளும் நமக்குக் கிடைக்கும்.

விடுதலைப் பயண நூலிலே எகிப்திலே அகதிகளாக வாழ்ந்த இஸ்ராயேலருக்கு எவ்வாறு விடுதலை கிடைத்தது என்பது விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது விடுதலைப் பயண நூலிலே. இதன் சுருக்கமானது மோசேக்கு அளித்த அழைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

> எனவே இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன். மோசே கடவுளிடம், "பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்?" என்றார். அப்போது கடவுள், "நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும் போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே" என்றுரைத்தார்.
>
> விடுதலைப் பயணம் 3:7-12

கடவுளின் அடிப்படையான பண்பு அன்பு ஆகும். கடவுள் அன்பாய் இருக்கிறார்(யோவான் 4:7,16) அன்பின் பண்பை விளக்கும் பவுல் அடியார் அன்பு நன்மை செய்யும் என்கிறார். (1கொரிந்தியர் 13:4).

இந்த அடிப்படையிலே தான் அன்பாய் இருக்கிற இறைவன் எகிப்தில் அடிமைகளுக்கு நன்மை செய்ய விரும்புகிறார். ஏனெனில் இறைவன் மனிதரின் வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிப்பவர்; உணர்பவர். துன்பங்களைக் கண்ணால் கண்டேன், அழுகுரலைக் காதால் கேட்டேன், துயரங்களை நான் அறிவேன் என்று மோசேயுடன் உறவாடிய இறைவன் சொல்கிறார். இறைவனைக் கடவுள் என்று அழைக்கிறோம். தன்னைக் கடந்து தன்னிலும் பிறரிலும் உள் உறைபவர். எனவே தான் **இறைவன் அனைத்து உயிர்களிலும் உறைந்து அவற்றின் இன்ப துன்பங்களை வாழ்க்கைச் சூழ்நிலைகளைத் தனதாக்கிக்** கொள்கிறார். இது இறைமையின் பண்புகளில் முக்கியமானதாகும்.

இந்த இறைமை மனிதருக்கும் தரப்பட்டிருக்கிறது. மனிதரிடமுள்ள ஊன் தன்மைக்கு தனது வேதனைகளை அனுபவிக்க முடியுமே ஒழிய பிறருடைய வேதனைகளை தனதாக்கிக் கொண்டு அதனைப் போக்குவதற்கு தியாகம் செய்யும் ஆற்றல் இல்லை. அது மனிதனிடமுள்ள ஆன்மா அல்லது ஆவியினால் மட்டுமே இயலும்.

அன்பான இறைமையின் இரண்டாவது பண்பு பிறர் துயர் துடைக்க முயற்சி செய்வதில் அடங்குகிறது. எகிப்தின் அடிமைகள் இறைவனை வயப்படுத்தி தங்கள் விடுதலையைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்களது வேதனைகளை உணர்ந்த இறைவன் அதை சரி செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டி, அவர்களை விடுதலை செய்து, சொந்த நிலம் கொடுத்து மீட்பளிக்கத் திட்டமிட்டுச் செயல்படுகிறார். **ஈடுபாட்டுடன் கூடிய இரக்கமே இறைமையாகும்.** மற்றது ஆவியின் ஆற்றல் இல்லாத வெறும் உணர்ச்சியாகும்.

அடிமைகளுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்று விரும்பிய இறைவன் மோசேயை அழைத்து அந்த விடுதலைப்பணியைச் செய்து இறைமையின் இன்னொரு பண்பினை வெளிப்படுத்துகிறது. இன்பத்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ள விரும்பிய இறைவன் தனது சாதனைகளின் முழுப்பங்கும் தன் உறவைப் பெற்றுக் கொண்ட மனிதர்க்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார். மனிதர் தன்னுடைய பங்காளியாக வேண்டுமென்று விரும்புகிறார். மனிதர் தனக்குக் கீழ் இருப்பவர் அல்லர். இதனையே இயேசுவும் சுட்டிக் காட்டுகிறார். நீங்கள் பணியாளர் அல்ல, மாறாக நண்பர்கள் (யோவான் 15 : 14-16) என்கிறார். உருவாக்குவதிலும் பாதுகாப்பதிலும் கிடைக்கும் மகிழ்ச்சி மனிதரின் இன்பத்தைப் பன் மடங்காக்குகிறது. இறைமை என்பது எல்லாரையும் தனக்கு சமமாக்குவதிலும் அடங்குகிறது. மீட்புப்பணியானது இறைவனும் மனிதனும் இணைந்து செய்யும் கூட்டுப்பணியாகும். தனி மனித சாதனைகளை சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டும்.

சுதந்திரம் இறைமையோடு தொடர்பு கொண்ட இன்னொரு பண்பு ஆகும். என்னுடைய உயிரை என்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது. நானே அதனை மனமுவந்து மக்களுக்காகக் கையளிக்கிறேன் என்று இயேசு மொழிகின்றார். இதைப்போன்று ஒவ்வொரு மனிதரும் சொல்ல முடியும். இறைமை தரும் இந்த சுதந்திரம் ஒவ்வொரு மனிதருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் செய்வது எல்லாமே சுதந்திரத்தின் வழியாகவே நம்முடையதாகிறது. மிருகங்கள் உணர்ச்சிகளுக்கு கட்டுப்பட்டு இயங்குகின்றன. அவற்றின் செயல்பாடுகளுக்குக் காரணம் அவறறின் உணர்ச்சிகளே. உணர்ச்சிகளையும், பற நிர்பந்தங்களையும் கடந்து செயல்படும் சுதந்திரம் என்ற இறையாற்றல் மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் செய்யும் அனைத்திற்கும் பொறுப்பேற்க முடிகிறது. இறையூக்கத்தால் உந்தப்பட்டு நல்லன பல செய்யும் போது அவை அனைத்திற்காகவும் மனிதர் உண்மையிலேயே பெருமைப்பட முடியும்; மகிழ முடியும்.

இந்தப் பின்னணியிலே இறைவனின் இன்னொரு பண்பு அவரது பலவீனம் ஆகும். இறைவனை நாம் எல்லாம் வல்லவர் என்று அழைக்கிறோம். இதனைத் தவறாகப் புரிந்து கொள்ள முடியும். மனிதர்களின் சுதந்திரத்தின் முன் இறைவன் விரும்பும் பல நல்ல காரியங்கள் நிகழ முடியாமல் போய் விடுகின்றன. கடவுள் வடிவில் விளங்கியவர் "தன்னையே வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்றார்" என்கிறது விவிலியம் (பிலிப்பியர் 2:7). தனது சுதந்திரத்தை

மனிதரோடு பகிர்ந்து கொண்டு தன்னை பலவீனர் ஆக்கிக்கொண்டார். மனிதரின் மகிழ்ச்சி பெருக வேண்டுமென்று சுதந்திரத்தைக் கொடுத்து தன்னை பலவீனப்படுத்திக் கொண்ட இறைவன் மனிதரின் மகிழ்ச்சிக்காக, நிறைவுக்காக எதையும் இழக்கவல்லவர். ஆகவே தான் அவரது மகன் இயேசு தன் உயிரையும் மனிதருக்காகத் தந்தார்.

மனித ஒத்துழைப்பு இன்மையால் இறைவனின் திட்டம் பாதிக்கப்பட்டாலும், நல்லது நடப்பது காலந்தாழ்த்தப்பட்டாலும் இறைவனின் திட்டம் முடங்கிப்போகும் என்பதல்ல. இறைவனின் பண்புகளில் நாம் தெரிந்தவை கொஞ்சம். தெரியாதவை அதிகம். இறைவனின் திட்டத்திற்கு மனிதர்கள் தமது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால் முட்டுக்கட்டைகள் இட்டாலும் நமக்கு இன்று தெரியாத வழிகளிலே இறைவன் தமது திட்டத்தைக் கட்டாயமாக நிறைவேற்றியே தீருவார். இறையாற்றலை எந்த சக்தியாலும் அமுக்கிவிட முடியாது; அழித்து விட முடியாது. இந்த வகையிலே இறைவனை எல்லாம் வல்லவர் என்று கட்டாயமாக நாம் சொல்ல முடியும்.இறைமையைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்றால் நன்மையையும் மகிழ்ச்சியையும் வளர்க்க அறிவும் அன்பும் கொண்ட வலுவான உந்து சக்தியே என்று சொல்லலாம். இந்த இறைமையே உலக இயக்கத்தைத் துவக்கி வைத்து அதனை நிறைவை நோக்கி வழிநடத்தி வருகிறது. அதன் முத்திரை வரலாற்றிலே முழுமையாக பதிக்கப்பட்டிருக்கிறது.

இறையனுபவத்தின் பண்புகள்

இறைவனின் தன்மை இதுவென்றால் இந்த இறைவனை அனுபவிக்கும் போதும், அவரோடு தொடர்பு கொள்ளும்போதும் இது சம்பந்தமான பண்புகள் மனிதரிடம் உருவாக வேண்டும். ஜெபம் செய்யும் போதும், வழிபாடுகளில் பங்கெடுக்கும் போதும், பக்தி முயற்சிகளில் ஈடுபடும் போதும், ஆழ்நிலை தியானத்தில் பங்கெடுக்கும் போதும் இறையனுபவம் பெறுகின்றோம். நாம் பெற்றது உண்மையிலேயே இறைமையைத் தொட்ட அனுபவம் தானா? அல்லது நமது உணர்ச்சிகளின் வெளிப்பாடா? மாயையா? என்று தேர்ந்து தெளிவது அவசியம்.

இறையனுபவம் பெற்றவர்களிடம் நன்மை நிகழ வேண்டும் என்றும் மனித வாழ்வைச் சீர்படுத்த வேண்டுமென்றும் தணியாத வேட்கை ஏற்பட வேண்டும். அதற்கான தொடர் முயற்சிகள் இருக்க

வேண்டும். துன்பப்படுவோரின் வேதனையை உணரும் மனிதச் சதையிலான இதயம் உருவாக வேண்டும். மனித சுதந்திரத்தை மதித்து மாறுபட்ட கருத்துக்களுக்கும் இடம் ஒதுக்கும் ஜனநாயக மனநிலை இருக்க வேண்டும். உதவி பெற்று தன்னைச் சார்ந்து தனக்குக் கடன்பட்டவராக இல்லாமல் சொந்தக்காலில் நின்று தம்மையே வலுப்படுத்திக்கொள்ளும் மானிடரை உருவாக்கும் வழி வகைகளைத் தேடவேண்டும். இவையனைத்தையும் செய்வதற்குரிய தியாக மனநிலையும் இருக்கும் போதுதான் நாம் இறையனுபவம் பெற்றவராவோம் என்பதனை விவிலியம் நமக்கு உணர்த்துகிறது.

இவற்றை மனதில் கொண்டு இறையனுபவத்தின் வழி முறைகளாகக் கருதப்படும் சிலவற்றைத் திறனாய்வு செய்வோம்.

பக்திமுயற்சிகளும் நேர்ச்சைகளும்

எல்லா விதமான பக்திச் சடங்குகளிலும், ஜெபத்திலும், வழிபாட்டிலும் இறைவனின் உடனிருப்பு அனுபவமும் பாதுகாப்பு உணர்வும் இருக்கும். வாழ்விலே அலைக்கழிப்புகள் அதிகம். நோய்கள், விபத்துகள் போன்றவை ஏற்படும்போதும், ஏற்பட்டுவிடலாம் என்று எண்ணும் போதும் வாழ்வின் நிலையாமை பற்றிய உணர்வு நம்மை ஆட்கொள்கிறது. எதிர்காலம் பற்றிய பயம் நம்மை அலைக்கழிக்கின்றது. பாதுகாப்பும் துணையும் இன்றி அந்தரத்தில் தொங்குவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அறிவுடைமையும் அக்கறையும் இல்லாத முரட்டுத்தனமான சக்திகளின் பிடியில் இருப்பது போன்ற உணர்வு வாழ்வைப்பற்றியும் எதிர்காலத்தைப்பற்றியும் பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. இந்த அச்சம் மனிதரது பிரச்சினைகளை சமாளிக்கும் ஆற்றலை பலவீனப்படுத்தவோ முடக்கவோ செய்துவிடுகிறது.

இந்த வேளையில், இவ்வுலகமானது இறைவனது அன்பால் நிரம்பியிருக்கிறது என்ற நமது நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொண்டு, இறைவனின் உடனிருப்பு நம்முடன் உள்ளதை உணரும் போது கிடைக்கும் பாதுகாப்புணர்வு அவசியமானது. அது மனிதருக்கு பிரச்சனைகளை எதிர் கொள்ளும் புது சக்தியைத் தருகிறது. அச்சம் நீங்கி மனதிற்குத் திடம் கிடைக்கிறது. இதனைப் பக்தி முயற்சிகளும் சடங்குகளும் தந்தால் அது பொருத்தமானதே. இதை இறையனுபவம் என்றும் கருதலாம்.

நேர்ச்சைகள் போன்றவை நமக்கு நல்லது நிகழும் போது நன்றியை வெளிப்படுத்துவது என்ற நிலையில் நியாயமானவையே. ஆனால் அது இறைவனோடு நாம் நடத்தும் வாணிகம் என்ற வடிவம் பெறும்போது அதனால் வாழ்வுக்கு பயனில்லை. நேர்ச்சைகள் செய்யும் போது மட்டுமே இறைவனின் பராமரிப்பு என்ற தவறான புரிதலில் இறைவன் தரும் அன்பைக் குறுக்கி விடுகிறது; கொச்சைப்படுத்துகிறது. இறைவனின் கண்காணிப்பு நமக்கு எப்போதும் உண்டு என்னும் புரிதலில் நன்மை நிகழும் போது நன்றியும், தீமைகள் வரும்போது இதில் ஏதோ நன்மை இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் நிம்மதியும் மனத்தளவிலே ஆரோக்கியமாக வாழ்வதற்கு உதவுவனவாகும். "நேர்ச்சை" அணுகுமுறையில் நாம் எதிர்பாராதது நிகழும்போது கோபமும் இறைவன் மீதும் வாழ்வின் மீதும் வெறுப்பும் மிஞ்சுகிறது.

ஒருசிலர், மந்திரச் சடங்குகள் மூலம் இறைவனின் சக்தியைக் கொண்டு பிற மனிதருக்குத் தீங்கு ஏற்படுத்த விரும்புகின்றனர். வேறுசிலர் நேர்ச்சைகள் மூலம் பிறரைப் பற்றி அக்கறையின்றி பொதுநலன் கெடுதலடையவும் சொந்த வசதிகள் பெருகவும் விரும்புவது உண்டு. நாடு மழைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் போது தனது சொந்தத் தேவைக்காக மழை வேண்டாமென்று வேண்டுவது, தன்னைவிட அதிகமான தேவைகளில் இருப்பவரையும் மீறித் தனக்கு வேலை வாய்ப்புக்காக நேர்ச்சைகள் செய்வது போன்ற சுயநலத்திலே இறையனுபவம் இருப்பது சந்தேகமே.

ஜெபக்கொண்டாட்டங்கள்

ஆவியின் எழுப்புதல் கூட்டங்களும் அருங்கொடை ஜெபங்களும் இன்று புகழ்பெற்றுப் பரவி வருகின்றன. இவற்றில் நல்ல அனுபவங்கள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. கனிகளை வைத்தே மரங்களின் தன்மையைத் தீர்மானிக்க வேண்டும் என்று நற்செய்தி சொல்கிறது.

கனிகளைப் பார்க்கும் போது பலர் விவிலியம் வாசிப்பது, அதிகம் ஜெபம் செய்வது, கூச்சப்படாமல் பாடல்கள் பாடுவது என்று மதப் பழக்கங்களில் அதிக அக்கறை காட்டுவது புரிகிறது. இறைவனின் உடனிருப்பு அனுபவம் அதிகம் கிடைத்திருக்கலாம்.

வேறுசிலர் மனமாற்றம் அடைந்து குடிப்பழக்கத்தை நிறுத்தியிருக்கிறார்கள். இது அச்சத்தினால் ஏற்பட்டு மன இறுக்கத்தை உருவாக்கியிருந்தால் உண்மையான இறையனுபவம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இதன் தொடர்ச்சியாக அறிவுபூர்வமாகச் செயல்பட்டு அர்ப்பணத்தோடு தன் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய முன்வரும்போது இறைவன் இவர்களைத் தொட்டிருக்கிறார் என்று சொல்ல முடியும்.

இன்னும் சிலருக்கு உடல் நோய் குணமாகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உடலின் இறுக்கத்தைத் தளர்த்தி நோயை எதிர்த்துச் செயல்படும் ஆற்றல் பெருகும் போது உடல்நலம் பெருகலாம். அச்சத்தினால் இறுகியிருக்கிற மனம் இறைவனின் உடனிருப்பு அனுபவம் பெறும் போது எளிதாக தளர்ந்து வரும். மன இறுக்கத்தால் ஏற்படும் உடல்நோய்களும் மனநோய்களும் இவ்வாறு எளிதாகக் குணமடையும். நமக்குத் தெரியாத வகையில் இறையாற்றல் புகுந்தும் நோய் குணமாகலாம்.

ஜெபக்கூட்டங்களை நடத்தி இவ்விதமான குணம் பெறுதலுக்குவகை செய்யும் பலரையும் மக்கள் இவர்களே இறை அபிஷேகம் பெற்றவர்கள், இறையனுபவம் பெற்றவர்கள் என்று கருதுகிறார்கள். இதற்குரிய தீவிரமான விளம்பரங்களும் நடைபெறுகின்றன. சாதாரணமாக நடைபெறாத வேற்றுமொழி பேசுதல் போன்றவையும் இறை அனுபவத்தின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

இது பற்றி வேதாகமம் தெளிவாகவே இருக்கிறது. 'அன்பில்லையேல் இதில் ஒன்றுமில்லை' என்கிறார் பவுல் அடியார் (1கொரிந்தியர்13:1). இப்படிச் செய்கிறவர்களில் சிலர் நெறிகெட்டவர்களாகக் கூட இருக்க முடியும் என்று நற்செய்தி சொல்கிறது.

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர். அந்நாளில் பலர் என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல

புதுமை நடக்கிறது என்று சொல்லப்படுகின்ற இடங்களில் இறையனுபவம் இருக்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை.

உளவியல் விளக்கப்படி நலன்கள் கிடைப்பதாக இருந்தாலும் நமக்குப்புலப்படாத வகையில்

> செய்யவில்லையா?' என்பர். அதற்கு நான் அவர்களிடம், 'உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னை விட்டு அகன்று போங்கள்' என வெளிப்படையாக அறிவிப்பேன்.
> மத்தேயு 7:21–23

குணமாதல் ஏற்பட்டாலும் எல்லாவற்றையும் இறைவனின் பராமரிப்பாகவே பார்க்க வேண்டும். ஆனால் மருந்து குடிப்பதும் உளவியல் மருத்துவம் பார்ப்பதும் இறை விசுவாசத்தின் குறைபாடு என்று விளக்குபவர்கள் படைப்பிற்கும் மனித அறிவுக்கும் இறைவனே தொடக்கம் என்பதை மறுக்கிறார்கள். இறைவனின் வெளிப்பாடு இவர்களது மாயஜால வித்தைகளோடு குறுகிப் போவது கிறிஸ்தவ விசுவாசத்தின் சரியான விளக்கம் அல்ல.

இந்த வகைகளில் நலன் பெறுகிறவர்கள் இறைவனின் பராமரிப்பைச் சுவைப்பதாக நம்புவது சரியே. இறையனுபவம் என்பது தொடர் நிகழ்வாகும். நலன்களை வழங்கும் இறைவன் அதோடு ஒரு அழைத்தலையும் தருகின்றார்; ஒரு பணியையும் கொடுக்கின்றார். அப்போது தான் பெற்ற நலன்களைப் பிறரும் பெறுவதற்கு முயல்வதும், அந்த வகையிலே நலன்களைப் பெற முடியாதவர்களுக்கு மாற்று வழிகளைச் சிந்திப்பதும் என்று அவர்களது ஈடுபாடு விசாலமாகி வரும். அவ்வாறு விரிந்து வராத நிலையில் இறையனுபவத்தின் வீரியம் சந்தேகத்திற்குரியதே.

ஆழ்நிலை தியானங்களும் மௌன மடங்களும்

உலகிலிருந்து ஒதுங்கி நின்றுஆழ்நிலை தியானத்தில் தன்னுணர்வு பெற்று தனித்து வாழ்வோரின் செயல்பாடு சாதாரணமாக உயர்ந்த இறை அனுபவமாகக் கருதப்படுகிறது. புலன்களை அடக்கி மனிதரில் இருக்கும் உயர்ந்த சக்தியான ஆவியை அனுபவிக்க எடுக்கும் முயற்சி இது. ஆவியின் அனுபவத்திற்கும் இறையனுபவத்திற்கும் மயிரிழை வேற்றுமையே உள்ளது. இறையனுபவத்தில் நம்மைக் கடந்து நிற்கும் ஆற்றல் நம்மை ஆட்கொள்கிறது. மனித ஆவியின் அனுபவத்திலே நம் உயர்ந்த நிலையே நம்மை ஆட்கொள்வதாக, நமக்கு ஒத்துப்போவதாக, நம்மை நியாயப்படுத்துவதாக அமைய முடியும்.

உலக வாழ்வின் ஏக்கங்களிலும் சிக்கல்களிலும் பங்கெடுக்காமல், தனிமையிலே ஒதுங்கியிருந்து மனதையும் உணர்வுகளையும்

சமநிலைப்படுத்தி நிம்மதியாக இருப்பது தனிமனிதருக்கு இன்பத்தைத் தரலாம். இதனால் மாந்தரும் உலகும் நலம் பெற வேண்டும். மனதைச் சீராக்கி ஒருமுகப்படுத்தும் அனுபவத்திலே மனித வாழ்வைச் சீராக்கும் அர்ப்பணமும் அதற்குரிய வழிவகைகளைத் தேடலும் இல்லையெனும்போது இதை இறையனுபவம் என்று கருத முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. அந்த அக்கறையும் கரிசனையும் தோன்றும்போது வாழ்விலிருந்து முழுமையாக ஒதுங்கியிருப்பது இயலாததாகிவிடும். வாழ்வியக்கத்தில் எல்லோரும் ஒரே மாதிரியாக ஈடுபட வேண்டியதில்லை. சந்நியாசிகள், ஆசிரமவாசிகள் மௌன மடத்துத் துறவிகளின் ஈடுபாட்டு முறை வித்தியாசமாக இருக்கலாம்.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

1. இறைவனைப் பற்றிய சிந்தனை ஏன் எழுகிறது?

2. இறைவன் நம்மிலிருந்து அகன்று இருப்பவரா? நம்மோடு இயங்குபவரா? உங்கள் கருத்து என்ன?

3. விவிலியம் இறைவனை எப்படிப்பட்டவர் என்று புரிந்து கொள்கிறது? அதற்குக் காரணம் என்ன?

4. விடுதலை அனுபவம் உணர்த்தும் இறைவனின் பண்புகள் எவை?

5. இறையனுபவத்தின் உரைகள் எது?

6. அதன் பின்னணியில் பக்திமுயற்சிகள், நேர்ச்சைகள், எழுப்புதல் கூட்டங்கள், ஆழ்நிலை தியானம் போன்றவற்றிற்கும் இறையனுபவத்திற்கும் உள்ள தொடர்பு யாது?

4

மதம்

மதங்களற்ற இறைஉணர்வு

கடவுளைப்பற்றி நாம் சிந்திக்கும் போது மதங்களைப் பற்றியும் நாம் பேச வேண்டிய அவசியம் வருகிறது. இன்று கடவுள் உணர்வை வளர்த்து வருவதில் மதங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

மதங்கள் எவ்வாறு தோன்றின? இறை அனுபவத்திற்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பு யாது? இறையுணர்வு மனித முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்கிறார்களே. அதில் உண்மை உள்ளதா? உண்டு என்றால் அதன் காரணம் இறைஉணர்விற்கும் மதங்களுக்கும் இருக்கும் தொடர்பு தானா? என்பவை பற்றி இந்தப் பகுதியிலே ஆய்வு செய்வோம்.

மனிதர்களுக்கு இந்த உலகம். அதன் நுட்பம். வசீகரம் ஆகியவை ஆச்சரியத்தைத் தருகின்றன. இதன் விளைவாக இரண்டு

விதமான உணர்வுகள் ஏற்படுகின்றன. ஒன்று பிரமிப்புக் கலந்த மகிழ்ச்சி; மற்றொன்று பயம். ஆட்கொள்ளப் படுகின்ற அனுபவத்திலிருந்தே இவை தோன்றுகின்றன. உலகின் ஆற்றல்களும் நிகழ்வுகளும் மனிதரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை அல்ல என்றும், அவை மனிதரைக் கட்டுப்படுத்துகின்றன என்றும் உணரும் போது இதனை மகிழ்ச்சியாகவும் அனுபவிக்கலாம், பயமாகவும் எண்ணலாம்.

தமது கட்டுப்பாட்டை மிஞ்சி தம்மைக் கடந்து நிற்கும் உலக இயக்கம் தமக்கு சாதகமானதாக உணரும் போது மகிழ்ச்சியும், பாதகமானதாக உணரும் போது பயமும் ஏற்படுகின்றது. மனித உயிரின் தோற்றம் மகிழ்ச்சியையும், இறப்பு பயத்தையும் ஏற்படுத்துகிறது.

இந்த அனுபவத்திற்கு மனிதர் விளக்கம் தேடினர். இந்த உலக இயக்கம் எங்கிருந்து வருகிறது? எப்படி வருகிறது? ஏன் வருகிறது? என்ற கேள்விகளுக்கு விடை தேடினர்.

இந்தக் கேள்விகளுக்குத் தமது கற்பனை ஆற்றல் மூலம் விடைகள் தந்தனர். தரையிலிருந்து திடீரென்று செடிகள் முளைத்ததும், காரணம் தெரியாமல் குழந்தைகள் பிறந்ததும் ஆச்சரியத்தைத் தந்தது. இதன் காரணத்தைக் கற்பனை வடிவிலே புரிந்து கொண்ட போது, தம்மைப் போன்று, கண்ணுக்குத் தெரியாத ஒன்று, ஒரு ஆவி இதைச் செய்கிறது என்ற முடிவுக்கு வந்தனர். இறை நம்பிக்கை தொடங்கியது.

நல்லதைச் செய்வது நல்ல ஆவி என்றும் தீயதைச் செய்வது தீய ஆவி என்றும் முடிவு செய்தனர்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் வாழ்க்கையை வளமாக்குவதற்கு நல்ல ஆவியை திருப்திப் படுத்தி பல நன்மைகளைப் பெற முயன்றனர். தீய ஆவிக்கு வேண்டியதைக் கொடுத்து தீமைகளைத் தவிர்க்க முயன்றனர். நல்ல ஆவி செய்யும் நன்மைகளுக்கு நன்றி சொல்வதில் நிறைவு கண்டனர். பல்வேறு பழக்க வழக்கங்கள் தோன்றின. இதனால் மதங்களுக்கு அடித்தளமிடப்பட்டது என்றாலும் கூட இந்தக் கட்டத்தில் மதங்கள் தோன்றவில்லை. எல்லாமே சமூகப் பழக்கங்களாகவே இருந்தன. அறுவடை முடிந்ததும் கதிரவனுக்கும் மழைக்கும் நல்ல ஆவிக்கும் நன்றியாக ஆடிப்பாடி அறுவடைவிழா கொண்டாடினர். இது ஒரு சமூக விழாவாகவே இருந்தது. மதம்

என்ற அமைப்பு உருவாகியிருக்கவில்லை. மக்கள் குழுவின் தலைவரே, வேட்டையாடுவதற்கும் பயிரிடுவதற்கும் மக்களை ஒருங்கிணைத்த சக தொழிலாளியான குழு தலைவரே. இந்த விழாக்களுக்கும் சடங்குகளுக்கும் தலைமை தாங்கினார்.

மனிதரின் தொடர் தேடல் கூர்ந்த கவனிப்பாகவும் வெளிப்பட்டது. அப்போது வேறு சில காரியங்கள் புலப்பட்டன. வித்துக்களிலிருந்து செடிகள் வருகின்றன என்பது தெரிந்தது. அறிவியல் வளர்ந்தது. அதனால் வியப்பு குறைந்து விடவில்லை. இன விருத்திக்காக பூ, விதை, செடி என்றிருக்கும் இயற்கையின் சீரான அமைப்பைக் கண்டு ஆச்சரியம் அதிகரிக்கவே செய்தது. இப்படியாக, அறிவியலும் மதமும் இணைந்து வளர்ந்தன. ஆதாரத்துடன் அறிவியல் முறையில் விளக்க இயலாதவை பற்றிக் கற்பனைகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

வளர்ச்சி பெரிதும் அடையாத ஆதிகாலப் பொதுவுடமை சமுதாய அமைப்பின் காலம் அது. உணவு சேகரிப்பது உண்பதற்கே போதவில்லை. வேட்டையாடியதை சேமித்துப் பாதுகாக்க வழியின்றி சமுதாயம் வளர்ச்சி மிகவும் குன்றியிருந்தது. ஆனால் ஏற்றத்தாழ்வு இல்லாத நிலை என்று சொல்லலாம். அனைத்தும் குழுவாகவே செய்யப்பட்டன.

மதங்களின் ஆரம்பம்

இந்த நிலையிலே அறிவியல் வளர்ந்து, கருவிகள் உருவாகி நாகரீகம் உருவாகும் போது செழிப்பு ஏற்படுகிறது. இந்தச் செழிப்பை அனுபவிக்க ஏற்பட்டப் போட்டியிலே ஆண்டான் அடிமை என்றும் நிலக்கிழார், குடியானவன் என்றும் சமூகம் கூறுபடுத்தப் படுகிறது. ஏற்றத்தாழ்வு உருவாகிப் பெருகுகிறது. உழைப்பவனுக்கு, நிலம் போன்ற இயற்கை வளங்களை சொந்தமாகக் கொடுக்காமல், பிறரது உழைப்பின் பயனை தானே அனுபவித்துக் கொள்வதற்கு நிலத்தின் மீது உரிமையைத் தானே எடுத்துக் கொண்டு, அனைத்து அதிகாரங்களையும் தன்னில் குவித்து வைத்திருக்கும் அரசர்கள் உருவானபோது அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாத இந்த அமைப்பை நியாயப்படுத்த ஒன்று தேவைப்பட்டது. இதற்கு இறை உணர்வும் மதமும் சாதகமாக இருக்கும் என்பதை உணர்ந்த ஆளும் வர்க்கம் இறையுணர்வை வளர்க்கும் பொறுப்பைத்தானே எடுத்துக் கொண்டது. தாராளமாகப் பண உதவி செய்தது.

சமய உணர்வை வளர்ப்பதற்கென்று தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கென்று தனி நபர்கள், குடும்பங்கள் முழுநேரப்பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். பொருளாதார உற்பத்தித் தொழில் செய்யாமலே உண்பதற்கு வசதியாக நிலங்கள் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. அரசனது ஏற்பாட்டிலேயே இலவச உணவு போன்ற வசதிகள் செய்யப்பட்டன. தெய்வங்களுக்கு அதிகப் பணச் செலவில் கோவில்கள் எழுப்பப்பட்டன. மதப் பணியாளர்களுக்குக் கால அவகாசம் இருந்ததால் இறைநம்பிக்கை பற்றிய விரிவான விளக்கங்களையும் கோட்பாடுகளையும் உருவாக்கினர். அரசனின் கீழ் இருப்பது என்பது அவன் நம்பும் தெய்வங்களை ஏற்றுக்கொள்வது என்றானது. இதற்குரிய விரிவான சடங்குகள், சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு **இறைநம்பிக்கை இறுக்கமான நிறுவனமாகி, மதம் தோன்றிற்று.**

மதங்களின் சீரழிவு

மதம் பரப்புதல் மதப்பணியாளரின் முக்கியமான சேவையானது. **மதம் பரப்புதலும் அரசனின் ஆட்சியை விரிவாக்குதலும் ஒரே காரியமாக இருந்ததால் அரசியல் ஆதரவோடு மதம்** பரப்புதல் நடந்தது. ஆளும் வர்கங்களுக்கிடையே இருந்த மோதல்கள் மதப்பிணக்குகளாக வெளிப்பட்டன. **ஆளும் வர்கத்தின் உதவியோடு வளர்ந்து வந்த மதம்** மேலிருந்துள்ள நிர்பந்தத்தாலும், நன்றிக் கடனாகவும் **ஆளும் வர்கத்தை நியாயப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது.** ஆளும் வர்கத்தைச் சார்ந்த அரசர்கள் திரு எண்ணெயால் அர்ச்சிக்கப்பட்டார்கள். சில சமூகங்களில் அரசர்கள் இறைவனின் மகனாக சித்தரிக்கப்பட்டார்கள். மதத்தலைவர்களும் அரசர்கள், சிற்றரசர்களாகி ஆளும் வர்கத்திற்கு மத அங்கீகாரமும் இறை அங்கீகாரமும் வழங்கினர். சில இடங்களில் அரசர்களே மதத்தலைவர்களாகவும் இறைவனுக்கு நெருக்கமாக இருந்து இறை அருளைப் பெற்றுத் தருபவர்களாகவும் கருதப்பட்டனர். இறையாசீர் மேல்குடி மக்களுக்கும் கடவுள் தண்டனை அடித்தட்டு மக்களுக்கும் இருப்பதாக விளக்கப்பட்டது. இந்த நில உடைமைச் சமுதாயத்தில் ஆளும் வர்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்து வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முயற்சிப்பது என்பது கடவுளுக்கெதிரான புரட்சியாகவே சித்தரிக்கப்பட்டு கண்டிக்கப்பட்டது.

[illegible]

[illegible] அதிகாரபூர்வமான மதம் [illegible]

[illegible] இணைத்துக் கொண்டது. [illegible] அதிகாரபூர்வமான மதத்தில் சில [illegible] பல பக்தி முயற்சிகள் உருவாயின.

இந்த வரலாற்றுப் போக்கிலே அறிவியல் வளர்ச்சியும் [illegible]. ஆனால் அது பாமர மக்களுக்கு எட்டாக்கனியாகவே இருந்தது. இதனால் பாமர மக்களின் சமய பழக்க வழக்கங்களிலே [illegible] மூடநம்பிக்கைகளும் விரவியே இருந்தன. [illegible] தீய ஆவியினால் ஏற்படுவதாகவும் [illegible] நோயைக் குணமாக்கிவிடலாம் என்றும் நம்பினர். மூடநம்பிக்கைகள் பாமர மக்களை அடிமைப்படுத்தி வைப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதால் அதிகாரபூர்வமான பெருமத [illegible] சிறுமதங்களிலுள்ள மூடநம்பிக்கைகளைப் போக்குவதில் ஆர்வம் காட்டவில்லை.

மதம் ஒரு பிற்போக்கு சக்தியாகவும் உருவெடுத்தது.

மதச்சீர்திருத்தம்

இறை நம்பிக்கையும் இறையனுபவமுமே மதத்தின் ஆணிவேர் ஆகும். அன்பும் அறிவுமுள்ள ஆவியின் ஆற்றல் மனிதரை ஆட்கொள்ளும் போது தம்மையும் கடந்து பிறரில் இணைந்து பொது நலனை நாடும் ஆற்றல் உருவாகிறது.

மதங்கள் ஆளும் வர்கத்தின் கைப்பாவையானாலும் எப்போதும் எல்லோரும் உண்மைக்கும் நன்மைக்கும் புறம்பே பிற்போக்குத் தனங்களுக்கு முழுக்க முழுக்க ஆதரவு கொடுத்துக் கொண்டிருப்பதில்லை. மதங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இறையனுபவம் ஓரளவாவது உருவாகிக் கொண்டே இருக்கும்.

இறையனுபவம் பொதுநல வேட்கையை உருவாக்கி, உண்மை, அன்பு, நீதி ஆகியவற்றை ஆதரிக்கும் ஆற்றலைத் தருகிறது. இதனால் மதங்களின் செயல்பாடுகளைத் திறனாய்வு செய்யும் சூழ்நிலை உருவாகிறது. இந்தத் திறனாய்வினால் மதத்தலைவர்கள் தம் வசதிகளை இழக்கும் சூழ்நிலை வரும். அதிகாரவர்க்கம் மத அமைப்புகளுக்குக் கொடுக்கும் ஆதரவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். இது மத அமைப்புகளோடு நெருங்கி இருக்கிறவர்களுக்குப் பாதகமாக அமையலாம். இருப்பினும் நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று உண்மையைச் சொல்லும் போது கிடைக்கும் ஆத்ம திருப்தி, உடல் சாவை விட ஆத்ம சாவே பேரிழப்பு என்ற புரிதலில் கிடைக்கும் மனத்தெம்பு தனிமனிதருக்கும் சமுதாயத்திற்கும் மதங்கள் ஆற்றும் பணியை நடுநிலையாக நின்று விமர்சனம் செய்யும் சுதந்திரத்தைத் தருகின்றன.

இதன் விளைவாக மதங்களிலே சிறிதும் பெரிதுமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன; மறுமலர்ச்சிகள் தோன்றியுள்ளன.

ஜாதி அமைப்பை கட்டிக்காத்து பிராமணர்களின் ஆதிக்கத்தை ஆதரித்துக் கொண்டிருந்த பிராமணீய இந்து மதத்திலே இடைத்தட்டு மக்கள் பெருவாரியாகவும் அடித்தட்டு மக்கள் சிறிதளவும் ஜாதியைக் கடந்து சமூக அங்கீகாரம் பெற வகைசெய்யும் முறையிலே பக்தி இயக்கம் தோன்றிற்று.

அதைப்போலவே கிறிஸ்தவ மதத்திலும் பல சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன.

இதில் 1962-லிருந்த 1965 வரை நடந்த இரண்டாம் வத்திக்கான் சங்கமும் அதற்கு வகைசெய்து அதற்கு முன் தோன்றிய வலுவான இயக்கங்களும் அதைத் தொடர்ந்து உள்ள செயல்பாடுகளும் குறிப்பிடத்தக்கன.

ஓய்வுநாள் மனிதருக்காக, மனிதர் ஓய்வு நாளுக்காக அல்ல என்ற கிறிஸ்துவின் இறையனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு வழிபாட்டில் லத்தீன் பயன்படுத்துவது மனிதருக்கு எவ்வாறு உதவுகிறது என்ற கேள்வியிலே வழிபாட்டுச் சீர்திருத்த இயக்கம் தொடங்கியது. மனித மைய மறைக்கல்வி என்று மந்திரங்களைப் படித்துக் கொண்டிருந்த மறைக்கல்வியிலே சீர்திருத்த இயக்கம் வடிவெடுத்தது. உலகப்போர்களிலே தோளோடு தோள் நின்று இன்பதுன்பங்களில் பங்கெடுத்த பல்வேறு சபைகளைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் தம் ஒற்றுமையை உணர்ந்த பின்னணியிலே ஒன்றிப்பு இயக்கம் தோன்றியது. ஏழை மக்கள் தாமாகவே விவிலியத்தை நெருங்கிச் சென்ற போது அதிகாரபூர்வமான மதம் மறைத்து வைத்திருந்த விடுதலை இறையனுபவத்தைப் பெற்று அடித்தளக் கிறிஸ்தவ சமூகங்களிலும் இடதுசாரி அரசியலிலும் ஈடுபடத் துணை புரிந்த விடுதலை இறையியல் இயக்கம் தோன்றியது. இவற்றில் முன்னணியில் நின்ற பலரையும் கிறிஸ்தவ மத நிறுவனத் தலைவர்கள் வேண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்தனர்; ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும் இவர்கள் தயங்கவில்லை.

திருச்சபைத் தலைமையிலும் இறையனுபவத்தின் உந்துதல் ஏற்பட்ட போது ஒரு புரட்சியே உருவெடுத்தது. அதுவே இரண்டாம் வத்திக்கான் சங்கம். சந்தேகத்திற்குரிய இறையியலாளர் என்று கருதப்பட்ட சிலர் வத்திக்கான் சங்கத்தின் ஆலோசகரான அற்புதம் நிகழ்ந்தது.

மதச்சீர்திருத்தம் என்பது சாத்தியமானது; அது இன்றியமையாதது. அதற்கு ஆக்கப்பூர்வமான விமர்சனம் தேவை.

மதச்சடங்குகள், பழக்க வழக்கங்கள், மத அமைப்புகள், மதத்தலைமை இவையெல்லாமே நடுநிலையோடு விமர்சிக்கப்பட

வேண்டும். சமுதாயத்தில் மதம் ஆற்ற வேண்டிய பணியைச் செய்யத் தூண்டுவதற்கு இது ஒன்றே வழி.

இன்றைய அறிவியல் வளர்ச்சியைக் கணக்கிலெடுத்து இன்று செயல்பட்டு வரும் மதம் தன்னை சீரமைத்துள்ளதா? இந்தச் சீரமைப்புப் பணியில் மதத் தலைவர்கள் ஆர்வம் காட்டுகிறார்களா? இல்லையென்றால் இதற்குக் காரணமான புரிதல், இறையியல் என்ன? என்றெல்லாம் ஆய்ந்துப் பார்த்து மதமானது சீரமைக்கப்பட வேண்டும்.

இன்று நிலவுகிற சமூக ஏற்றத்தாழ்வில் மத விளக்கங்கள் தருகின்ற பொருள் அல்லது அர்த்தம் என்ன? இந்த ஏற்றத் தாழ்வுகளை அங்கீகரித்து அவற்றை நியாயப்படுத்துகின்றனவா? அதற்கு பயன்படுத்தும் வழி வகை என்ன? ஏழ்மையைப் போக்குவதில், மனிதர்களின் சகோதரத்துவத்தை வளர்ப்பதில் மதத்தின் பங்கு என்ன?

ஒவ்வொரு மதத்தையும் நிர்ணயிக்கின்ற அடித்தளமான இறையனுபவம் இருக்கும். அந்த அனுபவத்தில் சமூகத்தை சீர்திருத்துவதற்கான கூறுகள் உள்ளனவா? நம்மைப் பொறுத்த மட்டில் விவிலியம், திருச்சபை பாரம்பரியம், திருச்சபை படிப்பினை ஆகியவற்றில் சமுதாய மாற்றத்திற்கான உந்து சக்தி உள்ளதா? அது போதிய அளவு பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? அல்லது இவற்றை உரு திரித்து சமுதாய மாற்றம் என்ற இலட்சியம் நிறைவேறாமல்செய்யப்படுகிறதா?

இந்தப் பின்னணியில் மதத்தின் எல்லா பகுதிகளும் திறனாய்வு செய்யப்பட வேண்டும். திறனாய்வு செய்ய இயலாது என்று சொல்லும் அளவுக்குப் புனிதமானது எதுவும் இல்லை. திறனாய்வையும் கடந்து நிலைத்து நிற்பதே புனிதமானது.

பொறுப்புணர்வுடன் செய்யப்படும் இந்தத் திறனாய்வே இன்றைய தேவை.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

1. இறை நம்பிக்கைக்கும் மதத்திற்கும் தொடர்பு உள்ளதா? உண்டு என்றால் என்ன?

2. அறிவியலினால் இறைநம்பிக்கை குறைந்துள்ளதா? அறிவியலுக்கும் இறைநம்பிக்கைக்கும் உள்ள தொடர்பு என்ன?

3. ஆதிக்க வர்க்கம் இறைநம்பிக்கைக்கு ஆதரவு தந்து மதங்களை வளர்த்து விட்டிருக்கிறது. இதனால் அந்த வர்க்கம் பெற்ற பயன் என்ன?

?

4. ஆளும் வர்க்கத்தினரை ஆதரித்த மதமானது அவர்களுக்கு எதிரான ஏழை மக்களின் ஆதரவை எவ்வாறு தக்க வைத்துக் கொண்டது?

5. சிறுமரபு என்னும் கிராமிய மதங்களின் தோற்றத்திற்குக் காரணம் என்ன?

6. மதச்சீர்திருத்தத்திற்குத் தடைகள் எவை?

7. மதச்சீர்திருத்தம் சாத்தியமாவது எதனால்?

8. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னணி என்ன?

5

இறைவாக்கினர்கள்

மதச்சீர்திருத்தத்திற்குக் காரணமாக இருப்பவர்களை இறைவாக்கினர் என்று அழைப்பது விவிலிய மரபு. இறையனுபவத்தால் ஆட்கொள்ளப்பட்டு, வாழ்க்கைக்கு விளக்கம் அளிப்பவர்களே இறைவாக்கினர்கள்.

இறைவாக்கினரின் இறையனுபவம்.

"இறையனுபவம்" என்பது ஆழமான அனுபவம். கடந்து நின்று அனைத்தையும் முழுமையாகப் பார்க்கின்ற அனுபவம். சந்தர்ப்ப சூழ்நிலையை எவ்வாறு சமாளிப்பது, அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்று மட்டுமல்லாமல் அந்தச் சூழ்நிலையைக் கடந்து நின்று முழுமையாகப் பார்த்து, தனது விருப்பத்தை மட்டுமல்ல, தனது விருப்பத்திற்கு எதிராக நிகழ்வுகள் தரும் செய்தியையும் அர்த்தத்தையும் பறை சாற்றுகிற நிலையே இறைவாக்குரைத்தல். ஆட்கொள்ளப்படுபவர் தம் விருப்பு வெறுப்புகளையும் சிந்தனைகளையும் மட்டும் பிரதிபலிப்பதில்லை.

தமக்குப் புறம்பே இருந்து வருபவற்றையும் உணரும் பக்குவமும் உணர்த்தும் ஆற்றலும் கொண்டவர்கள்.

இறைவாக்கினர் என்ற வார்த்தை விவிலிய மரபைச் சார்ந்ததாக இருந்தாலுமே இறைவாக்கினர் தன்மை கொண்டவர்கள் உலக வரலாற்றில் பல இடங்களிலும் தோன்றியிருக்கிறார்கள். ரிஷிகள், முனிவர்கள், குருக்கள் போன்ற பல வடிவங்களில் இறைவாக்கினர் தோன்றியுள்ளனர். மதங்களுக்குக் காரணமானவர்களும் பலவேளைகளில் இறைவாக்கினர்களாகவே இருந்துள்ளனர்.

மனிதர் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவது என்பது கடவுளுடைய செயல் என்ற அனுபவம் தான் இஸ்ராயேல் மக்களின் அடிப்படையான இறை அனுபவம் என்று பார்த்தோம்.

இறைவாக்கினரும் உடன்படிக்கையும்

இந்தக் கடவுள் தம்மோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாகவும் அவர்கள் புரிந்து கொண்டனர்.

> கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே: நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன்; என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன். மாறாக என்மீது அன்பு கூர்ந்துஎன் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்புகாட்டுவேன்.
>
> விடுதலைப்பயணம்20.1-6

இங்கே தரப்பட்டுள்ள விவிலியப் பகுதியில் முதலில் இறைவன் தன்னைப் பற்றியே ஒரு விளக்கம் தருகிறார். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர் நானே என்கிறார். இந்த விடுதலைக் கடவுளாகிய தன்னைத் தவிர வேறு தெய்வங்கள் இருத்தல் ஆகாது என்கிறார். வேறு தெய்வங்களின் அடையாளமாக பயன்படுத்தி வந்த சிலைகள் இஸ்ரயேலர் மத்தியில் இருக்கக்கூடாது என்கிறார். விடுதலை தெய்வம் தன்னை வழிபட்டால், தானும்

அவர்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்து அன்புகாட்டி பாதுகாப்பதாகவும் இல்லையென்றால் தனது பராமரிப்பு இராது என்றும் எச்சரிக்கின்றார். **அடிமை நிலையை இஸ்ரயேல் மக்கள் நாடிச் செல்லக்கூடாது.**

அதுமட்டுமல்ல, **அடிமைத் தனத்தை பிறர் மீதும் சுமத்தக்கூடாது. அடிமைத் தனத்தையே வெறுக்க வேண்டும்.**

அன்னியனுக்கு நீ தொல்லை கொடுக்காதே! அவனைக் கொடுமைப்படுத்தாதே. ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராயிருந்தீர்கள். விதவை, அனாதை யாருக்கும் நீ தீங்கிழைக்காதே. நீ அவர்களுக்குக் கடுமையாகத் தீங்கிழைத்து அவர்கள் என்னை நோக்கி அழுது முறையிட்டால், நான் அவர்கள் அழுகுரலுக்குச் செவிசாய்ப்பேன். மேலும் என் சினம் பற்றியெரியும். நான் உங்களை என் வாளுக்கு இரையாக்குவேன். இதனால் உங்கள் மனைவியர் விதவைகளாவர். உங்கள் பிள்ளைகள் தந்தையற்றோர் ஆவர்.
விப 22:21-24

விடுதலைப்பயணம் 22:21-24 -ல் அந்நியரை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது விவரிக்கப்பட்டிருக்கின்றது ஓரினத்து மக்கள் நட்பு உறவு அடிப்படையில் இணைந்து வாழும் போது அவர்களோடு தொடர்பு இல்லாத பிறர், அகதிகளாக வந்து சேர்ந்தால் என்ன நிகழும் என்பதை இஸ்ரயேலர் அனுபவத்திலேயே தெரிந்தவர்கள். உரிமைகள் மறுக்கப்பட்டு சுரண்டலுக்கு அடிமையாகி தன்மானமின்றி வாழ வேண்டிய நிலை வரும். இது எந்த மனிதருக்கும் ஏற்படக் கூடாது என்பது இஸ்ரயேல் மக்களின் கரிசனையாக இருக்க வேண்டும் என்கிறார் இறைவன். அப்படி இல்லையென்றால் இறைவனின் ஆதரவு மறுக்கப்படுவது மட்டுமல்ல, எகிப்தின் ஆளும் வர்க்கத்தை, பாரவோனை எவ்வாறு இறைவன் எதிர்த்தாரோ அதைப்போலவே இஸ்ரயேலரை எதிர்ப்பார் என்றும் அது அவர்களது நல்வாழ்வைப் பாதிக்கும் என்றும் இறைவன் எச்சரிக்கிறார். எனவே அந்நியருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று பணிக்கப்படுகிறது. விதவைகளும் அநாதைகளும் இவ்வாறு பாதுகாப்பு இல்லாதவர்களே. இவர்களுக்கும் தனிக்கவனம் தேவை.

இன்னும் **விப. 22 : 25-27; 23 : 3,6,9-11; லேவியர் 25 : 35-38** போன்ற பகுதிகளில் ஏழைகள், பலவீனர் மீது காட்டவேண்டிய கரிசனை பற்றி விளக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரயேல் மக்கள் விடுதலையான நல்வாழ்வின் கருவியாக இருக்க வேண்டும் என்பதே இறைவனோடுள்ள உறவினால், உடன்படிக்கையினால் அவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பாகும். அவர்கள் பின்பற்றும் மதமும் அது போலவே இருக்க வேண்டும்.

விடுதலை
உடன்படிக்கையின்
வரலாறு

துவக்கக் காலத்தில் இஸ்ரயேலர் ஓரளவுக்கு இதனைகடைபிடிக்க முயன்றனர். அப்போது நீதிபதிகள் என்பவர்கள் இஸ்ராயேலரை ஆண்டு வந்தனர். அவர்களும் மக்களும் கோத்திரங்களாக இருந்தனர். பழங்குடி மக்களான அவர்களில் பெரிய வளர்ச்சி இல்லை. இருப்பதை வைத்து மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அப்போது கடவுளுக்கென்று ஆலயமில்லை. கடவுளின் உடன்படிக்கையின் பத்துக் கட்டளைகள் அடங்கிய பேழையே அவரது பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. அவர்கள் எங்கு சென்றார்களோ அங்கு பேழையையும் தூக்கிக் கொண்டு சென்றனர். கடவுள் அவர்களோடு நாடோடிப் பயணியாக இருந்தார் என்று சொல்ல முடியும்.

நீதிபதிகள் என்பவர்கள் அரசர்களைப் போல முழுநேரப் பொறுப்புடையவர்கள் அல்ல. எல்லா மக்களோடும் சேர்ந்து அவர்களும் உணவுக்காக உழைத்தனர். தேவையின் போது மக்களைக் கூட்டி முடிவுகள் எடுத்தனர். ஏற்றத்தாழ்வின்றி சமமாக இஸ்ராயேலர் வாழ்ந்தனர்.சமத்துவம் பேணப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே இயற்கையின் அடையாளமான நிலம் தனிமனிதருக்குச் சொந்தமாக இருக்கக்கூடாது என்ற ஆதிப்பழங்குடி மக்களின் பண்பாட்டை இறைவன் விரும்புவதாகவே ஏற்று செயல்பட்டு வந்தனர். நிலம் சமூகத்திற்கு, கோத்திரத்திற்குச் சொந்தமானதாகக் கருதினார்கள்.

நிலமானது தனியார் சொத்துடைமை ஆகிவிடக் கூடாது என்பதிலே இஸ்ரயேல் சமூகமானது கவனமாக இருந்தது. எனவே தான் நிலம் இறைவனுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் தனிமனிதர்கள் அதனை வழிப்போக்கர்களைப்போல பயன்படுத்திக் கொள்ளலாமே ஒழிய முழுமையாகச் சொந்தம் கொண்டாடி விற்பது வாங்குவது என்ற நடவடிக்கைகளில் இறங்கக் கூடாது என்றும் இறைவன் கட்டளை கொடுத்ததாக விவிலியம் சொல்கிறது **(லேவியர் 25:23)**.

இந்த ஒழுங்கைக் கடைபிடிப்பதில் சற்று சிரமம் ஏற்பட்டதால் வேறு ஒரு ஏற்பாட்டை உருவாக்கிக் கொண்டார்கள். ஜுபிலி ஆண்டு என்று ஒன்றை அறிமுகப்படுத்தினர். 49 ஆண்டுகள் முடிந்து 50-ம் ஆண்டு தொடக்கத்தில் ஜுபிலி ஆண்டு அறிக்கையிடப்பட்டது. யாராவது தனது சொத்தை வேறு ஒருவருக்கு விற்றிருந்தால் அவர் இந்த ஜுபிலி ஆண்டில் அதனை நஷ்ட ஈடும் தராமல் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் (லேவியர் 25 : 24-28).

இயற்கை வளங்களும் உலகத்துச் செல்வமும் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் பயன்பட்டால் போதாது என்ற எண்ணத்தின் வெளிப்பாடுகள் தாம் இந்த ஏற்பாடுகள்.

ஆனால், துவக்கத்தில் இருந்த இந்த உணர்வானது படிப்படியாக குறையத் தொடங்கிற்று.

உடன்படிக்கை மீறலும் ஏற்றத்தாழ்வும்

இஸ்ராயேல் மக்கள் மத்தியிலும் நில பிரபுத்துவ அமைப்பின் மீது ஆர்வம் ஏற்படுகிறது. நிலம் கோத்திரத்திற்கே சொந்தம், தனி மனிதனுக்கு அல்ல என்ற சூழ்நிலை மாறி பக்கத்து நாடுகளில் இருந்த அரசர் அமைப்பின் மீது நாட்டம் வருகிறது. நிலத்தை அரசர்களுக்கு சொந்தமாக்கி ஒரு சிலரை உயர்ந்தவர்களாக கருதும் அரச அமைப்பின் மீது ஒரு சாராருக்கு, இஸ்ரயேலில் "பெரியோருக்கு" கவர்ச்சி ஏற்படுகிறது. அப்படி செய்தால் தான் தாம் இன்னும் வலுவாக இருக்க முடியும், காரியங்களை திறமையாக செய்ய முடியும் என்ற கருத்து பரவுகிறது. கடவுள் விருப்பத்திற்கு முரணாக, ஏற்றத் தாழ்வான ஒரு சமுதாயத்தை அறிமுகப்படுத்துகிறோமே என்று நினைக்கவில்லை. ஆனால் நில பிரபுத்துவத்தின் அரசியல் அமைப்பான அரசர் ஆட்சியை சாமுவேல் விரும்பவில்லை. அவர் இறைவாக்கினராக இருந்தார். விடுதலை இறையனுபவத்தை முழுமையாகத் தன்னில் வளர்த்துக் கொண்டு ஆண்டவரிடம் செய்து கொண்ட உடன்படிக்கையில் உறுதியாயிருக்க வேண்டுமென்பதில் பிடிப்பாக இருந்தவர்.

இந்த அமைப்பு மாற்றமானது அந்நிய தெய்வங்களை வழிபடுவது போன்று ஆண்டவரைப் புறக்கணிப்பதாகும் என்பதை உணர்ந்தார். ஆண்டவர் இந்த அமைப்பை விரும்பாமலிருந்ததற்குக் காரணமே அதனால் பாமர மக்களுக்கு ஏற்படப்போகும் தொல்லைகள் ஆகும்.

'எங்களுக்கு நீதி வழங்க ஓர் அரசனைத் தாரும்' என்று அவர்கள் கேட்டது, சாமுவேலுக்குத் தீயதெனப் பட்டது. சாமுவேல் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டார். ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது: "மக்கள் குரலையும், அவர்கள் உன்னிடம் கூறுவது அனைத்தையும் கேள். ஏனெனில், அவர்கள் உன்னைப் புறக்கணிக்கவில்லை. அவர்களை நான் ஆளாதபடி என்னைத்தான் புறக்கணித்து விட்டனர். நான் அவர்களை எகிப்தினின்று கொண்டு வந்த நாள் முதல் இந்நாள் வரை, அவர்கள் என்னைப் புறக்கணித்து வேற்றுத் தெய்வங்களுக்கு ஊழியம் செய்து அனைத்திலும் அவ்வாறே செய்தது போல் உனக்கும் செய்கிறார்கள்.

1 சாமுவேல் 8:6-8

பாமர மக்களின் உரிமைகள் பல பறிக்கப்படும். வரி விதிக்கப்படும். இவற்றை உணர்ந்த சாமுவேல் இறைவாக்கினர் இவற்றை இஸ்ரயேலின் "பெரியோருக்கு" எடுத்து விளக்குகிறார். அவர்களோ செவிசாய்க்கவில்லை.

இறைவாக்கினர் சாமுவேல் எச்சரித்தது போலவே ஆகாப் அரசன் காலத்தில் நாபோத் என்ற குடியானவனுக்கு நிகழ்ந்தது (1 அரசர் 21 : 1-16). நாபோத் என்பவரது திராட்சைத் தோட்டத்தை விரும்பிய ஆகாப் அதனைப் பெறமுடியாமல் திணறிய போது, பாகால் தெய்வத்தை வணங்கி அரசனின் அதிகாரத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்த ஈசபேல் அரசி நாபோத்தைக் கொல்வதற்கு வழி சொல்லி அவனது சொத்தை அபகரிப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஆண்டவரது வழியினின்று தவறிச் சென்று மக்களுக்கு அநீதி செய்த ஆகாப் அரசனைக் கண்டிப்பதற்கு எலியா இறைவாக்கினர் அவனிடம் சென்றார். ஆண்டவரது தண்டனையை அவனுக்கு அறிவித்தார் (1அரசர் 21 : 17-24).

ஓர் அரசன் வேண்டுமென்று தம்மிடம் கேட்ட மக்களுக்கு சாமுவேல ஆண்டவர் கூறிய அனைத்தையும் கூறினார்: "உங்கள் மீது ஆட்சி செய்யும் அரசனின் உரிமைகளாவன: அவன் உங்கள் புதல்வர்களைத் தன் தேரோட்டிகளாகவும் தன் குதிரை வீரர்களாகவும் வைத்துக் கொள்வான், அவர்களைத் தன் தேர்களுக்கு முன் ஓடச் செய்வான். அவன் அவர்களை ஆயிரத்தினர் தலைவராகவும், ஐம்பதின்மர் தலைவராகவும், தன் நிலத்தை உழுபவராகவும், தன் விளைச்சலை அறுவடை செய்பவராகவும், தன் போர்க்கருவிகளையும், தேர்க்கருவிகளையும் செய்பவராகவும் நியமித்துக் கொள்வான். மேலும் அவன் உங்கள் புதல்வியரைப் பரிமளத் தைலம் செய்கிறவர்களாகவும், சமைப்பவர்களாகவும், அப்பம் சுடுபவர்களாகவும் வைத்துக் கொள்வான். அவன், உங்கள் வயல்களிலும், திராட்சைத் தோட்டங்களிலும், ஒலிவத் தோப்புகளிலும் சிறந்தவற்றை எடுத்துக் கொண்டு தன் அலுவலருக்குக் கொடுப்பான். உங்கள் தானியத்திலும் திராட்சைப் பலனிலும், பத்தில் ஒரு பங்கை எடுத்துக் கொண்டு தன் காரியத் தலைவருக்கும் அலுவலருக்கும் கொடுப்பான். உங்கள் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும், உங்கள் கால்நடைகளில் சிறந்தவற்றையும் உங்கள் கழுதைகளையும் தன் சொந்த அலுவலுக்காகப் பயன்படுத்துவான். உங்கள் மந்தைகளில் பத்தில் ஒரு பங்கு எடுத்துக் கொள்வான். நீங்கள் அவனுக்குப் பணியாளர்களாய் இருப்பீர்கள். அந்நாளில் நீங்களே உங்களுக்காகத் தேர்ந்துகொண்ட அரசனை முன்னிட்டு முறையிடுவீர்கள். அந்நாளில் ஆண்டவர் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டார்."1 சாமுவேல் 8:10-18

இஸ்ராயேலரின் விடுதலை இறை அனுபவத்திற்கு எதிராகவும் இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு எதிராகவும் ஏற்றத் தாழ்வான சமுதாயம் உருவாகிற போது இஸ்ராயேல் மக்கள் மத்தியில் இறைவாக்கினர்கள் தோன்றுகிறார்கள். இவர்கள் இஸ்ராயேல் மக்களை அவர்களை உருவாக்கிய அடிப்படை விடுதலை அனுபவத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். அரசர்கள் இஸ்ராயேலரை ஆண்ட போது தான் இறைவாக்கினர் பலர் அவர்கள் மத்தியில் தோன்றினர். அரசர் அமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக அரசரும் அவரைச் சார்ந்தவர்களும் தனி வர்க்கமாக மாறுகின்றனர். பாமர மக்கள் சுரண்டப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவராயினர். படிப்படியாக இவர்களிடையே உள்ள பிளவு அதிகரித்தது. ஏழைகள் அனுபவித்த துன்பங்கள் பெருகின. இந்நிலையில் இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுறுத்தின இறைவாக்கினர்கள் நல்லதொரு சமுதாய அமைப்பை உருவாக்க அவர்களது கடமைகளை நினைப்பூட்டினர். சமத்துவ சமுதாயத்தில் அக்கறையின்றி இருந்த சமூகத் தலைவர்களையும் மக்களையும் கண்டித்தனர். அநீதிகளைச் சாடினர். ஆலய அர்ச்சகர்கள், மதத் தலைவர்கள் போன்றவர்களைக் கண்டித்து ஏழை மக்களையும் கருத்தில் கொள்ளும் சமுதாயம் அமைத்திருக்க வேண்டும் என்று நினைப்பூட்டினர்.

சமூக சீர்திருத்தமும் இறைவாக்கினரும்

இந்த சமூகச் சீர்திருத்தம் நிகழ்வதற்கு நிறுவனமயமாக்கப்படும் மதத்திலும் மாற்றம் தேவை என இறைவாக்கினர் உணர்ந்தார்கள்.

மக்களோடு வாழ்ந்த நீதித் தலைவர்கள் மறைந்து அரண்மனைகளில் வாழ்ந்த அரசர்கள் தோன்றியது போல மக்களோடு பயணம் செய்த இறைவன் என்ற நிலை மாறி இறைவனைத் தேடி மக்கள் வர வேண்டும் என்ற புரிதலிலே பேழையை பாதுகாப்பதற்கான ஆலயம் கட்ட தாவீது அரசர் ஆசைப்பட்டார்.

தான் ஆடம்பரமாக வாழும் போது அந்த ஆடம்பரத்தை நியாயப்படுத்த இறைவனும் ஆடம்பரமாக வாழ அரண்மனை போன்ற ஆலயம் கட்ட விரும்பினார். ஆனால் அதனை நாத்தான் இறைவாக்கினர் எதிர்க்கிறார். (1குறிப்பேடு 17:1-5; 2சாமு 7:1-7). நான் உங்களிடத்தில் எனக்கு கோவில் ஒன்று வேண்டுமென்று எப்போதாவது கேட்டேனா? என்று ஆண்டவர் சொல்வதாக அவர் குறிப்பிடுகிறார்.

அதன்பின் செல்வச் செழிப்பில் வாழ்ந்த சாலமோன் (1அரசர் 10:14-29; 2குறி 9:13-28) அந்நிய தெய்வங்களை வழிபட்டு (1அரசர் 11:1-10) ஆண்டவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையிலிருந்து பிறழ்ந்து போனதில் ஆச்சரியமில்லை. ஆண்டவர் வேண்டாம் என்று சொன்ன ஆலயத்தை அவர் கட்டி முடித்தார். அரசின் தலைநகரிலே ஆலயத்தையும் கட்டி அரசியல் அதிகாரத்தையும் மதத்தின் புனிதத்தையும் இணைத்து தலைநகரைப் புனிதநகரமாகவும் திருத்தலமாகவும் மாற்றினார்.

ஆலயத்தைப் பராமரிக்கக் குருக்களும், தலைமை குருக்களும் ஏற்படுத்தப்பட்டு மதத்தின் அதிகார வர்க்கம் பலப்படுத்தப்பட்டது.இந்த **அதிகார வர்க்கம் ஆலயத்தை மக்களின் விடுதலைக்காக நிர்வகிப்பதற்குப் பதிலாக ஆளும் வர்க்கத்தை, அரசர் குடும்பத்தை, பலப்படுத்துவதற்காக பயன்படுத்துகிறது.** எனவே எருசலேம் தேவாலயம் அரசர்களான தாவீதோடுடம், சாலமோனோடும் இணைந்ததாகிறது. அரசர் அமைப்பு நியாயப்படுத்துகிறது. வழிபாடு மக்களுக்கு ஒரு விடுதலை அனுபவமாக இருப்பதற்கு பதிலாக மக்களை திசை திருப்புகின்ற அனுபவமாகிறது.

இந்தக் காலகட்டத்தில்தான், நாம் முன்பு பார்த்ததுபோல எசாயா இறைவாக்கினர் இறைவாக்கருளுகிறார். "உங்களுடைய கணக்கற்ற பலிகள் நமக்கு எதற்கு? அவற்றை நாம் விரும்பவில்லை" என்கிறார். "நீதிக்காக போராடுங்கள், தீமை செய்வதை விட்டு விடுங்கள், அனாதைகளுக்கும் கைம்பெண்களுக்கும் நியாயம் வழங்குங்கள், இதுவன்றோ நாம் விரும்பும் பலி" என்கிறார். (எசா 1:10-17)

நீதியை நிலைநாட்டி ஏழைகளுக்கு உதவும் வகையில் மக்களை வழி நடத்துவதற்குப் பதிலாக சமயச் சடங்குகள் மக்களை திசைதிருப்புகின்றன. எனவே தான் இறைவாக்கினர் இறைவன் இவற்றை வெறுக்கின்றார் என்கிறார்.

> "வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்களே, இதைக் கேளுங்கள்:
> 'நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்? கோதுமையை நல்ல விலைக்கு விற்பதற்கு ஓய்வு நாள்

ஆமோஸ் இறைவாக்கினர், ஏழைகளை நசுக்குகிறவர்களுக்கு ஐயோ கேடு என்கிறார். இறைவன் ஏழைகள் பக்கம் இருப்பதை வலியுறுத்திச் சொல்கிறார்.

> எப்பொழுது முடிவுறும்?
> மரக்காலைச் சிறியதாக்கி,
> எடைக்கல்லைக் கனமாக்கி,
> கள்ளத் தராசினால் மோசடி
> செய்யலாம்; வெள்ளிக்காசுக்கு
> ஏழைகளையும் இரு காலணிக்கு
> வறியோரையும் வாங்கலாம்;
> கோதுமைப் பதர்களையும்
> விற்கலாம்' என்று நீங்கள்
> திட்டமிடுகிறீர்கள் அல்லவா?
> ஆண்டவர் யாக்கோபின்
> பெருமை மீது ஆணையிட்டுக்
> கூறுகின்றார்; அவர்களுடைய
> இந்தச் செயல்களுள் ஒன்றையேனும்
> நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்".
> ஆமோஸ் 8:4-7

ஆளும் வர்க்கத்தை சாடுகின்ற ஓர் ஆவேசம் இறைவாக்கினர்களிடம் இருந்தது. காரணம் அவர்கள் ஆண்டவரால் ஆட்கொள்ளப் பட்டவர்கள். வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொண்டவர்கள். இறைவனின் திட்டத்தையும் விருப்பத்தையும் தெரிந்து கொண்டவர்கள்.

இறைவாக்கினரும் அரசியலும்

இறைவாக்கினர் மதத்தை பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கவில்லை. அரசியல் அமைப்பானது கோத்திர முறையிலிருந்து மாறி நிலஉடைமை அமைப்பாக மன்னராட்சி ஏற்பட்ட போது சாமுவேல் அதனை எதிர்த்தார் என்றும் குடியானவர்களின் நில உரிமைகளை அரசர்கள் பறித்தபோது எலியா இறைவாக்கினர் அதனைக் கண்டித்தார் என்றும் பார்த்தோம். அதோடு எரேமியா, எசாயா போன்ற இறைவாக்கினர்கள் அரசர்களுக்கு அரசியல் ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், போர் வரும் போது யாரோடு ஒப்பந்தம் வைத்திருப்பது, யாரோடு உறவு வைத்திருப்பது என்றும் அறிவுரை தந்திருக்கிறார்கள்.

சீரியா நாட்டு மன்னனும் இஸ்ராயேலின் வடக்குப்பகுதியும் சேர்ந்து யூதாவை எதிர்க்க வரும் போது யூதாவின் அரசன் ஆகாசு ஊசலாடுகிறான். அப்போது ஆகாசு பாதுகாப்பிற்காக எகிப்து வல்லரசின் உதவியை நாடுவது என்று முடிவு செய்கிறான். இவ்வேளையில் இறைவாக்கினர் எசாயா அரசனுக்கு அரசியல் ஆலோசனை தருகிறார். எகிப்து வல்லரசின் உதவியைப் பெறுவதனால் அதிக கப்பம் கட்ட வேண்டி இருக்கும்; மக்கள் மீது அதிக வரிப்பளு சுமத்த வேண்டியிருக்கும்; அதனால் நாட்டில் விலைவாசி ஏறும்; பாமர மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே நீ நம்பிக்கையோடு இரு. உன்னுடைய மனைவியின் வயிற்றில் ஒரு குழந்தை உருவாகியுள்ளது. அந்தக் குழந்தை பிறக்கும். அக்குழந்தை வளரும், அந்த குழந்தை இந்த நாட்டை ஆட்சி செய்யும். நீ இதை நம்பு. நம்பி நீ

சுதந்திரமாய் இரு. யாரோடும் நீ கூட்டு சேர வேண்டியதில்லை, என்ற அறிவுரையை எசாயா அளித்தார் (எசாயா 7:10-16). இது போன்று எரேமியாவும் செதேக்கியா அரசனுக்கு அரசியல் ஆலோசனை கொடுத்துள்ளார் (எரே38:14-23).

சுருக்கமாக

1. இறைவாக்கினர் என்பவர்கள் வாழ்க்கையை முழுமையாகப் புரிந்து கொண்ட நல்ல ஞானிகள். **மொத்த வாழ்க்கையைப் பார்த்து அதில் அரசியல் ஈடுபாடு தேவை என உணரும் போது** சரியான அரசியல் ஈடுபாட்டுக்கு ஆலோசனை கொடுத்தவர்கள். **புனிதமானது புனிதமற்றது என்று பிரித்துப் பார்க்கவில்லை; வாழ்க்கையை மேம்படுத்தத் தேவையான அனைத்திலும் ஆர்வம் காட்டியவர்கள்.**

2. மக்களுக்கு எது தேவையோ அதுவே கடவுள் விருப்பம் என்ற உணர்வு பெற்றவர்கள். தங்களை அதற்கு அர்ப்பணித்தவர்கள். இறைவன் எதைச் சொல்லுகிறாரோ அதைச் சொல்ல வேண்டும். எதை செய்யச் சொல்லுகிறாரோ அதைச் செய்ய வேண்டும் என்ற தெளிவும் அர்ப்பணமும் கொண்டவர்கள். தமக்கும் மக்களுக்கும் வசதியானதையும், விருப்பமானதையும் சொல்வதும் செய்வதுமல்ல தமது கடமை; மாறாக **மக்களுக்கு எது தேவையோ அதைச் சொல்லவும் செய்யவும் வேண்டும் என்ற தெளிவும் அர்ப்பணமும் கொண்டவர்கள்.** (எரே 1:4).

3. இறைவாக்கினர் வாழ்க்கையையும் சமுதாயத்தையும் முழுமையாகப் பார்ப்பவர்கள் என்ற நிலையில் எல்லா கோணத்தில் நின்றும் அவற்றைப் பார்ப்பவர்கள். பலரும் ஆளும் வர்க்கத்தின் பக்கம் நின்றே வாழ்க்கையைப் பார்த்துப் பழகியவர்கள். ஆனால், **இறைவாக்கினர் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நின்று வாழ்க்கையைப் பார்க்கத் தெரிந்தவர்கள்.** எனவே பலர் கண்களில் படாத விஷயங்களைப் பார்க்கும் திறமை இவர்களுக்கு இருந்தது.

4. **விமர்சனம் செய்வதற்கு அஞ்சாதவர்கள்,** இறையனுபவத்தோடும் இறைவனின் கனவுகளோடும் நிலவி வரும் வாழ்க்கை முறையை விமர்சனம் செய்து ஒரு மாற்று சமுதாயத்திற்காக கூக்குரல் கொடுக்கிறவர்கள், அந்த மாற்று

சமுதாயத்தை கொண்டு வருவதற்காக தங்களால் இயன்ற எல்லாவற்றையும் தங்கள் உயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருப்பவர்கள்.

இறையரசு இயக்கம் போன்று சமுதாய மாற்றத்திற்காக உழைக்கும் அனைத்து இயக்கங்களுக்கும் இறைவாக்கினர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இன்றைய திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் அவற்றினுடைய உண்மையான அர்த்தத்தைப் புரிய வைத்து அதன் படி வாழ்வதற்கு தூண்டுவது, அதற்காக எந்த இழப்பையும் தாங்கிக் கொள்ள தயாராக இருப்பது என்பது இன்றைய அவசியமாகும். ஆனால் இதனைச் செய்வதற்கு அவற்றின் உறுப்பினர் ஆழ்ந்த உண்மையான இறையனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

?

1. இஸ்ரயேல் மக்களின் இறையனுபவத்திலுள்ள உடன்படிக்கை உணர்வு எதில் அடங்குகிறது?
2. விடுதலை பெற்ற இஸ்ரயேல் மக்கள் மத்தியில் நிலஉடைமை சமூக அமைப்பின் தாக்கம் ஏற்பட்ட போது நிகழ்ந்த மாற்றங்கள் எவை?
3. நிலஉடைமை அமைப்புக்கு முன்னதாக எப்படிப்பட்ட சமூக பொருளாதார மரபுகளை ஏற்படுத்தியிருந்தனர்?
4. நிலஉடைமை சமூக அமைப்பிற்கும் செயல்பாட்டிற்கும் எதிராக இறைவாக்கினர் எவ்வாறு குரல் கொடுத்தனர்?
5. இறைவாக்கினர் அரசியல் ஈடுபாடு கொண்டிருந்தனரா? ஏன்?
6. இறைவாக்கினரின் பண்புகள் எவை?

6

இயேசு கிறிஸ்து யார்?

இயேசு இறைவாக்கினர்

இயேசுவை அவரது காலத்து மக்கள் இறைவாக்கினர் என்றே பரவலாய்ப் புரிந்து கொண்டார்கள். என்னைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சீடரிடம் கேட்ட போது இறைவாக்கினர் என்கிறார்கள் என்பது தான் கிடைத்த பொதுவான பதில். திருமுழுக்கு யோவான், எலியா இறைவாக்கினர், எரேமியா அல்லது பிற இறைாக்கினருள் ஒருவர் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்று பதில் வந்தது (மத் 16:13-14). திருமுழுக்கு யோவானும் இறைவாக்கினராகவே கருதப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு ஒரு இறைவாக்கினராகப் புரிந்து கொள்ளப்பட்டார். அவர் காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மக்களை திரும்பவும் விடுதலை அனுபவத்திற்கும், விடுதலை அனுபவத்தின் அடிப்படையில் செய்த உடன்படிக்கைக்கும் அழைப்பவராகக் கருதப்பட்டார்.

"காலம் நிறைவேறி விட்டது; கடவுளாசு நெருங்கி விட்டது; மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்பதாக அந்த அழைப்பு அமைந்தது (மாற்கு 1:15).

ஆண்டவருடைய விடுதலை திரும்பவும் உங்களுக்கு வரும்; நீங்கள் மனந்திரும்பி, அடிமைத் தனத்திற்கான அணுகு முறைகளை விட்டு விட்டு சுதந்திரமாக திரும்பி வந்தால் ஆண்டவர் உங்களுக்கு நல்வாழ்வை, நிறைவாழ்வைத் தருவார்; இறைவனே நேரடியாக வந்து உங்களை ஆட்சி செய்வார்; இறைவனே உங்களுக்கு விடுதலையாக இருப்பார் என்ற வாக்குறுதியைப் புதுப்பிக்கின்றார்.

ஆயனில்லாத ஆடுகள்

இந்த அழைப்புக்கு துவக்கத்தில் பாமர மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. பெரும் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது; சரியாக சாப்பிடுவதற்குக் கூட நேரம் இல்லாத அளவுக்கு மக்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர் (மாற்கு 6:31).

இவ்வாறு தன்னை விடாமல் பின் தொடர்ந்து கொண்டிருந்த மக்களை ஆயனில்லா ஆடுகளாகவே அவர்கண்டார் (மாற்கு6:34).

ஆயனில்லா ஆடுகள் என்பது நமக்கு எசேக்கியேல் இறைவாக்கினர் நூல் 34-ம் பிரிவைத் தான் நினைவூட்டுகிறது. அதில் காயப்பட்ட ஆடுகளையும் ஊனமுற்று பின் தங்கிய ஆடுகளையும் ஆயர்கள் என்று அழைக்கப்பட்ட அரசர்கள் கவனிக்கவில்லை என்று குற்றம் சாட்டிய இறைவன் தாமே நேரடியாக மந்தையை மேய்க்கப்போவதாக, ஆட்சிச் செலுத்தப் போவதாக, நல்லாயனாக வழிநடத்தப் போவதாக எடுத்துச் சொல்கிறார்.

இயேசுவின் காலத்தில் ஏழைகளை சரியான முறையில் வழி நடத்த ஆர்வம் கொண்ட தலைவர்கள், வழிகாட்டிகள் இல்லை.

அன்றிருந்த மதத் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், தலைமை குருக்கள், மூப்பர்கள் சங்கம், ஆகியோரும் உரோமைத் தலைவர்களும் சரியான ஆயர்களாகச் செயல்படாததால் மக்கள் ஆயனில்லா ஆடுகளாக வாழ வழியின்றி அலைந்து திரிந்தனர்.

பாலஸ்தீன சமுதாயத்தில் மத அடிப்படையில் மக்கள் பாவிகள் என்றும் தூயவர்களென்றும் பிரிக்கப்பட்டிருந்தனர். பாவிகள் எனப்படுபவர்கள் சமுதாயத்தில் பின் தங்கி இருந்தவர்கள், பாமர மக்கள், கல்வியறிவு இல்லாதவர்கள், சட்டம் தெரியாதவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் முன்னேற்றத்திற்கான வழி காட்டப்படவே இல்லை. மாறாக சட்டத்தின் நுட்பங்கள் தெரியாத இவர்களை, சட்டத்தைக் கடைபிடிக்கும் வசதி இல்லாதவர்களை, பாவிகள் என்று ஒதுக்கியே வைத்திருந்தனர்.

அவர்கள் தம் நிலையிலிருந்து எந்த வகையிலும் முன்னேறி விடாத படி சட்டங்கள் இருந்தன. விபசாரத்தில் ஈடுபட்டவர்கள், நடத்தகாத வேலைகளாகக் கருதப்பட்ட தோல் பதனிடுதல் போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் விமோசனம் பெறுவதற்கு காணிக்கைகள் செலுத்த வேண்டும்; பரிகாரப் பலிகள் செலுத்த வேண்டும். ஆனால் அதற்குரிய பணம் அவர்கள் செய்து வந்த "அசுத்தமான" தொழிலிலிருந்து சம்பாதித்ததாக இருக்கக் கூடாது. இதனால் இந்தப் "பாவி"களுக்கு விடுதலையே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

சமய சட்டங்களே ஏழை மக்களை அடக்கி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. சட்டங்களில் எந்த மாற்றமும் கூடாது, அதை விலக்கும் உரிமை சமயத் தலைவர்களுக்கே உண்டு என்று அமைத்து அதனை பாமர மக்களுக்கு எதிராகச் சட்ட வல்லுநரும் பரிசேயரும் பயன்படுத்தினர்.

நல்லாயன் இயேசு

அந்தச் சூழ்நிலையில், உண்மையான ஆயனாகத் தான் இருப்பதன் தேவையை இயேசு உணர்ந்தார். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அதனால் சட்டங்களுக்கு இயேசுவே புதிய விளக்கங்களைக் கொடுத்தார். அதற்குத் தனக்கு உரிமை உண்டு என்றார். இறைவாக்கினரின் பாரம்பரியத்தில் நின்று விடுதலை அனுபவத்தின் பின்னணியிலே சட்டங்களுக்கு விளக்கம் தருகிறார் (மத்5:21-48). மனிதனின் விடுதலைக்காக ஏற்படுத்தப் பட்டதே எல்லா சட்டங்களும், ஓய்வு நாள் சட்டமும் கூட என்று வலியுறுத்திச் சொல்கிறார் (மாற்கு 2:27).

அது போலவே ஆலயமும் மனித விடுதலைக்கு உதவ வேண்டுமே ஒழிய வியாபாரம் பண்ணவும் ஏழைகளைச் சுரண்டவும் பயன்படக் கூடாது என்ற செய்தியோடு ஆலயத்தை வியாபாரக் கூடமாக்கியவர்களை இயேசு விரட்டியடிக்கிறார் (யோவா2:13-17).

இந்தப் போதனையானது மற்றவர்களைப் போலல்லாமல் வாழ்க்கையோடு இணைத்து விடுதலை ஏற்படுத்த பயன்படுவதாக இருப்பதைக் கண்டு வியப்புற்ற பாமர மக்கள் பலர் இயேசுவுக்கு ஆதரவு தந்தார்கள் (மாற்கு 2:12).

அதனால் தான் இயேசுவை சுற்றி நல்ல ஒரு கூட்டம் இருந்தது. இயேசு அவர்களுக்கு மந்திரம் சொல்லிக் கொடுக்கின்ற மறைக்கல்வி கற்றுக் கொடுக்கவில்லை. நல் வாழ்வுக்கான தடைகளைச் சுட்டிக் காட்டி அதை மேற்கொள்ளும் வழிகளை விளக்கி, வாய்ப்பான சூழ்நிலையை மக்கள் முன்பாக வைத்தார்.

இயேசு என்னென்ன காரியங்களை சுட்டிக் காட்டியிருப்பார் என்பதை நற்செய்தி நூல்களிலிருந்து ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடிகிறது. அவருடைய பல உவமைகள், பல படிப்பினைகள் மூலமாக அதனை தெரிந்து கொள்ள முடியும்.

கடவுளே அரசராக இருந்து ஆட்சி செய்யும் இறையாட்சியின் செழிப்பு நிலை வரும். அதில் எல்லோருக்கும் வேலை கிடைக்கும் என்று புரிகிறது.

> "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்; நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார். அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள்களுடன் ஒத்துக் கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்ற பொழுது சந்தை வெளியில் வேறுசிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார். அவர்களிடம், 'நீங்களும்என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்; நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்'

திராட்சைத் தோட்டத்து வேலையாட்கள் உவமையில் வேலையின்றியிருக்கும் எல்லோருக்கும் வேலை கொடுக்கும் ஒரு நிலக்கிழாரைப் பார்க்கிறோம். எல்லோருக்கும் வேலை வேண்டும் என்று விரும்பும் நல்லத் தலைவராக அவர் விளங்குகிறார். இந்நிகழ்ச்சி இறையரசோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

அந்த இறையரசில் ஏழைகளுக்கு முன்னுரிமை

என்றார். அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே சென்று அப்படியே செய்தார். ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடம், 'நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் அவரைப் பார்த்து, 'எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை' என்றார்கள். அவர் அவர்களிடம், 'நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்' என்றார்.

மத்தேயு20:1-7

இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை: "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே."

லூக்கா 6 : 20

இருக்கும் அதில் பாவி - நல்லவன், பணக்காரன் - ஏழை, யூதன் - புறவினத்தான் என்ற பாகுபாடு இருக்காது என்று சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

இயேசுவின் புதுமைகள் பலவும் ஓய்வுநாளிலேயே செய்யப்பட்டன. திட்டமிட்டே ஓய்வுநாள் சட்டத்தை மீறுவதாகத் தெரிகிறது. ஓய்வுநாள் போன்ற சட்டங்களினாலேயே பாவி-தூயவன் என்ற பாகுபாடு ஏற்படுகிறது என்பதை உணர்ந்த இயேசு அந்தச் சட்டத்தைச் சீர்திருத்த முன்வந்தார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் நிகழ்வில் (யோவான் 8:3-7) பாவி என்றும் பரிசுத்தர் என்றும் பிரித்துப் பார்ப்பதில் பொருளில்லை என்று இயேசு புலப்படுத்துகிறார்.

யூதரல்லாத நூற்றுவர் தலைவளின் விசுவாதத்தைப் பாராட்டியது (லூக்கா 7:9), கனானியப் பெண்ணின் நம்பிக்கையைச் சுட்டிக் காட்டியது (மத்தேயு 15:28), சமாரியர் ஒருவரைச் சிறந்த மனிதராக எடுத்துச் சொன்னது (லூக்கா 10:25-37) போன்றவை மதப் பாகுபாடற்ற சமூகமே இயேசுவின் இறையாட்சிக் கனவாக இருந்தது என்பதை உணர்த்துகிறது.

ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்கு கொடுத்த போது அனைவரும் வயிறார உண்ட நிகழ்வின் வழி வயிறார உண்பது, நிறைவாகச் சாப்பிடுவது இறையரசின் பண்பாகும் என்று உணர்த்தினார்.

ஏற்றத்தாழ்வின்றி ஒற்றுமையாக வாழ முன் வர வேண்டும். யூதச் சமுதாயம் ஒன்றுபட்டாலன்றி விடுதலை என்ற விடிவு இல்லை என்பதை இயேசு உணர்ந்தார். தூயவர்கள் என்று தம்மைக் கருதியவர் பாவிகளோடு கடைபிடித்து வந்த தீண்டாமையைக் கைவிட்டு

அனைவரும் ஒன்றாக விருந்துண்ண முன் வர வேண்டும். அதற்கு மனமாற்றம் தேவை. ஆகவே தான் இயேசுவும் பாவிகளோடு பலமுறை விருந்துண்கிறார். மனம் மாறாத, பரிசேயர் போன்ற சிலர் இவ்விருந்துகளுக்கான அழைப்பை புறக்கணிப்பதை இயேசு உவமையில் விளக்கியுள்ளார் (லூக்கா 14:16-20).

இந்தச் சூழ்நிலையில் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒரு சிலர் இயேசுவைப் பின் தொடர்கின்றனர். வேறு சிலர் பின் தொடரத் தயங்குகின்றனர். ஏற்றத் தாழ்வான ஒரு சமூக அமைப்பில், மேலே இருந்து அடக்கியாளும் வர்க்கத்தோடு தன்னைப் பின்னி பிணைத்துக் கொண்ட ஒருவர் இயேசு விரும்பிய புதிய சமுதாயத்திற்காக உழைக்க முடியாது.

அதனால் தான் பணக்கார வாலிபன் தன் உடமையை விற்று ஏழைகளுக்கு கொடுத்து விட்டு இயேசுவைப் பின்பற்ற வந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை (மாற்கு 10:17-22). செல்வத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்போர் இறையாட்சி சமூகத்தை ஏற்றுக் கொள்வது சிரமம் (மாற்கு 10:23-25).

அனைத்திற்கும் மேலாக தியாகம் செய்ய முன் வர வேண்டும் என்றார் இயேசு. மனுமகன் தன் உடலை உலகுக்குக் கையளித்தது போல இறையாட்சியை ஏற்படுத்த விரும்புகிறவர்களும் இயேசுவின் மனநிலையை உட்கொள்ளும் வகையில் அவரது தசையை உண்ண முன்வர வேண்டும் என்றார் (யோவான் 6:51). பலர் அதனை ஏற்கத் தயாரில்லை (யோவான் 6:60).

இந்தக் கடினமான நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட முன்வராதவர்களால் சமுதாய மாற்றம் என்ற இறையாட்சியை உடனடியாக ஏற்படுத்த முடியவில்லை.

இறையாட்சி பற்றிய நற்செய்தியைச் சொல்லவும் அதற்கு ஆதரவாளர்களாக மனந்திரும்பி முன் வரவும் அழைப்பு விடுக்க உடன் உழைப்பாளர்களையும் சீடர்களையும் இயேசு தேடுகிறார்.

சாவுக்குத் தயாரான
ஆண்டவரின் ஊழியர்

ஆனால், இப்போதனையினால் பாதிப்பு ஏற்படும் என்று அச்சமுற்ற பரிசேயர்களில் ஒரு சாராரும், தலைமை குருக்களும் இயேசுவைப்

பொரும் விரோதியாகவும், இந்த சமுதாயத்தை குலைக்கிறவராகவும், அவர்களுடைய ஆதாயத்தைக் கெடுக்கிறவராக பார்க்கிறார்கள். எனவே அவருக்கு எதிராக சூழ்ச்சி செய்கிறார்கள்.

இந்த எதிர்ப்பு வலுக்கிற போது பாமர மக்களில் பலர் கூட போதிய அளவு இயேசுவுக்கு ஆதரவு காட்டினார்களா என்பது சந்தேகமாக உள்ளது. இதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று அவர்களில் சிலர் மாற்றம் சீக்கிரம் வந்து விடும் என நினைத்திருப்பார்கள். அது வரவில்லை. வேறு சிலர் இயேசுவை ஒரு மெசியாவாகக் கருதி தம்மிடம் இருக்கும் சமயப் பிரச்சினைகளை பின்னர் சரி செய்து கொள்ளலாம். முதலில் உரோமையருக்கு எதிராகப் போராடுவோம் என்று நினைத்த தீவிரவாதிகளின் அணுகுமுறையை நம்பி இருந்திருக்கலாம். அவர்களுக்கு இயேசுவின் அணுகு முறை ஏமாற்றத்தைத் தந்திருக்கும். நம்மிடத்திலேயே இருக்கும் பாவிகளுக்கும் ஏழைகளுக்கும் நாம் முன்னுரிமை கொடுக்காமல் நாம் உரோமையருக்கு எதிராக போராடுவதில் அர்த்தமில்லை என்பதில் இயேசு உறுதியாக இருந்திருக்க வேண்டும். மேலும் உரோமையருக்கு வரி தண்டுவோரை கண்டிப்பவர்கள், உரோமையரின் நாணயத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கும் முரண்பாட்டை இயேசு சுட்டிக்காட்டினார் (லூக்கா 20:20-25).

இவர்களில் சிலர் இயேசுவைப் பிடித்து கட்டாயப்படுத்தி அரசராக்க முயன்றார்கள். இயேசு சம்மதிக்கவில்லை. நழுவி விட்டார். அதனால் அவருடைய சொந்த ஊரிலேயே எதிர்ப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு பாமர மக்களில் சிலரும், தலைவர்களில் பெரும் பான்மையானவர்களும், முக்கியமானவர்களும் இயேசுவின் புதிய வழிக்கு சம்மதம் கொடுக்கவே இல்லை.

இந்தப் பின்னணியில் இயேசு அடுத்தக் கட்ட செயல்பாடு பற்றித் திட்டமிடுகிறார். தன்னுடைய சீடர்களில் ஒரு சிலரை தேர்ந்தெடுத்து, அவருடைய பணியைத் தொடர்ந்து செய்வதற்காக திருத்தூதர் குழாம் என்ற அமைப்பை ஏற்படுத்துகிறார். தனக்குப் பிறகும் தனது இறையாட்சிப் பணியைச் செய்ய இவர்களை ஏற்படுத்துகிறார். தன்னோடு வைத்துப் பயிற்சியும் அளிக்கிறார்.

எதிர்ப்பு வலுக்க, இயேசுவுக்கும் தனது இறப்பைப் பற்றிய எண்ணம் வர தான் இந்தப் பணியை தொடர வேண்டுமா? என்று கேட்டுப் பார்க்கிறார்.

முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பு வாழ்க்கையினுடைய அடி ஆழத்திற்குச் சென்று அதில் கிடைத்த முழுமையான, வாழ்க்கையினுடைய அர்த்தம் சார்ந்த அனுபவத்தைப் பெறுவது இயேசுவின் வழக்கம்.

துவக்கத்தில் 40 நாள் பாலை வனத்திற்குச் சென்று நோன்பு இருந்து தனது பணி எவ்வாறு அமைய வேண்டுமென முடிவு செய்தார். அதன் பிறகு அவ்வப்போது மலைகளுக்குச் சென்று செபம் செய்தார். இறையனுபவத்தை, ஆட்கொள்ளப்படும் அனுபவத்தை தன்னுள் புதுப்பித்துக் கொண்டார்.

தனது பணிபற்றிய தெளிவற்ற நிலை மீண்டும் வந்த போது, இயேசு தாபோர் மலைக்குச் சென்றார். ஒரு சில சீடர்களையும் உடன் அழைத்துக் கொண்டுச் சென்றார். மோயீசனோடு உரையாடுவது போல, உடன்படிக்கைச் சட்டம் கொடுக்கப்பட்ட சூழ்நிலையைத் திருப்பிப் பார்த்தார். எலியாவோடு உரையாடுவது போல இறைவாக்கினர்களுடைய வாழ்க்கையை நினைவுக்குக் கொண்டு வந்தார். அப்போது அவருக்கு தெளிவு கிடைத்தது. இவர்களெல்லாருமே இறுதி வரை விடுதலைப் பணியில் உறுதியாக இருந்திருக்கிறார்கள். அவர்களைப் போலவே தானும் அழைக்கப்பட்டிருப்பது தெளிவாகியது.

பழைய ஏற்பாட்டிலுள்ள இறைவாக்கினர் பலர், இஸ்ராயேலர் பாபிலோனில் அடிமைகளாக இருந்த போது அநீதிக்கு எதிராக குரல் கொடுத்துக் கொல்லப்பட்டவர்கள். பாபிலோனில் அடிமைகளாக இருந்த போது வெளிப்படையாக ஓசைபட ஒன்றுமே செய்ய இயலாது. அரசருக்கு எதிராகப் பேசுவது இயலாத ஒன்று.

ஆனால் இந்த இறைவாக்கினர்கள் இரகசியமாக ஆங்காங்கே யூதர்களுக்கு ஏற்பட்ட எல்லா பாதிப்புகளுக்கும் ஈடு செய்யும் வகையில் செயல்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, அடிமைகளாக இறந்த யூதர்களை யூத மரபுப் படி அடக்கம் செய்ய பாபிலோனில் அதிகாரமில்லை. இந்த இறைவாக்கினர்கள் இரவு ஓசையின்றி இரகசிமாக அடக்கம் செய்தார்கள் (தோபித்து 1:17-20).

இது அரசருக்குத் தெரிந்தவுடன் அவர்களை பிடித்துக் கொல்வார். இப்படி இரகசியமாக கொல்லப்பட்டவர்கள் ஆண்டவருடைய ஊழியர் என்று கருதப்பட்டனர். இயேசுவும் தன்னை இப்படிப்பட்ட

ஆண்டவருடைய ஊழியராக உணர்கிறார். (மத் 17:5) இவரே என் அன்பான மகன் என்பது ஆண்டவரின் ஊழியரைக் குறிப்பதாகும்.

சாதனையினால் மட்டுமல்ல, துன்பத்தாலும், இறப்பினாலும் விடுதலைக்காக பணி செய்ய முடியும் என்ற தெளிவு இயேசுவுக்கு தாபோர் மலையில் கிடைக்கிறது. எனவே துணிச்சலோடு தன்னுடைய பணியை தொடர்ந்து செய்யச் செல்கிறார். சாவு ஏற்படும் என்று சந்தேகம் இருந்தும் கூட எருசலேம் நகர் நோக்கிப் பயணம் செய்கிறார்.

எருசலேமுக்கும் போய்த்தான் ஆக வேண்டும். அங்கு இருக்கக் கூடிய ஆதிக்கச் சக்திகளுக்கும் நற்செய்தியைச் சொல்லி மனந்திரும்ப அழைக்க வேண்டும். அவர்கள் மனந்திரும்பாவிட்டாலும் அவர்களை இனங்காட்டித்தானாக வேண்டும். இந்த நோக்கோடு இயேசு செல்கிறார்.

எதிர்பார்த்தது போல அங்கு பெரிய மோதல் ஏற்பட்டது. இயேசுவை எப்படியாவது தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று யூதத் தலைமை முடிவெடுத்து விட்டிருந்தது. இதையறிந்த இயேசு, தலை மறைவாக இருந்தார். தன் போக்குவரத்துக்களை மறைவாகவே வைத்திருந்தார். இரவு எங்கு தங்குவார் என்பது இரகசியமாகவே இருந்தது.

அப்படிப்பட்ட நிலையில் தான் திருத்தூதரில் ஒருவரையே தங்கள் உளவாளியாக ஏற்படுத்தி, பணம் கொடுத்து அவரை விலைக்கு வாங்கி, இயேசு எங்கு போகிறார், இரவு எங்கு இருக்கிறார் என்று கண்டுபிடித்து இயேசுவைத் திட்டமிட்டுக் கொலை செய்கிறார்கள்.

உயிர்ப்பு அனுபவம்

இயேசு கொலை செய்யப்பட்ட போது பாமர மக்களுக்கும் சீடர்களுக்கும் தெரிகிறது அவர் நல்லவர், நல்ல காரியங்களை செய்தவர் என்று. ஆனால் கொலை செய்யப்பட்டவர், அதுவும் உரோமையர்களால் கொலை செய்யப்பட்டவர், சிலுவையில் அறையப்பட்டவர் என்ற உண்மை எல்லோருக்குமே ஒரு பெரிய இடறலாக இருந்தது.

ஏனென்றால் பெரும் கள்வர்கள், கொலைகாரர்கள், சமூக விரோதிகள், போக்கிரிகள் இப்படிப்பட்டவர்கள் தான்

கொல்லப்பட்டார்கள். அதைப் போல சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுதல் என்பது எந்த ஒரு இறைவாக்கினருக்கும், கடவுளுடைய மனிதருக்கும், எந்த ஒரு நல்லவருக்கும் அது நல்ல சிறந்த அடையாளமே அல்ல என்பதுதான் மக்கள் கருத்து.

அந்த நிலையில் இயேசுவை ஒரு இறைவாக்கினராகவும், வர வேண்டிய மெசியாவாகவும், ஏன் கடவுளாகவுமே, ஏற்றுக் கொண்டது ஒரு பெரும் விசுவாசப் புரட்சி எனலாம்.

இறைவாக்கினர் என்றால் யார், கடவுள் எப்படிப்பட்டவர் என்பது பற்றி சீடர்கள் மத்தியில் சிறிது சிறிதாக மாற்றுப் புரிதல் ஏற்பட்டிருந்தது. அது இயேசுவினுடைய போதனையின் விளைவாகும். எதிர்பாராத வேளையில் ஏற்பட்ட இயேசுவின் இறப்பின் தாக்கத்தினால் சில நாட்களில் அது ஒரு தெளிவான மாற்றுச் சிந்தனையாக உருவெடுத்தது.

இயேசு உடலோடு கூட இருந்த போது எவ்வாறு பல காரியங்களை விளக்கிச் சொன்னாரோ அதைப் போன்று இயேசு இறந்த பிறகும் அவரே கூட இருந்து வழி காட்டியது போல தெளிவுகள் கிடைக்க ஆரம்பித்தன. கொல்லப்படுவது அதுவும் சிலுவையில் அறைந்து கொல்லப்படுவது போன்ற இடறல்கள் பற்றியெல்லாம் கவலைப்பட தேவையில்லை, மாற்றுச் சமுதாயத்திற்காக உழைத்து அதற்காகக் கொல்லப்படுவதைப் பற்றி யாருமே கவலைப்படத் தேவையில்லை, அது ஒரு ஏமாற்றமாகவும் இடறலாகவும் இருக்க வேண்டியதில்லை என்ற தெளிவு சீடர்களுக்கு ஏற்படுகிறது.

பாபிலோனிய அடிமைத்தனத்தில் கொல்லப்பட்ட ஆண்டவரின் ஊழியர்; மக்களின் பாவங்களுக்குப் பரிகாரகமாக செம்மறியின் மீது பாவச் சுமைகளை ஏற்றி வைத்து பாலைவனத்திலே செத்துமடிவதற்கு அனுப்பி வைப்பது போன்ற முன்னுதாரணங்கள் பாவிகள் என்று கருதப்பட்டவர்களின் இழிநிலையைத் தன்மீது சுமந்து கொண்டு அவர்களை அடிமைப்படுத்திய சட்டங்களை, சமூக அமைப்பை உடைப்பதில் தன் உயிரை இயேசு தந்திருப்பது கடவுளின் திட்டத்தோடு இணைந்து போகிறது என்பது புலப்பட்டது. எகிப்தில் விடுதலை பெறுவதற்குச் செய்த ஏற்பாட்டில் பாஸ்கு செம்மறியின் இரத்தம் கதவு நிலைகளில் தெளிப்பது ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது போல மக்களின் மீட்புக்காக இயேசு தன் இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார் என்று புரிந்து கொண்டனர்.

இப்படிப்பட்ட புரிதல்கள் வழியாக இயேசுவின் இறப்பு ஒரு அர்த்தமுள்ள நிகழ்வாக சீடர்களுக்குத் தென்பட ஆரம்பித்தது. இயேசுவின் மரணத்தில் உடலளவில் ஒரு மறைவு இருந்தாலும் உயிரளவில் உடனிருப்பும் பிரசன்னமும் இருப்பதை உணர்ந்தார்கள். இயேசு உடனிருக்கும் போதுள்ள தெம்பையும் திடத்தையும் அனுபவிக்க ஆரம்பித்தார்கள். இயேசுவைப்போலவே சாவைக்கண்டு அச்சப்படாமல் விடுதலைப்பணிக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க வலிமை பெற்றார்கள்.

இந்த அடிப்படைமாற்றமானது இயேசு உயிர்த்தெழுந்ததாலேயே நிகழ்ந்தது என்று நம்பினார்கள். இதுவே நமது நம்பிக்கையும் கூட.

இயேசுவின் உயிர்ப்பு எனும்போது அது இலாசர் இறந்தபின் உயிர் பெற்றெழுந்தது போல அல்ல. உயிர்த்த இலாசர் மீண்டும் இறந்தார். ஆனால் உயிர்த்த இயேசு மீண்டும் இறக்கமாட்டார். இயேசுவின் உடல் மூன்று நாட்களாகச் சடலமாக இருந்துவிட்டு, அடிபட்ட பாம்பு கொஞ்சம் கொஞ்சமாக் காற்று வாங்கி தப்பித்து விடுவது போல உயிர்மூச்சு வர உயிர்த்தெழுந்தார் என்று பலரும் கருதுவது தவறான புரிதலாகும். உயிர்த்த இயேசு, வரலாற்றின் இறுதியில் நாம் உருமாற்றம் பெற்று பெண்கொள்வதும் கொடுப்பதுமின்றி நம்மால் விவரிக்க முடியாத உயிர்நிலையைப் பெறுவது போல சொற்களுக்கு அப்பாற்பட்ட இருப்பைப் பெற்றார். அவரை இயல்பாகக் கண்ணால் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர் உடன் இருந்தபோது, “அவர்கள் உள்ளம் பற்றி எரிந்ததை உணர்ந்தார்கள்” (லூக் 24:32).

இந்த உயிர்ப்பு அனுபவத்திலே இயேசு செய்த விடுதலைப்பணி என்பது இறைவனின் பணி என்றும் இயேசு இறந்தாலும் அவரது பணியை இறைவனே தொடரும் வகையில் இயேசுவை இறைவனே உயிர்ப்பித்தார் என்றும் உணர்ந்தார்கள்.

இயேசுவை உயிர்த்த ஆண்டவராகப் பறைசாற்றினார்கள். இயேசுவைப் போன்று ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிப்பதைத் தம் கடமையாக உணர்ந்தார்கள்; அதற்காகத் தம்மைக் கையளித்தார்கள்.

சீடர்கள் தம் அனுபவத்தை எல்லா இடங்களிலும் பறைசாற்றினார்கள். அவர்களது போதனையைப் பாமர மக்களில்

பலரும் ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படி ஏற்றுக் கொள்கிறவர்கள் கிறிஸ்தவர்களாக திருமுழுக்கு பெறுகின்றனர்.

விசுவாசப் புரட்சி

முழுக்க முழுக்கச் சமுதாயத்திற்காக உழைத்து, அதன் விளைவாகக் கொல்லப்பட்டது ஒரு இறைவாக்கினருடைய அடையாளம்; இது ஆண்டவர் அனுப்புகிற ஒரு மெசியாவினுடைய அடையாளம்; இவரே ஆண்டவரால் அர்ச்சிக்கப்பட்டவர் என்ற உணர்வு படிப்படியாக வந்தது. இது ஆண்டவரால் அனுப்பப்பட்டவருடைய அடையாளம் மட்டுமல்ல; இது தான் இறைமை என்பதும் புலப்பட்டது. மக்களுடைய நல்வாழ்வுக்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்து, தன்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் கொடுப்பது தான் இறைமை என்ற ஆழமான உணர்வும் ஏற்பட்டது. அதனால் இயேசுவை இறைவனாக எங்கும் பறைசாற்றுகின்றனர்.

இயேசுவுக்கும் தாம் இறைவனின் மகன் என்ற உணர்வு இருந்தது என்று நாம் நம்புகிறோம். ஆனால் இயேசுவை இறைவனாக அறிக்கையிட்ட ஆதிக் கிறிஸ்தவர்களின் புரிதலும் விசுவாசமுமே நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இயேசுவை இறைவனாக நாம் அறிக்கையிடுகிற போது, அதில் நிறைய காரியங்கள் உள்ளடங்கி உள்ளன. இறைவன் என்றால் யார் என்பது பற்றி ஒரு தனிப்பட்ட புரிதல் அதில் தொக்கி நிற்கிறது. இயேசுவை இறைவன் என்று சொல்லும் போது இயேசுவை பற்றிய விளக்கம் அளிப்பது மட்டும் இல்லாமல் இறைவனைப் பற்றிய ஒரு விளக்கத்தையும் அதில் தருகிறோம்.

இயேசுவை இறைவன் என்று அழைக்கிற போது இயேசுவினுடைய பண்புகள், அவரது செயல்பாடுகள் அனைத்தும் ஒரு இலக்கணமாக, மேல்வரிச்சட்டமாகப் புரிந்து கொள்கிறோம். இயேசுவுக்கு முன்னால் வந்தவர்கள் அவருக்குப் பின்னால் வருபவர்கள் எல்லோரையும் இயேசுவை வைத்தே மதிப்பீடு செய்கிறோம்.

இயேசுவை இறைவன் என்று சொல்லும் போது இறைவனைப் பற்றிய நமது கண்ணோட்டமும் முழுக்க முழுக்க மாற வேண்டும். **(இந்தப் பின்னணியில் தான் இறைவனின் பண்புகளை மூன்றாவது பிரிவில் விளக்கியிருக்கிறோம்.)**

இறைவன் என்பவர் மனிதர்களோடு தொடர்பு கொண்டு மனிதர்களைக் கடந்து நிற்பவர். இறைமை மனிதனிடத்திலுள்ளது. **இறைமைக்கும் மனிதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.** இறைவன் என்பவர் இயேசுவைப் போன்று இந்த சமுதாயத்தில் முழுக்க முழுக்க அக்கறை கொண்டவர்.

இன்னொரு முக்கியமான புரிதல் **இறைவன் தோற்கக் கூடியவர்** என்பது. இதுவரையிலும் இறைவனைப்பற்றிச் சிந்திக்கும் போது இறைவன் என்பவர் ஆடம்பரமானவர், சர்வ வல்லவர், அவர் தோற்கவே மாட்டார், அவருடைய முயற்சி தோற்கடிக்கப் படாது என்று கருதுகிறவர்கள் மனதில் இயேசுவை இறைவன் என்று அழைப்பது ஒரு இறையியல் புரட்சியைக் கொண்டு வருகிறது. தோல்வியையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர் இறைவன். மனித சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக மனிதனோடு இணைந்து போராடி தன்னை இழக்கிறவர், தோல்வி அடைகிறவர் இறைவன்.

இறைவனின் தோல்விக்கும் மனித தோல்விக்கும் வேற்றுமை உண்டு. இறைவனின் தோல்வி தற்காலிகமானது. இறைவனின் தோல்வி என்பது ஒரு இயக்கத்தின் ஒரு கட்டம். ஆனால் அதுவல்ல இறுதி முடிவு. இறுதி விளக்கம் உயிர்ப்பு. இறுதி விளக்கம் வெற்றி வாழ்வு. இறைவனால் இயக்கப்படுபவர்களும் இந்தத் தன்மையில் பங்கு பெறுகின்றனர்.

இயேசுவின் இறப்பு உயிர்ப்பு மறைபொருளில் நம்முடைய வாழ்வின் இறுதி அர்த்தமும் தெளிவாகிறது. நம்முடைய வாழ்வு முழுமையாக கையளிக்கப்பட வேண்டியது. முழுமையாக அர்ப்பணிக்கப்பட வேண்டியது. அதிலே தான் அதன் செழுமையும் நிறைவும் அடங்கியிருக்கிறது.

இறைமை என்பது இழப்பதில் இருக்கிறது. இறைமை என்பது செலவிடப்படுவது. செலவிடப்படுவதற்காக படப்பட்டிருப்பது மனித வாழ்க்கை மட்டுமல்ல; இறைவனும் தன்னைச் செலவிட்டுக் கொண்டேயிருக்கிறார். "உண்டாகட்டும்" என்றுச் சொல்லி எளிதாகப் புதுமைகளை நிகழ்த்துவது என்பது அல்ல தன்னைச் செலவிடும் இறைவனின் படைப்பு முயற்சி. படைப்பு என்பது ஒரு சிரமமான முயற்சி. தோல்விகள் நிறைந்த ஒரு முயற்சி. தன்னை இழக்க வேண்டிய ஒரு முயற்சி. அதில் தான் மறுபடைப்பு உருவாகிறது; ஒரு மறு உயிர்ப்பு மனித சமுதாயத்திற்கு ஏற்படுகிறது. அதற்காகத் தன்னை முழுமையாக இழப்பது தான் இறைமை.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

1. இயேசுவின் காலத்தில் பாவிகள் என்பவர்கள் ஆயனில்லாத ஆடுகளே என்று சொல்வது சரி தானா? ஏன்?

2. இயேசு எவ்வாறு நல்ல ஆயனாக விளங்கினார்?

3. பாமர மக்களில் சிலரும் யூதத் தலைவர்களில் பலரும் இயேசுவின் நற்செய்தியைப் புறக்கணித்தார்கள். காரணம் என்ன?

?

4. கொல்லப்படலாம் என்ற ஆபத்தான சூழ்நிலையை இயேசு எவ்வாறு சந்தித்தார்? அதற்குரிய ஆற்றலை அவர் எவ்வாறு பெற்றார்?

5. இயேசுவின் இறப்பின் இடறல் என்ன? அதனை மேற்கொள்ள சீடர்களுக்கு உதவியவை எவை?

6. உயிர்ப்பை எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்? இலாசர் 'உயிர்த்ததற்கும்' இயேசு உயிர்த்ததற்கும் உள்ள வேற்றுமை என்ன?

7. இயேசுவை இறைவன் என்று அழைத்ததில் விசுவாசப் புரட்சி உள்ளதா? எப்படி?

7

திருச்சபை

இயேசுவின் தொடர்ச்சியே திருச்சபை

இயேசு ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். பல இடங்களுக்குப் போய் அங்கு மக்களையெல்லாம் ஒன்று திரட்டி, இறையரசை உருவாக்க வேண்டுமென்ற துடிப்போடு ஒரு ஊரில் மட்டும் இருக்காமல், இயக்கத்தை வளர்த்தெடுத்தார். (மாற்கு 1:35-39).

அந்த இயக்கம் அவருடைய காலத்திற்கு பிறகும் தொடர வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்ற போது இயேசு அதற்காக சீடர்களைத் தயார் செய்கிறார். அப்போது தான் சீடர்கள், பன்னிருவர், திருத்தூதர் ஆகிறார்கள்.

இயேசுவினுடைய இலட்சியம் என்னவென்றால் அவர் ஆரம்பித்த இயக்கம் அவருக்குப் பின்னும் தொடர வேண்டும் என்பதே. இயேசுவின் தொடர்ச்சியான இந்த இயக்கமே திருச்சபை.

எனவே திருச்சபை என்பது இயேசுவினுடைய எல்லா இலட்சியங்களையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியது. இயேசுவின் பணியில் மனித மையம் இருந்ததைப் பார்த்தோம். மனிதர்கள், மனித சமுதாயம், மனித சமுதாயத்திற்கு பின்புலமாக இருக்கக் கூடிய உலகம், இவை அனைத்தினுடைய வளர்ச்சிக்காகத் திட்டமிட்டபோது இயேசுவுக்கு என்னப் புலப்பட்டதோ அதை அவர் நிறைவேற்றினார்.

திருச்சபையும் இதே பிடிப்போடு, இதே விசாலமான பார்வையோடு மத அமைப்புகளுக்குக் கட்டுப்படாமல், பழக்க வழக்கங்களுக்குக் கட்டுப்படாமல், மனிதர்கள், மனித சமுதாயம் ஒன்றையே மனதில் வைத்து செயல் புரிய வேண்டும். இந்த மனித மையமே ஆதித் திருச்சபையின் சிறந்த கவர்ச்சியாக இருந்தது. அவர்களிடையே ஏழைகள் இல்லாமல் பொருட்களைப் பொது உடமையாகக் கொண்ட சமத்துவ, சகோதரத்துவ சமுதாயமானது திருச்சபை பரவுவதற்குக்காரணமாக இருந்தது.

> நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார். என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாகப் பெற்றிருந்தனர். தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கோண்டு வந்து திருத்தூதருடைய காலடியில் வைப்பர்; அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்.
>
> நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள்; பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள்; எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்; ஆண்டவரும் தாம் மீட்டுக்கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டே இருந்தார்.
>
> திப 4 : 32–35; 2 : 44–47

தன்னைப் போன்று தியாக உணர்வுடன் **மனிதர்களை அன்பு செய்வதையே இயேசு தன் சீடரின் அடையாளமாகத் தந்து**

'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் என்றார்.

யோவான் 13:34-35

விட்டுச்சென்றார் என்பதைஉணர்ந்த கிறிஸ்தவ சமூகம் அனைத்தையும் துறக்கும் சகோதரத்துவத்தில் வாழ்ந்ததில் ஆச்சரியமில்லை.

திருத்தூதர்களின் முதல் திருச்சங்கமான எருசலேம் சங்கம் மனித மையத்திற்குச் சான்றாக அமைகிறது (தி.ப. 15:1-29). ஒருவன் கிறிஸ்தவன் ஆக வேண்டுமானால் அவனுக்கு விருத்தசேதனமும் வேண்டுமா என்ற ஒரு கேள்வி எழுந்தது. விருத்தசேதனம் என்பது யூதர்களாவதற்கான அடையாளம். திருத்தூதர்கள் இணைந்து சிந்தித்து, ஒத்தக் கருத்துக்கு வருகிறார்கள். மனிதனுக்குப் பயன்படுவது, மனித சமுதாயத்துக்கு பயன்படுவது தான் முக்கியமானது (தி.ப. 15:28). ஒரு சில தேவையில்லாத விஷயங்களை விலக்கினால் யாரும் கிறிஸ்தவராகலாம் (தி.ப. 15:29). ஏழைகள் மீது அன்பு இன்றியமையாதது என்று குறிப்பிடுகின்றனர்.

தொடர்ந்து துன்புறுத்தப்படும் மனித மையம்

பாலஸ்தீனத்திலிருந்து திருச்சபை உரோமை நகரங்களுக்கு பரவுகிறது. இவ்வாறு பரவுகின்ற போது 1, 2 நூற்றாண்டு கால கட்டங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப்பல கலவரங்கள், துன்புறுத்தல்கள் உருவாகின. பல கிறிஸ்தவர் கொல்லப் பட்டார்கள். அதன் காரணங்களை வரலாற்று ஆசிரியர்கள் விளக்குகின்றனர். திடீரென எங்காவது ஓரிடத்தில் இயற்கையின் சீற்றமாக வெள்ளப்பெருக்கோ, தீ விபத்தோ, நில நடுக்கமோ, ஏதாவது சமூகப் பாதிப்போ ஏற்படும் போது இதற்கெல்லாம் காரணம், இப்போது புதிதாக முளைத்திருக்கக் கூடிய இந்த கிறிஸ்தவ இயக்கமே என்று முடிவு செய்தனர். அதற்கு இவ்வாறு காரணமும் சொன்னார்கள்.

மதத்தை மையமாகக் கொண்டிருந்த உரோமைச் சமுதாயம், தொடக்க காலத்திருச்சபையை நாத்திக இயக்கமாகப் பார்த்தது. கடவுள்

என்ற வார்த்தையைச் சொல்கிறார்களேயொழிய, அதனுள் இருக்கும் உட்பொருள் கடவுள் அல்ல, தெய்வீகம் அல்ல, என்பது அவர்களது குற்றச்சாட்டாக இருந்தது. கடவுள் என்றால் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டவர், எங்கோ இருக்கிறவர், வல்லவர் என்றுகருதிய மக்களுக்கு கிறிஸ்தவர்களின் போதனையும் செயல்பாடும் முற்றிலும் முரணாக இருந்தது.

அதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் சொல்லலாம்:

1. கிறிஸ்தவர்களுக்கென்று ஆலயம் இருக்கவில்லை. அவர்கள் வீடுகளில் கூடினார்கள். ஆலயத்தில் தான் கடவுளை வழிபட முடியும்; பலி செலுத்த முடியும்; எனவே கிறிஸ்தவர்கள் கடவுளை வழிபடுவது இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் கடவுள் கோபமுற்றுள்ளார் என்று கருதினர்.

2. கிறிஸ்தவர்கள் வீடுகளில் கூடி என்ன செய்கிறார்கள் என்று விசாரித்த போது அவர்கள் அப்பம் பிட்டு விருந்து உண்பதாகவே மற்றவர்களுக்குத் தெரிந்தது. இயேசு என்று யாரோ ஒருவர் இருந்தாராம்; அவர் கொல்லப்பட்டாராம்; அவருடைய பெயரால் இவர்கள் ஒன்று கூடி உண்கிறார்களாம். சாப்பிடுவதை இறை வழிபாடு என சொல்ல முடியுமா? யார் வேண்டுமானாலும் சாப்பிடலாமே? என்ற வகையிலே பிறமக்கள் சிந்தித்தார்கள்.

3. ஒன்று கூடும் போது அன்பு முத்தங்கள் பரிமாறுவதும் தெரிவந்தது. இதனை பாலியல் சுதந்திரம் என்று கூறி இவர்கள் மிகவும் மோசமானவர்கள், இவர்களுக்கு ஒழுக்கம் கிடையாது, சமுதாயத்திலே கட்டுப்பாடுகள் இல்லை என்று நினைத்தார்கள்.

ஆலயம் இல்லை, ஆலயத்தில் வழிபாடு இல்லை, சடங்குகள் இல்லை, கடவுளுக்கென்று பலி இல்லை, கடவுளுக்கென்று கொண்டு வரும் காணிக்கைப் பொருட்களையும் ஏழைகளுக்கும், விதவைகளுக்குமே கொடுக்கின்றார்கள், கடவுளுக்கென்று எதுவுமே செய்யவில்லையே, என்று நினைத்து, இதனால் தான் கடவுள் கோபமுற்று இயற்கையில் தனது சீற்றத்தை வெளிப்படுத்துகிறார் என்று நினைத்தார்கள்.

எனவே கிறிஸ்தவம் என்பது சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் சாபக்கேடாகக் கருதினர். அதை வளர விடக் கூடாது என்று நினைத்தனர். எனவே மக்களுக்கு ஏதாவது பிரச்சனை வந்தவுடன் எளிதாக இதெல்லாம் கிறிஸ்தவர்களால் தான் ஏற்பட்டது என்று குற்றம் சாட்டி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவும், கொல்லவும் முன் வந்தனர்.

இயேசுவைப் பற்றிச் சொல்லும் போது கூட, "சமுதாயத்தின் நலனுக்காக ஒருவன் கொல்லப்படுவது நலன்" என்று சொன்னது போல கிறிஸ்தவர்களும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக முன்னேற்றத்திற்காகக் கொல்லப்படுவது நல்லது என்று அன்றைய சமுதாயம் கருதியது.

சுருங்கக்கூறின் சம காலத்தினர், கிறிஸ்தவத்தை கடவுளுக்காகவுள்ள ஒரு மதம் எனக் கருதவில்லை. கிறிஸ்தவம் மனிதனைச் சார்ந்ததாகவும் மனிதத்துவத்தோடு தொடர்புடையதாகவும் கருதினர். மனித வளர்ச்சி மனித முன்னேற்றம், ஏழைகள் என்று தான் அக்கறைப் படுகிறார்களே ஒழிய, அநீதமாக இருந்தாலும் சமூக அமைப்புக்கு ஆதரவு தந்து அநீத சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உழைக்கவில்லை என்பது தான் குற்றச்சாட்டு.

இதில் இயேசுவின் பார்வைக்கும் போக்குக்கும் திருச்சபை பிரமாணிக்கமாக இருந்ததை கவனிக்க வேண்டும்.

மறு உலகம் இன்னொரு உலகம் என்றெல்லாம் பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் அவர்கள் என்ன புரிந்து கொண்டார்கள் என்றால் வேறொரு உலகமென்பதை விட நாளைக்கு வர இருக்கிற உலகம் என்பதே. இந்த உலகத்தின் அடுத்த கட்டமேயொழிய, இவ்வுலகிற்கு இணையாக வருவது அல்ல. நாளைக்கு, ஒரு தலைமுறைக்கு பிறகு, ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வரும் உலகம் என்று புரிந்திருக்கலாம்.

இவ்வாறு ஒரு சமூக மாற்றததை அவர்கள் எதிர் நோக்கி இருந்தார்கள். மறுவுலகத்திற்காக இந்த உலகம், அல்லது கடவுளுக்காக மனிதன் என்ற சிந்தனையின்றி **இந்த உலகத்திற்காகவும், மனிதனுக்காகவும், கடவுளும்-மதமும் இருக்கின்றன என்று புரிந்திருக்க வேண்டும்.**

கான்ஸ்டன்டைன் கொண்டு வந்த கடவுள் மையம்

துவக்கக் காலத்தில் இருந்தப் புரிதலிலே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. நான்காம் நூற்றாண்டிலே திருச்சபை ஒரு வலுவான சக்தியாக மாறுவதைக் கண்டு உரோமைப் பேரரசைக் காக்க இந்தக் கிறிஸ்தவர்களால் தான் இயலும் என்ற உணர்வு கான்ஸ்டன்டைன் மன்னனுக்கு ஏற்பட, அவன் கிறிஸ்தவர்களோடு தன்னை இணைத்துக் கொள்கிறான், கிறிஸ்தவன் ஆனான்.

கிறிஸ்தவத்திற்கு அரசு அங்கீகாரத்தையும் கொடுத்தான். கிறிஸ்தவ நெறி ஒதுக்கப்பட்ட ஒன்றாக இல்லாமல் சட்டப் பூர்வமானதாக மாறியது. தீவிரவாதமாக, சமூகவிரோதியாக, கருதப்பட்ட இயக்கம் நிலவுடமை சமுதாய அமைப்புக்கு இடர் விளைவிக்காததாகக் கருதப்பட்டது. சில ஆண்டுகளுக்குப்பின் உரோமை அரசின் மதமாகவும் அறிவிக்கப்பட்டது.

அரசு மதமென்றால் அரசின் ஆதரவைப் பெற்ற மதம். அந்த மதத்தைப் பாதுகாத்தெடுக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்கிறது. மதத்தின் புரவலராக உரோமை அரசர் மாறிவிட்டார். அரசின் உதவி பெற்று அரச அமைப்புப்படி மதமும் இயக்கத்தன்மையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து நிறுவனத்தன்மை கொள்ள ஆரம்பித்தது. இதற்கு விலையாக அரசைப் பாதுகாக்கும், நியாயப்படுத்தும் பொறுப்பு அதற்கு கொடுக்கப்பட்டது. சீர்திருத்தத்தைக்கொண்டு வருவதற்காக அல்ல, சீரழிந்திருக்கும் சமுதாயத்தை, நிலஉடைமை சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக திருச்சபைக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, தொண்டர்கள் எல்லோரும் படிப்படியாகப் பதவியில் உள்ளவர்களாகவும், நல்ல வசதியுள்ளவர்களாகவும் மாறுகிறார்கள். திருச்சபைக்கு சொத்து வந்து குவிகிறது. ஆயர்கள் சிற்றரசர்களாக மாறுகின்றனர்.

நிறுவனமயமான
இயேசுவின்
இயக்கம்

உரோமை மதம் அங்கீகாரம் இழந்து சட்டத்துக்கு புறம்பானதாகிறது. உரோமை மதத்தினுடைய பேராலயங்களெல்லாம் கைப்பற்றப்பட்டு கிறிஸ்தவ மதத்திற்கு கொடுக்கப்படுகின்றன. இவற்றைத் தான் "பசிலிக்காப் பேராலயங்கள்" என்கிறோம். உரோமை தெய்வங்களுடைய ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்களாக மாறுகின்றன. வீடுகளிலிருந்து ஆலயத்திற்கு வருகிறது திருச்சபை.

ஆலயத்துக்கும் திருச்சபைக்கும் கிடைத்தச்சொத்தை நிர்வகிக்கும் துறவிகளும், ஆயர்களும் சொத்து சேர்ப்பவர்களாக மாறுகின்றார்கள். இந்த அநீதியான உலகத்தைக் கடந்து வரப்போகிற உலகத்திற்கு வழி செய்வதற்குப் பதிலாக, இந்த **அநீதியான உலகத்தை கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு திருச்சபையிடம் ஒப்படைக்கப்படுகிறது.**

அது வரையிலும் பாமர மக்களுடைய உதவியினால் இயங்கி வந்ததால் பெரும் அமைப்பாக திருச்சபை இருக்கவில்லை. இப்போது அப்படியல்ல. பெரிய அமைப்பை உருவாக்கிக் கட்டிக்காப்பதற்கு பணம் இருக்கிறது. அருட்பணியாளர்கள் முழு நேரப் பணியாளர்களாக மாறி அந்த அமைப்பைக் கட்டிக் காக்க அதற்கு இயைந்த இறையியலை உருவாக்குவதும், கற்றுக் கொடுப்பதும், தம் கடமையாகக் கொள்கிறார்கள்.

அரசர்களைப் போல பாமர மக்களிடமிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கி விடுகிறது திருச்சபைத் தலைமை. அதற்கேற்ப இறையியலையும் மாற்றிக் கொள்கிறது. அதிகார வர்க்கத்தை நியாயப்படுத்தும் பிற மதங்களில் உள்ளது போல கடவுள் தூரமாக அகன்று இருப்பதாகவே கருதப்படுகிறார். ஒதுங்கித் தூரமாக இருப்பது மாண்பின் அடையாளமாகவும் புனிதத்தின் பண்பாகவும் கருதப்படுகிறது. அரசர்கள் அகன்றிருப்பது இறையருள் அவர்களோடு இருப்பதால் தான் என்பதால் இறைவனும் அகன்று தூரமாக இருப்பவராகவே கருதப்படுகிறார்.

அரசர் வெண்சாமரை வீசும் சேவகர்கள் புடைசூழ இருப்பது போல இறைவனும் அவரைப் புகழ்ந்து பாடும் வானதூதர் புடைசூழ இன்புற்றிருக்கிறார் என்று சித்தரிக்கப்பட்டார்.

அரசனை நேரடியாக அணுகமுடியாது. அதற்கு பரிந்துபேசும் அரசியோ, அமைச்சர்களோ தேவை. அதைப்போலவே இறைவனிடமும் இயேசுவிடமும் பரிந்துபேச இயேசுவின் அன்னையும் தூதர்களும், புனிதர்களும் முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

அரசர்களைப் போல
அகன்று போன
இறைவன்

அரசர்கள் ஆடம்பரத்தில் வாழ்ந்தார்கள். இறைவனும் ஆரம்பரத்தோடு தொடர்புப் படுத்தப்பட்டார். ஆலயங்கள் அதிகச் செலவிலே கட்டப்பட்டன. அங்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் விலைஉயர்ந்தவையாய் இருந்தன. அரசர்களுக்குத் தங்கத் தட்டும் கிண்ணமும் என்றால் திருப்பலியிலுள்ள தட்டும் கிண்ணமும் தங்கத்தினால் செய்யப்பட்டன. கிறிஸ்து ஆயன், கிறிஸ்து அரசர் ஆனார். நிலஉடைமை சமுதாயத்தில் மக்களுக்காக அரசன் என்ற புரிதல் இல்லை. அரசனுக்காகவே மக்கள் இருக்கிறார்கள். அரசன் எதை விரும்புகிறானோ அது தான் சட்டம். அதைச் செய்து முடிப்பது தான் மக்களின் கடமை. அரசனுக்காகப்

போராடி உயிர்கொடுக்க முடிவது மக்களுக்குக் கிடைத்த பேறு. அதே சிந்தனை ஓட்டத்தில் மக்களெல்லாம் கடவுளுக்காக, மனிதர்கள் உறையும் இந்த உலகம் இறைவன் உறையும் மறு உலகிற்காக என்ற சிந்தனை திருச்சபையின் இறையியலானது.

மன்னராட்சியிலே ஒடுக்கப்பட்ட பாமர மக்கள் சமூகமாற்றம் வேண்டும் என்று கோருகிற போது, அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை அடித்து உதைத்துக் கொல்ல அதிகாரமும் வசதியும் உண்டு. அதுபோன்று விசாரணை(inquisition) என்ற அமைப்பு திருச்சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. மக்கள் சார்பாகப் பேசுகிறவர்கள், மாற்றம் வேண்டும் என்று கோருகிறவர்கள், வித்தியாசமாக சிந்திக்கிறவர்கள் போன்றவர்களை கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராக பேசுகிறார்கள் என குற்றம் சாட்டி அதிகாரபூர்வமான விசாரணை செய்து, தீர்ப்பிடப்பட்டு தீயிலிட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் பல உள.

பாமர மக்கள் வாழ்க்கையிலே வளர்ச்சி பெற இயலாமல் திண்டாடிக் குமுறுகிற போது "இந்த உலகத்தில் துன்பம் இருக்கத் தான் செய்யும், இந்த உலகம் ஒரு சோதனை களம், மறு உலகில் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும்" என்று போதிக்கப்பட்டது. "இந்த உலகத்தில் அமைதியாக பொறுமையாக இருந்து, கஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் துன்பப்படுவது முன்னால் செய்த பாவத்தின் விளைவாகும். எனவே துன்பப்படுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. இந்த வேதனைகளை பொறுமையாக சகித்துக் கொண்டால், புரட்சி செய்யாமல் இருந்தால், இதை மாற்றுவதற்காக நேரத்தை வீணாக்காமல் இருந்தால், பணக்காரரைப் பார்த்து பொறாமைப் படாமல் இருந்தால், மறு உலகில் நல்வாழ்வு கிடைக்கும்" என்று மக்கள் சிந்தனை திசை திருப்பப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேலின் தலைமை எகிப்தை நாடுவதாகவும், எகிப்தின் அடிமைதனத்தை விரும்புவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது போல இயேசு கொண்டு வந்த புதுமை நிலையைப் புறக்கணித்து விட்டு, பிற்போக்கு நிலையை, மக்கள் விரோதப் போக்கை வலுவாக பற்றிக் கொண்டது திருச்சபை.

சமய சீர்திருத்தத் தென்றல்

இந்த நிலையை மாற்றுவதற்காக பல சீர்திருத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அதன் உச்சமாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டது. திருச்சபை தனது ஆரம்ப அனுபவத்திற்கு, தனது ஊற்றுக்குச் சென்றது. தன்னுடைய அஸ்திவாரத்தை அகழ்ந்து பார்த்தது. விவிலிய வெளிச்சத்திலே, இயேசு கிறிஸ்து அனுபவத்திலே ஒரு தெளிவு கிடைத்தது. மனிதர்கள், மனித மையம், மனிதனுக்கு சேவை என்பது முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவானது. இருப்பினும் ஊசலாட்டம் இல்லாமலில்லை.

காரணம் உண்டு திருச்சபை இன்று ஓரளவுக்கு அதிகாரத்தையும், பலத்தையும் இழந்து விட்டாலும் கூட, இன்னும் ஆதிக்கச் சக்திகளோடு அதற்குத் தொடர்பு இருக்கிறது. இன்றும் அதனிடம் பணம், சொத்து போன்றவை அளவுக்கு அதிகமாகவே உள்ளன. இந்த வசதிகளை எல்லாம் இழப்பதற்கு திருச்சபை போதுமான அளவு தயாராக இல்லாததினால், மனித மையம் என்பதற்குப் பதிலாக கடவுள் மையமும் மனித மையமும் என்ற ஒரு இடைப்பட்ட நிலையில் வந்து நிற்கிறது.

இன்று திருச்சபையில், உலகத்தைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் கவலைப்படாமல் கடவுளைப்பற்றி மட்டுமேஅக்கறையாக இருப்போம் எனச் சொல்லக் கூடியவர்களுக்கு ஆதரவு குறைவாகவே இருக்கும். ஆனால் பரவலாக இருக்கிற குறைபாடு ஒன்று உண்டு, **"மனிதனையும், கடவுளையும்", மையமாகக் கொள்ள வேண்டும்** என்றும் **"இந்த உலகத்தையும், மறு உலகத்தையும்" பேணவேண்டும் என்ற மனநிலையே அதிகமாக உள்ளது.** இந்த நிலைபாட்டை பழைய ஏற்பாட்டிற்கும் இயேசுவுக்கும் இடையில் நின்ற திருமுழுக்கு யோவானின் இழுபறி நிலைக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்.

இயேசுவும் திருமுழுக்கு யோவானும்

இளமைப்பருவத்திலிருந்தே இயேசு ஒரு தேடலில் ஈடுபட்டிருந்தார். வாழ்வின் அர்த்தத்தைப் பற்றியும், தனக்கு இறைவன் தரும் அழைப்பைப் பற்றியும் மக்களின் விடுதலை எது என்பது பற்றியும் தேடலில் ஈடுபட்டிருந்தார். சிறுவனாக எருசலேம் ஆலயத்தில் போதகர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் (லூக்கா 2:46) இருந்தார் என்று அறிகிறோம்.

இவ்வளவு ஆர்வமாக இருந்தவர் அதன்பின் சுமார் 20 ஆண்டுகள் வீணாக இருந்தார் என்று சொல்ல முடியாது. தேடலைத் தொடர்ந்திருக்க வேண்டும். சில தெளிவுகளையும் பெற்றிருக்க வேண்டும்.

இயேசுவின் தேடலைப்பற்றி அடுத்ததாகக் குறிப்பிடப்படுவது அவர் திருமுழுக்கு யோவானின் இயக்கத்தில் சேர்ந்த நிகழ்ச்சியாகும். இயேசுவின் காலத்தில் சட்டத்தில் இறுக்கமாக இருந்த பரிசேயர் பலர் இருந்தனர். பரிசேயச் சிந்தனையோடு சட்டத்தை முழுமையாகக் கடைபிடித்து மெசியாவை வரவேற்கக் காத்திருந்த எஸ்ஸேனியர் துறவியர் இருந்தனர். ஆயுதப் போராட்டத்திலே இறங்கி உரோமையருக்குப் பயந்து தலைமறைவாக இருந்த தீவிரவாதிகள் குழு இருந்தது. இவற்றில் இயேசு உறுப்பினராகச் சேரவில்லை.

மாறாக யோவானின் குழுவில் இயேசு சேர்ந்தார். அதன் அடையாளமாகத் திருமுழுக்கு பெற்றார். யோவானின் இயக்கத்தில் இயேசுவைக் கவர்ந்தது என்ன என்று அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. யோவான் போதித்த பகிர்தல் வாழ்வு, சுரண்டலற்ற நீதியான வாழ்க்கைமுறை, பரிசேயரின் சுயதிருப்தியை எதிர்த்து வரி தண்டுவோரையும் வரவேற்றப்போக்கு (லூக்கா 3:7-14) போன்றவற்றை இயேசு விரும்பியிருக்கலாம்.

ஆனால் படிப்படியாக இயேசுவுக்கு ஒரு சில உண்மைகள் புரிந்திருக்க வேண்டும். திருமுழுக்கு யோவானிடம் வந்த மக்களில் பலர் அடித்தட்டு மக்களல்லர். அதைவிட சற்று மேல் மட்டத்தில் வசதியாகப் பல அங்கிகளை வைத்திருந்தவர், வரிதண்டிப் பணம் சேர்த்தவர்கள், படைவீரர் போன்றவர்களே யோவானை அண்டி வந்தவர்கள். ஊனமுற்றோர், பாவிகள் என்று புறக்கணிக்கப் பட்டிருந்தவர்கள், பெண்கள் போன்றோர் திருமுழுக்கு யோவானிடம் செல்ல வாய்ப்பு இல்லை. ஆனால் இவர்களை மையமாக வைத்தே சமூக மாற்றம் நடைபெற முடியும், நடைபெற வேண்டும் என்பது இயேசுவுக்குப் புலப்பட்டது.

சட்டத்தின் சில அம்சங்களை திருமுழுக்கு யோவானும் பிரமாணிக்கமாய்க் கடைப்பிடித்தார். அவர் யோர்தான் ஆற்றுக்குப் பக்கத்தில் இருப்பதற்கு ஒரு காரணமே, "எஸ்ஸீனியர்களு"டைய போக்கில் சிறிது ஈடுபாடு இருந்தது என்பதுதான். சட்டப்படி தங்களை சுத்தமாக வைத்துக் கொண்டு மெசியாவின் வருகையின் போது அவரோடு கூட சேர்ந்து அநீத அமைப்பை அழிக்கக் காத்திருந்த எஸ்ஸீனியரைப்போல யோவானும் இந்த சுத்திகரிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். எனவே தான் யோர்தான் ஆற்றுக்குப் பக்கத்தில் தங்கியிருந்திருக்க வேண்டும்.

யோவான் எளிமையாக வாழ்ந்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் செபம் செய்வது குறிப்பிட்ட நோன்புகள் செய்வது என்று சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் கருத்தாக இருந்திருக்க வேண்டும். எனவே தான் பின்னால் யோவானின் சீடர்கள் பரிசேயரோடு சேர்ந்து கொண்டு இயேசுவின் சீடர் நோன்பிருப்பதில்லை என்று இடறல் படுகின்றனர்.

இயேசுவின் பார்வையில், மிகவும் அடித்தட்டு மக்களான பாவிகள், ஒதுக்கப்பட்டவரான ஊனமுற்றோர், தொழுநோயாளிகள், பெண்கள் ஆகியோருக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென்றால் சட்டத்தைப் பற்றிய அணுகுமுறையில் மாற்றம் தேவை என்று பட்டிருக்க வேண்டும்.

இந்தப் புரிதல் பற்றி இறைத்தந்தையின் திருவுளத்தைத் தெரிந்து கொள்வதற்காக ஆவியினால் ஏவப்பட்டு பாலைவனம் சென்றார் (லூக்கா 4:1-2). இயேசுவுக்கு நல்ல தெளிவு கிடைத்தது. திரும்பி யோவானின் இடமான யோர்தானுக்குப் போகாமல், கலிலேயாவுக்குப் போகிறார். தீண்டத்தகாத மக்கள் நிறைந்த கலிலேயாவுக்குப் பாவிகள் மத்தியில் பாவிகளைத் தேடிப் போகிறார். திருயாத்திரை சென்று யோவான் போன்றவர்களைச் சந்திக்க முடியாத மக்கள் மத்தியிலே சென்று அவர்களை ஒன்று திரட்டுவதற்காகப் போகிறார்.

இதனால் இயேசுவுக்கு குறிப்பிட்ட நேரத்தில் செபம் செய்ய இயலவில்லை. எனவே தான் எல்லா வேலைகளும் முடிந்த பிறகு மலையில் செபிக்கச் சென்றார் (மத்தேயு 14:23). அல்லது அன்றைய வேலைகள் தொடங்கு முன் கருக்கல் வேளையில் செபிக்கச் சென்றார் (மாற்கு 1:35). சட்டத்தைக் கடைபிடித்தவர்கள் போல நோன்பு இருக்க இயலவில்லை.

இடறலாகும் இயேசுவின் தீவிரம்

இது திருமுழுக்கு யோவானின் சீடர்களுக்கும், ஏன் திருமுழுக்கு யோவானுக்கும் கூட இடறலாக, கேள்விக்குறியாக இருந்திருக்க வேண்டும். ஆளைப் பார்த்தால் நல்லவராக இருக்கிறார்; ஆனால் சட்டத்தைப் புறக்கணிப்பதைப் பார்த்தால் இவர் மெசியாவாக இருக்க மாட்டாரோ என்றும் தோன்றுகிறது என்று எண்ணியிருக்க வேண்டும். சந்தேகத்தைத் தீர்க்கிற வகையில் தன் சீடர்களை அனுப்பி “வர இருக்கிறவர் நீர் தானா?” என்று கேட்கச்செய்கிறார் (மத் 11:2-3).

யோவானின் சீடர்கள் தம் இடறலை வெளிப்படையாகவே காட்டிவிடுகின்றனர். (மத் 9:14) இதில் வேடிக்கை என்னவென்றால் யோவானின் சீடரும் பரிசேயரும் ஒன்றாகி விடுகின்றனர். சட்டத்தைக் கடைபிடிக்கிற விஷயத்தில் யோவானின் சீடருக்கும் பரிசேயருக்கும் பெரிய வித்தியாசம் இல்லாமலிருந்திருக்கும் என்றே கருத வேண்டியிருக்கிறது.

சுரண்டலற்ற நீதியான வாழ்வு, பகிர்தல் மனநிலை ஆகிய பண்புகளை வலியுறுத்திய யோவான் சட்டத்தின் புனிதத்தைக் கைவிட்டு விடத் தயாரில்லை. மக்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும்; சட்டத்தையும் மதிக்க வேண்டும் என்பது போன்ற ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்க வேண்டும். இயேசுவின் நிலை இதனைக் கடந்து "ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது; மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை" (மாற்கு 2:27) என்பதாக இருந்தது.

எனவேதான் முழுக்க முழுக்க முற்போக்குவாதியான, மனித மையவாதியான இயேசு திருமுழுக்கு யோவானின் இரண்டும் கெட்டான் நிலை, முற்போக்கும் பிற்போக்கும் கலந்த சமரச நிலை எவ்வளவு ஆபத்தானது, அபத்தமானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் (மாற்கு 2:21-22). பழைய துணியில் புதியதை ஒட்டுப்போட்டால் இரண்டும் கிழிந்துபோவது போல, பழைய சித்தையில் புதிய மதுவை ஊற்றி வைத்தால் சித்தையும் மதுவும் பாழாவது போல பழையதையும் புதியதையும் வைத்து சமரசம் செய்துகொண்டிருந்தால், மதங்களும் இறைவனும் மனிதனுக்காக என்ற உண்மைப் பார்வையின், புதிய பார்வையின் வீரியம் குன்றிவிடும் என்று இயேசு எச்சரிக்கிறார்.

வத்திக்கான் சங்க மறுமலர்ச்சியை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற இக்கால கட்டத்தில் இயேசுவின் எச்சரிக்கை மிகவும் பொருத்தமானது.

ஊசலாட்டமில்லாத இறைவாக்குரைத்தல்

சமுதாய மாற்றத்தை இலக்காகக் கொண்டு அதற்கு மதங்களும் கிறிஸ்தவ அனுபவமும் உதவ வேண்டும் என்ற பார்வையில் சமயங்களைச் சீரமைக்கும் பணியை மேற்கொண்டிருக்கும் இறையரசு இயக்கம் போன்றவை தம் பணியின் தேவையை இயேசுவின் போதனையிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும். எதிர்ப்புகள் மத்தியிலும், மனித மகிழ்ச்சிக்கான இலக்குகளை நிர்ணயிப்பதிலோ, இலக்குகளை அடைவதற்குத் துணை புரிவதிலோ பயன்படாத எந்த மதமும், மதக்கோட்பாடும், மதச்செயல்பாடும்

அர்த்தமற்றது. உதறித்தள்ள வேண்டியது என்பதை ஓங்கி உரைக்க வேண்டும்.

மக்கள் நல்வாழ்வுக்குத் துணை போகும் அருள்வாழ்வு உருவாகிச் செழித்தோங்க உதவ வேண்டும்.

அகவயப்படுத்த ஆய்வுக்கேள்விகள்

1. இயேசு தொடங்கிய இயக்கத்திற்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்பு என்ன?

2. திருச்சபை துவக்க காலத்தில் துன்புறுத்தப்பட்டதற்கு அது பின்பற்றிய இயேசுவின் மனித மையப்போக்கு எவ்வாறு காரணமாக இருந்திருக்கிறது?

3. மனித மையப்போக்கை கடைபிடித்தத் திருச்சபையில் அது மறையக் காரணம் என்ன?

4. நிலவுடைமை சமுதாயம் இறைவனை ஏன் தூரமாக இருப்பவராகவும் ஆடம்பரத்தை விரும்புகிறவராகவும் சித்தரித்தது?

5. இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஏற்படுத்தியுள்ள புரட்சிகரமான மாற்றம் என்ன?

6. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும் மறுமலர்ச்சியின் ஊசலாட்டத்திற்குக் காரணம் என்ன?

7. இந்த ஊசலாட்டத்தை திருமுழுக்கு யோவானின் அணுகு முறையோடு தொடர்புபடுத்துக.

8. மத ஈடுபாட்டுடன் சமூக சீர்திருத்தம் செய்ய விரும்புவோரின் கடமை என்ன?



8

பொது நிலையினர் அருள்வாழ்வு

அருள்வாழ்வு என்றால் என்ன?

அருள்வாழ்வு என்பது ஆவியின் ஆற்றலினால் வாழ்கின்ற வாழ்க்கை முறையும் அவ்வாறு வாழ்வதற்குத் தேவையான வழிமுறைகளும் அடங்கியதாகும். மனிதரிடத்தில் ஜடத்தின் தன்மையும் மனிதனின் இயல்பான விலங்கின தன்மையும் மட்டுமல்ல உள்ளது. பகுத்தறிந்து அன்பில் ஊறிய அர்ப்பணத்துடன் வாழும் ஆற்றலும் மனிதருக்கு உண்டு. இந்தத் திறமையை உசுப்பி விட்டு, வளர்த்தெடுத்து, அதனைச் செயல்பட வைக்கும் போது உருவாகும் வாழ்வுப் பாணியே அருள்வாழ்வாகும். இதனை ஆவியில் வாழ்வு, ஆவியின் வாழ்வு என்றும் வடசொல்லில் ஆன்மீக வாழ்வு என்றும் சொல்லலாம்.

இந்த அருள்வாழ்வானது வாழ்க்கைச் சூழ்நிலை, இருக்கின்ற திறமைகள், தகுதிகள் மற்றும் தான் தேர்ந்து கொண்டிருக்கும் துறை

போன்றவை அடிப்படையில் சில மாற்றங்களைக் கொண்டதாக இருக்கும்.

ஆவியின் ஆற்றலினால் வாழ்கிறபோது பொதுநிலையினரின் வாழ்வுமுறை எப்படி இருக்கும்?

திருச்சபையின் பணியே
பொதுநிலையினரின் பணி

பொதுநிலையினர் என்பவர்கள் திருச்சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள். இவர்கள் திருச்சபையின் பணியைச் செய்கிறவர்கள். இவர்கள் தம் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு உதவுகின்றவர்களே குருநிலையினரும் துறவியரும் ஆவர்.

"காப்பாற்றப்பட வேண்டியவர்கள் மனித ஆட்கள்; புதுப்பிக்கப்பட வேண்டியது மனித சமுதாயம். ஆகவே இவண் நாம் அளிக்கவிருக்கின்ற விளக்கம் அனைத்திற்கும் மையமாக இருப்பவர்கள் மனிதரே ஆவர்". மனித மையத்திற்கே உயிர் துறந்த இயேசுவின் சீடர் குழாமான ஆயர்கள் ஆவியின் ஏவுதலிலே இரண்டாம் வத்திக்கான் சங்கமாகக் கூடியபோது சொன்ன வார்த்தைகள். 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற ஏட்டில் (இ.உ.தி.) 3-ம் எண்ணில் மேற்கண்டவாறு கூறுகிறது.

இதுவே திருச்சபையின் பணி. இந்தத் திருச்சபையின் பணியை உலகு சார்ந்த பணியாகச் செய்வதே பொதுநிலையினரின் சிறப்பு.

> "உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொதுநிலையினருக்கு உரியதும் தனிப்பட்ட விதத்தில் அவர்களைச் சார்ந்ததும் ஆகும். உலகு சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதின் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்கத் தேடுவது தங்களது தனிப்பட்ட அழைப்பாகப் பொதுநிலையினரைச் சார்ந்தது"
> திருச்சபை ஒ.தி. எண் 31

அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்னும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற சமூக சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதில் ஈடுபட்டிருப்பவர்களே பொதுநிலையினர். இது பல பணிகளில் ஒன்று அல்ல. இதுவே இயேசுவின் சீடர் ஆற்றவேண்டிய பணி.

பொதுநிலையினர் ஆற்றவேண்டிய பணியே திருச்சபையின் பணியாகும். இந்தக்

காரியத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திலும் ஒரு மயக்கம் இருப்பது தெரிகிறது. ‘திருச்சபை’ என்ற ஏட்டில் பிரிவு இரண்டில் இறை மக்களைப் பற்றிச் சொல்லிவிட்டு அடுத்தப் பிரிவில் ஆயர்கள் மற்றும் பணியாளர்களைப் பற்றிச் சொல்கிறது. அதன் பிறகே பொதுநிலையினரைப் பற்றி விளக்குகிறது. இறை மக்களைப் பற்றிக் குறிப்பிட்டதும் பொதுநிலையினரைப் பற்றிய பிரிவு அமைந்திருக்க வேண்டும்.

ஏனெனில், திரு ஆட்சியாளர்கள், பணியாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள், பொதுநிலையினரின் உலகு சார்ந்த பணிக்குத் துணை நிற்பவர்களாவர். இவ்வுலக அமைப்புகளிலும் செயல்பாடுகளிலும் இறையாட்சித் தன்மை இருக்க வேண்டுமென்று உலகில் ஈடுபட்டுச் செயல்படும் போது பொதுநிலையினருக்கு ஏற்படும் தொய்வு, தெளிவின்மை ஆகியவற்றை விசுவாச வெளிச்சத்தால் போக்கிட மறை உரை, திருவழிபாடு ஆகியவற்றால் உதவுபவர்கள்; உற்சாகப்படுத்துபவர்கள்; பொதுநிலையினரின் பணிகளை ஒருங்கிணைப்பவர்கள். பொதுநிலையினர் இல்லை என்றால் அருட்பணியார்களுக்கு வேலை இல்லை. அவ்வேளைகளில் அருட்பணியாளர்கள் பொதுநிலையினராக உலகப் பணிகளைச் செய்ய வேண்டியது தான்.

பொதுநிலையினருக்குத் துறவியர் செய்யும் சேவை

துறவியர் அடிப்படையில் பொதுநிலையினரே. ஆனால் அவர்கள் தீவிரமான பொதுநிலையினர். இயேசுவின் ஆவியோடு இவ்வுலகைச் சீரமைக்கப் புறப்படும்போது அவருக்கு ஏற்பட்டது போல உயிருக்கு ஆபத்து வரலாம். இயேசுவின் தீவிரப் பணிகள் யோவன்னா, சூசன்னா போன்ற பெண்கள் தம் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்ததனாலேயே தாங்கிப் பிடிக்கப்பட்டன. அதனால் தான் இயேசு வருவாய் தரும் தொழிலில் ஈடுபடாமல் பணிகள் செய்ய முடிந்தது. திருமணம் செய்து கொண்டு குடும்பம் அமைக்காததனால் தான் இயேசுவால் இறையாட்சிப் பணியை வேகமாகச் செய்ய முடிந்தது. உலக உருமாற்றத்தைத் தீவிரமாகச் செய்ய குடும்பத்தையும் வருவாயையும் துறந்தவர் இயேசு: பொதுநிலைத் துறவி.

துறவியர் என்பார் இறையாட்சிப் பணியானது எப்படிப்பட்ட தீவிரத்தோடு நடைபெற வேண்டுமென்று சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் தம் வாழ்க்கை முறையாலும் செயல்பாடுகளாலும் உணர்த்திக் கொண்டிருப்பவர்கள்.

உலகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இறைவனின் திட்டம் நிறைவேறவும் குடும்பமும் தொழிலும் இன்றியமையாதவை. குடும்ப உறவில் கிடைக்கும் மகிழ்ச்சி, உற்பத்தி செய்வதில் கிடைக்கிற நிறைவு இவையெல்லாமே இறைவனின் திட்டத்தில் அடிப்படையானவை. குறைபாடுகள் அல்ல. இவற்றில் ஈடுபடும்போது இவை நம்மை சுயநலத்தில் அமுக்கிவிடுவதற்கும் வாய்ப்பு உள்ளது. குடும்ப உறவில் மூழ்குகிறவர்கள் தமது குடும்பத்தோடு முடங்கி இறைதிட்டத்திற்கேற்ப அன்பைப் பரவலாக்குவதில் அக்கறை செலுத்தாமலிருக்கச் செய்யலாம். குடும்பத்திலிருக்கிறவர்களுக்கு குடும்ப உறுப்பினர் தருகின்ற கட்டுப்பாடுகளும் நிர்பந்தங்களும் உண்டு. குழந்தைகள் உருவாகி ஆளாவது வரையிலும் பெற்றோருக்கு தாம் விரும்புவது போல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாது. சமூக அர்ப்பணங்கள் செய்ய முடியாது; செய்யக்கூடாது. குடும்பத்தின் பொறுப்புகள் இறைத்திட்டத்தின் பகுதியாகும். இந்த நியாயமான கடமையைச் சாக்குப்போக்காக வைத்துக்கொண்டு தம் சமூகக் கடமைகளை உதறித்தள்ளும் சோதனை எல்லாருக்கும் உண்டு. அந்த வேளையில், "யார் எனது தாயும் சகோதரர்களும்? கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறவர்களே என் உறவினர்" (மாற்கு 3:31-35) என்று சொல்லக்கூடிய வாழ்க்கைமுறை பொதுநிலையினர் முன் நிற்கமுடியும். தியாகத்தோடும் அர்ப்பணத்தோடும் இறைத்திட்டத்திற்கேற்ப குடும்ப வாழ்வு வாழ இந்தத் துறவற வாழ்வுமுறை அவசியம்.

உழைத்து உற்பத்தி செய்து செல்வம் சேர்ப்பது என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. ஆனால் உருட்டலும் புரட்டலும் செய்து உற்பத்தியின் செல்வம் தம்மிடமே குவியச்செய்து அந்தச் செல்வம் தரும் சுகத்தில் உலகத்திற்கு இறைவனின் திட்டத்தை உதறித் தள்ளிவிட்டு தனது சகோதரனின் வாழ்வையும் சீரழித்து தன்னுடைய வாழ்வையும் பயனற்றதாக்கக்கூடிய சோதனை எல்லோருக்கும் ஏற்பட வாய்ப்புண்டு. செல்வத்தின் பாதுகாப்பின்றி வாழ இயலாது என்று நினைத்து நிலையான நல்வாழ்வை இழக்கும் ஆபத்து செல்வம் சேகரிப்பதில் ஈடுபட்டிருக்கும் எல்லாருக்கும் உண்டு (மாற்கு 10:17-23). இவ்வேளையில் உழைத்துச் செல்வம் சேர்ப்பதில் ஒதுங்கி நின்று வானத்துப்பறவைகளையும் காட்டு மலர்ச்செடிகளையும் உற்றுப்பார்த்து அவை பராமரிக்கப்படுவது போல தாமும் காப்பாற்றப்படுவர் என்ற நம்பிக்கையில் இறையாட்சியைக் கொண்டுவருவதில் தீவிரமாக இருக்கும் துறவியர் (மத்தேயு 6:25-34) சேவை செய்ய முடியும். வருவாய் தரும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் செல்வத்தின் பொதுவுடமைத் தன்மையைப் புரிந்து கொண்டு தேவைக்கேற்ப பகிர்ந்துண்ணும்

னபைப்பெறவும் (தி.ப. 4:32-35) அர்ப்பணத்தோடு வாழ்வோரை ஆதரிக்கவும் (லூக்கா 8:1-3) லாபம் சம்பாதிக்கவன்றி பிர்வாழத்தேவையான தொழில் கொடுக்க உடமைகளைப் பயன்படுத்தும் தன்மையை வளர்க்கவும் (மத்தேயு 20:1-9), பாடுபட்டு உழைத்து நலிவுற்றோருக்கு துணை நின்று பெற்றுக் கொள்வதைவிடக் கொடுத்தலே பேறுடைமை என்பதை அனுபவிக்கவும் ஏவுதலும் ஆற்றலும் பெறுவதற்குத் துறவறம் துணைபுரியும் என்பதில் சந்தேகமே இல்லை.

தலைமைப் பணி செய்யும் அருட்பணியாளரும் தீவிரத்தின் அடையாளமாக விளங்கும் துறவியரும் அல்லாத பொதுநிலையினர், ஆவியின் ஏவுதலினால் வாழும்போது அவர்களது வாழ்க்கைப் போக்கு எவ்வாறு இருக்கும்?

பொதுநிலையினர்
அருள்வாழ்வின்
பண்புகள்

1. "உலகியல் அமைப்பை இடையறாது புதுப்பித்து நிறைவுபடுத்த வேண்டுமென்பதே உலகைப்பற்றிக் கடவுள்வகுத்துள்ள திட்டமாகும்". (பொதுநிலையினர் தூதுப்பணி எண்.7).

"வாழ்க்கை நலன்கள், குடும்ப நலன்கள், பண்பாடு, பொருளாதாரம், கலைகள், அரசியல் அமைப்புகள், அனைத்து நாட்டுத் தொடர்புகள் ஆகியவையும் இவை போன்ற பிறவும் இவற்றின் வளர்ச்சியும் முன்னேற்றமுமே உலகியல் அமைப்பை உருவாக்குபவை" (பொ.தூ. எண்.7).

இந்த உலகியல் அமைப்பைப் புதுப்பிப்பது எப்படி? இன்றைய உலகில் திருச்சபை என்ற ஏடு இதற்கான வழிமுறையை விளக்குகிறது. "காலத்தின் அறிகுறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அதன் பொருளை" (எண்.4) உணர்ந்து அதற்கேற்ப சீரமைக்க வேண்டும். இதில் கவனிக்க வேண்டிய வார்த்தைத் **துளாவி அறிந்து** என்பதாகும்.

உலகியல் நிகழ்வுகள். உலகியல் அமைப்பு இதுவே பொதுநிலையினரின் தளம். இதில் அவர்கள் ஏனோ தானோ என்று நீர்மேல் தாமரை போல ஈடுபட்டால் போதாது. துளாவுதல், உள்ளே நுழைந்து முழுவதுமாக அலசி, பிழிந்து சாற்றை எடுத்தல் என்ற வகையில் அவர்களது ஈடுபாடு **முழுமையானதாக** இருக்க வேண்டும்.

இன்றைய உலகில் திருச்சபை (இ.உ.தி) என்ற ஏடு உலகியல் ஈடுபாடு பற்றி இரு இடங்களில் குறிப்பிடுகிறது. "ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குப் பயனேதுமில்லை என்று அறிவுறுத்தப் பெறுகிறோம். இருப்பினும் புதிய மண்ணகத்தை நோக்கும் நம் எதிர்பார்ப்பு இம்மண்ணகத்தை வளப்படுத்தும் அக்கறையை நம்மில் தளர்ச்சியுறச் செய்வதற்கு நேர்மாறாக அவ்வக்கறையைத் தூண்டிவிட வேண்டும்; ஏனெனில் இங்கு தான் மறு உலகின் ஒருவகை முன்காட்சியாகத் திகழக்கூடுமான புதிய மனித குடும்பம் என்னும் உடல் வளருகிறது" (இ.உ.தி. 39).

"இங்கு நமக்கு நிலையான நகர் இல்லை. வரவிருக்கும் நகர் ஒன்றைத் தேடுகிறோம் என்னும் எண்ணத்தில் தங்கள் உலகக் கடமைகளைச் செய்யாமலிருக்கலாம் என நினைப்பவர்கள் தவறு செய்கிறார்கள். ஏனெனில் ஒவ்வொருவரின் தனி அழைப்பிற்கேற்ப மேற்கூறிய உலகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென அவர்களது நம்பிக்கையே அவர்களை இன்னும் அதிகமாகப் பணிக்கிறது" (இ.உ.தி 43).

நமது விசுவாசம் நம்மை உலகப்பணிகளில் ஈடுபடத் தூண்டுகிறது; வற்புறுத்துகிறது. அதில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை ஒரு இறைப்பணியாக, அருட்பணியாக எடுத்துச் செய்யவேண்டும்.

உலகிலே திருச்சபையின் பணியை இயேசு இரண்டு உவமானங்களினாலே விளக்கியுள்ளார். உப்பு, புளிக்காரம். இரண்டுமே உணவை, மாவை ஊடுருவுபவை. ஊடுருவியே படிப்படியாக சுவையூட்டுபவை; சுவை மாற்றுபவை. பொதுநிலையினரும் எந்த உலகப்பணியை எடுத்துக்கொண்டாலும் அவற்றை நுட்பமாக ஆய்வு செய்ய வேண்டும்; முழுமையான ஈடுபாடு கொள்ள வேண்டும். உலக நிகழ்வுகளிலிருந்து ஒதுங்கி இருக்கக்கூடாது. அவற்றோடு நெருங்கி நிற்க வேண்டும். உலக நிகழ்வுகளை அனுபவிக்க வேண்டும். அவற்றில் பங்கேற்பதன் மூலமாகவே இது சாத்தியமாகும்.

உலக நிகழ்வுகளைத் தனித்தனியாகப் பார்த்து அவற்றில் ஈடுபட்டால் மட்டும் போதாது. உலகம், வாழ்வு என்பது உடல்போல. நமது தனி வாழ்வுக்கும் பிறரது வாழ்வுக்கும் தொடர்பு உண்டு. இந்தத் தொடர்பைக் கண்டுபிடிக்கும் போது தான் வாழ்க்கையின் உள்ளே நுழைகிறோம். உலகத்தோடு நெருக்கம், அதனை நுட்பமாகப் படிப்பது, மொத்தமாகப் பார்ப்பது பொதுநிலையினர் அருள்வாழ்வின் பண்பாகும்.

2. வாழ்க்கை நிகழ்வுகளை உற்று நோக்கினால் மட்டும் போதாது. அவை மனித நல்வாழ்வுக்குத் துணை புரிகின்றனவா, இல்லையா, இல்லையென்றால் அவை எவ்வாறு இயக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தேடல் இருக்கவேண்டும். இதுவே விசுவாச ஒளியில் வாழ்வைப் புரிந்து கொள்வதாகும்.

வாழ்வின் நிகழ்வுகளைத் தமக்கு எவ்வாறு சாதகமாக்கிக் கொள்ளலாம் என்றத் தேடல் இயல்பாகவே வருவது. அது நமது மனதின் இயக்கமாகும், சுயநலம். இது அருள்வாழ்வு, ஆவியில் வாழ்வு ஆக வேண்டுமென்று கட்டாயமில்லை. உலகுக்கு இறைவன் வகுத்திருக்கின்ற இலக்கான நிறைவாழ்வு, மகிழ்ச்சியான வாழ்வு என்பதனோடு பொருத்திப் பார்த்து அந்தப் பின்னணியிலே நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படும் போதுதான் அருள்வாழ்வு தொடங்குகிறது.

உலகத்தை உருமாற்றுவது, சமுதாய மாற்றம் கொண்டு வருவது என்பது அருள்வாழ்வின் சிறப்பாகப் பொதுநிலையினர் அருள்வாழ்வின் பண்பு ஆகும். இதன் மூலமாகவே நாம் உலகத்தை ஆள்கின்றவர்களாகவும் (தொ.நூ. 1:28) உலகத்தைப் பண்படுத்துகிறவர்களாகவும் (தொ.நூ. 2:15) மாறுகின்றோம்.

இதனைத் தனியாகச் செய்ய முடியாது. எனவே தமது புரிதல்களை பிற மனிதரோடு பகிர்ந்து கொண்டு, இயக்கமாகச் செயல்பணியைச் செய்ய வேண்டும். பிறரோடு இணைந்து சமூக நிகழ்வுகளை மதிப்பிடுத்துவதற்கு சமூக உறவுகள் மீது நாட்டம் இருக்க வேண்டும்.

3. காலத்தின் அறிகுறிகளைத் தெளிவாக அறிந்து அவற்றின் ஊடாக இறைவனின் உள்ளிருப்பையும் திட்டத்தையும் காண முடியும் திறத்தைப் [illegible] நாம் [illegible] புதிய [illegible] தீர்மானிக்கிறது.

இந்தப் பணியில் [illegible] திருச்சபை அளிக்கும் [illegible] [illegible] வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்று இரண்டாம் [illegible] திருச்சபை [illegible] [illegible] எனவே [illegible] [illegible] உணர்த்துகிறது.

வாழ்வின் நிகழ்வுகளுக்கு [illegible] [illegible] வாழ்வின் [illegible] [illegible] [illegible]

பேசுகிறவர்களும் செயல்படுகிறவர்களும் பலர் உளர். பிற உதவியின்றி, சமயச் சடங்குகள், பக்தி நெறிகள், யோக நிலைகள் ஆகியவற்றால் வாழ்வைச் சீராக்கி விடமுடியும் என்று கருதுகிறவர்கள் உளர்.

உலக நிகழ்வுகளை உள்ளிப்பாகக் கவனிக்கிறவர்கள் என்ற வகையில் பொதுநிலையினர் வாழ்க்கைமுறை இதற்கு மாற்றாக இருக்க வேண்டும். விசுவாச வழிகாட்டிகளான விவிலியம், திருச்சபை பாரம்பரியம் ஆகியவை முறைகேடாக வாழ்வின் நிகழ்வுகள் மீது தம்மைத் திணித்துக்கொண்டு நிகழ்காலத்தில் வெளிப்படும் இறைத்திட்டத்தை பழங்காலத்து மஞ்சள் கண்ணாடியால் பார்த்து புதுமையைப் புரிந்து கொள்ள முடியாமல் பழைய மொழியைப் பயன்படுத்தி விசுவாச ஒளியைப் பெறுவதற்குத் தடையாக இருக்கலாம். இந்நிலையில் தொடர் வெளிப்பாடுகளைக் காண்பதற்கு அரிய வாய்ப்புகள் உள்ள பொதுநிலையினர் நிகழ்வுகளுக்குரிய பதில் மொழிகளை மனித முத்திரை பதித்த வடிவங்களிலே வெளிப்படுத்த வேண்டும். இந்தப் படைப்புத் திறன் பொதுநிலையினர் அருள்வாழ்வின் கூறுகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

இன்று உலகிலே, சிறப்பாக இந்தியா, சீனா போன்ற நாடுகளிலே மக்கள் தொகையென்பது ஒரு பிரச்சினையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. திட்டமிடப்படாத மக்கள் பெருக்கம் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தும் ஒன்றாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையிலே குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதை வற்புறுத்தாமல் பலுகிப் பெருகுங்கள் என்ற விவிலிய வார்த்தையைக் கிளிப்பிள்ளைபோல் சொல்லிக் கொண்டிருப்பது இறைவார்த்தைக்கு இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்வதாகும். இந்தத் தவறு நிகழாமலிப்பதற்கு பொதுநிலையினரின் உலகத்தன்மை கொண்ட ஈடுபாடு இன்றியமையாததாகும்.

எனவேதான் பொதுநிலையினர் ஈடுபாடு இல்லையென்றால் திருச்சபை சரியாக நிறுவப்பட்டிராது; திருச்சபை புளிக்காரமாக ஊடுருவியிருக்காது என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் சொல்கிறது (திருச்சபையின் நற்செய்திப்பணி, எண்.21).

4. உலகம் சமுதாயம் போன்றவற்றைப் பொறுத்தமட்டில் பொதுநிலையினர் முழுச்சுதந்திரத்தோடு பொறுப்பெடுத்துச் செயல்பட வேண்டும். திருச்சபைத் தலைவர்களை முழுவதும் சார்ந்திருக்கக்கூடாது. இது பற்றி சங்கம் தெளிவாகச் சொல்கிறது. "உலகத்துக்கடுத்த கடமைகளும் செயல்களும் பொதுநிலையினருக்குமட்டுமே உரியன

என்றில்லாவிடினும் அவை அவர்களுக்கே சிறப்பான முறையில் உரித்தானவை. எனவே, அவர்கள்..... ஒவ்வொரு துறைக்கும் உரிய சீரிய திறமை பெற முயற்சி செய்யவும் வேண்டும். அத்துறைகளில் அடைய முனையும் பிற மக்களோடு மனதார அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். நம்பிக்கையிலிருந்து எழும் பொறுப்புகளை ஏற்று, அதன் ஆற்றலால் வலுபெற்று, தேவைப்படும்போது புதிய திட்டங்களைத் தயக்கமின்றி உருவாக்கி அவற்றைச் செயல்படுத்தவும் வேண்டும். மண்ணக நகரத்தின் வாழ்வில் இறைச் சட்டத்தைப் பதிக்கச்செய்வது முறையாக உருவாக்கப்பட்ட அவர்கள் தம் மனச்சான்றின் பொறுப்பு திருப்பணியாளரிடமிருந்து பொதுநிலையினர் ஆன்ம ஒளியையும் ஆற்றலையும் எதிர்பார்ப்பார்களாக. எனினும், கனமான பிரச்சினைகள் உள்பட எழுகின்ற எல்லா பிரச்சினைகளுக்கும் அவர்களின் அருட்பணியாளர்கள் உடனடியாக நடைமுறைத் தீர்வுகளை எப்பொழுதும் கொடுக்கும் அளவுக்குத் திறமை உள்ளவர்கள் எனவோ, அவர்கள் இதற்காகவே பணி ஏற்றவர்கள் எனவோ கருதக்கூடாது; மாறாக, கிறிஸ்தவ ஞானத்தினால் அறிவொளி பெற்றுத் திருச்சபை ஆசிரியத்தின் படிப்பினையில் கவனத்துடன் கருத்தைச் செலுத்தி பொதுநிலையினர் தமக்குரிய பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுத்துவார்களாக. உலகு பற்றிய கிறிஸ்தவக் கண்ணோட்டம் கூறுவதைக் கொண்டு குறிப்பிட்ட சூழ்நிலைகளில் திட்டமான முடிவுகள் காண பொதுநிலையினரால் பொதுவாக இயலும் (இ.உ.தி. 43).

எப்பொழுதும் அருட்பணியாளர்களைச் சார்ந்திராமல் பல காரியங்களில் **பொறுப்புணர்வோடு தாமாகவே முடிவெடுக்கும்** சுதந்திர **உணர்வு, முதிர்ச்சி** பொதுநிலையினரின் வாழ்க்கை முறையில் முக்கிய இடம் வகிக்க வேண்டும்.

5. இவ்வாறு செயல்படும்போது ஒரே விதமாகவே திருச்சபை முழுவதும் செயல்படும் என்று எதிர்பார்க்க முடியாது. பன்முகத்தன்மை அதிகமாக வெளிப்படும். திறந்த மனதோடும் பொது நலத்தை மனதில்கொண்டும் செயல்படுகிற வேளையில் கூட கருத்து வேற்றுமைகளும் மாறுபட்ட நிலைபாடுகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இது முறையானது என்கிறது சங்கம் (இ.உ.தி. 43) இந்தப் **பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம்** தேவை.

பன்முகத்தன்மை என்பது பல காரணங்களால் வரலாம். ஒரே தன்மை உடையது போன்ற நிகழ்வாக இருந்தாலும் அதன்

பின்னணியில் மாற்றம் இருக்க முடியும். மக்கள் பெருக்கம் எனும்போது மனித மாண்பு குன்றிய வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் சேரிப் பகுதியில் வாழ்வோரின் புரிதலுக்கும் வசதியாக கிராமப்புறங்களில் வாழ்வோரின் அனுபவத்திற்கும் வேற்றுமை உண்டு. இதுபோன்று கலாச்சாரப் பின்னணியிலும் வேறுபாடு இருக்கலாம். பன்முகத் தன்மையை ஏற்றுக் கொள்வது, எல்லாம் சரியே என்ற அக்கறையற்ற நிலைபாட்டின் வெளிப்பாடாக இருக்கக்கூடாது. மாறாக அனுபவங்களின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்டு, அவை அனைத்தையும் உள்ளடக்கி மூன்றாம் நிலைபாட்டிலே மாற்று நிலைப்பாடுகளை ஒத்தக் கருத்தாக ஒன்று சேர்க்கும் முயற்சியும் தேவை. இதில் ஒவ்வொருவரின் அனுபவமும் விசாலமாகும். அதோடு சில வேளைகளில் விட்டுக்கொடுக்கும் மனநிலையும் வேண்டும்.

நிகழ்வுகளுக்குப் பொருத்தமில்லாத நிலைபாடுகள் தாமாகவே படிப்படியாக மாய்ந்துப்போகும். மாறுபட்ட நிலைபாடுகளில் அடிப்படையில்லாதவை நின்று கொடுக்க இயலாதவையாகும். இவற்றிற்கு சிறிது கால அவகாசம் கொடுக்கின்ற **பொறுமை தேவை**.

6. பொதுநிலையினரின் அருள்வாழ்வு **உலகத்தையும் சமூகத்தையும் மையமாகக் கொண்டதாக** இருக்க வேண்டும்.

ஆவியின் ஆற்றலை உசுப்பி விடுவதற்கு அதற்குரிய வழிமுறைகள் தேவை. ஜெபம், வழிபாடு போன்றவை அதற்கு அவசியமாகும். இவை சாதாரணமாக ஆலயத்தையும் ஜெப அறைகளையும் மையமாகக் கொண்டவையாகும். ஆனால் பொதுநிலையினர் சந்தடியிலும் மக்கள் நெரிசலிலும் பணிகளின் நெருக்கடிகளிலும் வாழ்பவர்கள். ஆவியின் அனுபவத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், அருளைப் பெறுவதற்கும் ஆலயத்தை நாடிக் கொண்டிருக்க வேண்டுமென்றால் அது இயலாதது.

எனவே ஆவியின் ஆற்றலை கிளறிவிடுகின்ற வழிமுறைகளுக்கு அறிமுகமாவதற்கு ஆசிரமங்களுக்கும் ஆலயத்திற்கும் ஒதுங்கிச் செல்வது அவ்வப்போது தேவையாக இருக்கலாம். ஆனால் அதிலே பெறக்கூடிய பயிற்சி ஆலயங்களில் அருளனுபவம் பெறுவதாக அமையாமல் வாழ்க்கை நெரிசலின் மத்தியில் மனமென்னும் உள் அறைக்குச் சென்று அனுபவம்

பெறுவதாக இருக்க வேண்டும்.

துறவறமடத்து அருள்வாழ்வு ஆலயத்தாலும் கால அட்டவணையாலும் நெறிப்படுத்தப்படுகிறதென்றால் பொதுநிலையினரின் அருள்வாழ்வு வாழ்க்கை இயக்கத்தை ஒட்டியதாக இருக்கும். வாழ்க்கை இயக்கத்தில் முன் கணிக்க முடியாமல் திடீரென்று வருபவை அதிகம் உண்டு. ஓய்வாக ஒதுங்கிநின்று ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு நெறிப்படுத்த இயலாத நிலையே அதிகமாக இருப்பது. இதற்குரிய பயிற்சியும் பக்குவமும் அதிகம் தேவை. ஈடுபாட்டில் விரவிய அருள்வாழ்வு அவசியம். அதில் ஆலயத்திற்கும் சடங்குகளுக்கும் குறைந்த இடமே இருக்கும்.

7. மேலும் பல்மதச் சூழ்நிலையிலே பணி இடங்களும், உறைவிடங்களும் அமைவதால் கிறிஸ்தவ மத அடையாளங்கள் மட்டுமே ஆவியின் ஏவுதலுக்குக் கருவியாக அமைவது பொதுநிலையினரின் அருள்வாழ்வை எதிர்மறையாகப் பாதிக்கும். எனவே பிறமதச் சின்னங்களிலும் சமய சார்பற்ற அடையாளங்களிலும் ஆவியின் ஆற்றலை அனுபவிக்கும் பழக்கம், பயிற்சி பொதுநிலையினருக்கு மிகவும் தேவை.

இறையரசு இயக்கம் போன்ற சமூக சார்பு கொண்ட முற்போக்கு இயக்கங்கள் பொதுநிலையினர் ஆன்மீகத்தைத் தமது அருள்வாழ்வாகக் கொண்டிருக்க வேண்டும்.

[illegible] ஆய்வுக்கேள்விகள்

1. அருள்வாழ்வின் தன்மை யாது?
2. பொதுநிலையினருக்கும் துறவியர், அருட்பணியாளர் ஆகியோருக்கும் உள்ள தொடர்பு யாது?
3. பொதுநிலையினருக்குத் துறவியர் செய்யும் சேவை யாது?
4. உலகில் ஈடுபடுதல் அருள் வாழ்வாக முடியுமா?
5. [illegible] திருப்பணிக்கும் பொதுநிலையினர் அருள் வாழ்வுக்குமுள்ள தொடர்பு யாது?
6. பொதுநிலையினர் சுதந்திரத்தோடு செயல்பட வேண்டியதன் அவசியம் என்ன?
7. வேற்றுமைத் தன்மையும் பன்மையும் கொண்ட பொதுநிலையினர் அருள் வாழ்வுக்கு விடும் சவால்கள் எவை?
8. 'பொதுநிலையினரின் ஆலயம் இவ்வுலகமே' என்று சொல்ல முடியுமா?

9

சமூகப் பகுப்பாய்வு

பகுப்பாய்வின் அடிப்படை

சமுதாயத்தைச் சீரமைத்து, புதிய வானகம் புதிய வையகம் என்று அழைக்கப்படும் ஒரு நிறைவான, சுவையான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதுதான் மனிதருடைய வாழ்க்கையின் குறிக்கோள், அதுதான் கடவுளுடைய திட்டம். அதில் தான் நாம் எல்லோரும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது ஓரளவுக்கு நமக்குத் தெளிவாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சமுதாய மாற்றுப் பணியை நாம் எப்படி செய்வது?

சமுதாய மாற்றம் என்பது, இந்த சமுதாயத்தின் பல்வேறு அங்கங்களின் தொடர்புகளை, உறவுகளை மாற்றி அமைப்பதாகும். இருப்பதை அடித்து உடைத்து விட்டு, வேறு எங்கோ இருப்பதை கொண்டு வருவதல்ல. ஆனால் தொடர்புகளை மாற்றி அமைப்பது என்பது உறவு அல்லது ஆட்களைச் சார்ந்தது. ஆட்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவு முறையில் சமூக

அமைப்புகள் உருவாகின்றன. அவற்றின் தொடர்புகளை சரியான முறையிலே வைப்பது சமுதாய மாற்றமாகும்..

இன்றைய சமுதாயமானது, சுவையான வாழ்வுக்கு வகை செய்யாமல் இருப்பதற்கு காரணமென்ன? என்பதை முதன் முதலாவதாகச் சரியாக புரிந்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயம் ஒரு கருவியைப் போன்றது. இந்தச் சமுதாயம் என்கிற இயந்திரம் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது? இச்சமுதாயத்தில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பும் என்னென்ன வேலையைச் செய்கின்றன? என்று பார்க்க வேண்டும்.

சமூகம் ஒரு இணைந்தியங்கும் கருவி

சமுதாயம் என்பது அதில் உள்ள பல்வேறு பகுதிகளின் தொகுப்பும் தொடர்பும் ஆகும். இந்தச் சமுதாயம் இயங்கியவாறே அதன் அச்சில் ஒரு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. ஏற்றத்தாழ்வான சமுதாயத்தில் ஏழைகள், பணக்காரர் உருவாக்கப்பட்டு கொண்டே இருப்பார்கள். பணக்காரர் ஏழைகளைச் சுரண்டுவது நடந்து கொண்டே இருக்கும்.

நாம் ஒரு கருவியை சீர்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அந்த கருவி எவ்வாறு செயல்படுகிறது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு சிறந்த பொறியாளர் தொழில் நுட்பத்தில் எவ்வாறு தேர்ச்சி பெறுகிறார்? என்று நமக்குத் தெரியும். அந்தக் கருவியினுடைய ஒவ்வொரு அங்கமும் என்ன பணியைச் செய்கிறது? அதற்கும் இன்னொன்றுக்கும் இருக்கின்ற தொடர்பு என்ன? என்பதை தெரிந்து கொள்ளும் போது தான் கருவியில் என்ன கோளாறு என கண்டுபிடிக்க முடிகிறது. அதைச் சரிசெய்யவும் பொறியியல் திறமையும் கிடைக்கிறது.

இது போன்று இந்தச் சமுதாயத்தை நாம் சீர்படுத்த வேண்டுமென்றால், இந்தச் சமுதாயம் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது, இதில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பும், என்ன பணி செய்து கொண்டிருக்கின்றது? மொத்த இயக்கத்தில் அதன் இடம் என்ன? எது முதலில் செயல்படுகிறதது? ஒன்று இன்னொன்றை முடுக்கி விடுகிறதா? அல்லது வேறொன்று இதை முடுக்கி விடுகிறதா? இப்படி இவற்றினுடைய தொடர்பு சரியாக உணரப்படுகிற போது நமக்கு

இந்த சமுதாயம் ஏன் இப்படி செயல்படுகிறது என்பதை மட்டுமல்ல, இந்த சமுதாயத்தில் இந்த அம்சங்களில் எது நீக்கப்பட வேண்டும், எது காக்கப்பட வேண்டும், எப்படிப்பட்ட தொடர்புகளை மாற்ற முடியும் என்பது நமக்குத் தெளிவாகும்.

இதனால் தான் சமூகப் பகுப்பாய்வு இன்றியமையாதது ஆகிறது. **சமூகப் பகுப்பாய்வு இல்லாமல் சமூக மாற்றம் செய்ய இயலாது.** நாம் எப்படி ஈடுபட வேண்டும் என்று நமக்கு வழிகாட்டக் கூடியது தான் சமூகப் பகுப்பாய்வு. எனவே உலகியல் மாற்றத்தில் அக்கறை கொண்ட அனைவரும், சிறப்பாக திருச்சபை முழுவதும் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

பகுப்பாய்வு கொஞ்ச நேரம் மட்டுமோ அல்லது எப்போதாவது ஒரு முறையோ செய்து விட்டு முடித்துக் கொள்கிற விஷயமல்ல. அது தொடர்ந்து செய்யப்பட வேண்டியது. இந்தச் சமூகப் பகுப்பாய்வு தான் எல்லாவற்றையும் திறனாய்வு செய்ய உதவுகிறது.

பகுப்பாய்வினை பெரிய அமைப்பிலிருந்தும் ஆரம்பிக்கலாம். சிறிய ஒரு அமைப்பிலிருந்தும் ஆரம்பிக்கலாம். இறுதியில் எல்லாவற்றோடும் தொடர்பு படுத்தக் கூடிய முறையில் இருக்க வேண்டும். சர்வதேச அளவிலிருந்து ஆரம்பித்தால் இறுதியில் நம் வீட்டில் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிய வேண்டும். வீட்டிலும் கிராமத்திலும் இருந்து ஆரம்பித்தால் சர்வதேசத்தையும் புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

அதற்குரிய சில கூறுகள் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்த சமூகமானது மூன்று அடிப்படை அமைப்புகளால் ஆனது.

பொருளாதாரம் என்பது நம்முடைய உடல், மன வளர்ச்சிக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து அவற்றை நுகர்வதாகும். எனவே பொருளாதாரத்தின் அடிப்படை நமது தேவையை பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி செய்வது ஆகும். உற்பத்தி செய்யும் போது அங்கு ஒரு தொடர்பு ஏற்படுகிறது. இயற்கை வளங்களை மனிதன் உருவாக்கியிருக்கிற தொழில் நுட்பத்தின் உதவியினால் நம் உழைப்பை பயன்படுத்தி நமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறோம். இயற்கை வளங்களுக்கும் தொழில்நுட்பத்திற்கும் உழைக்கும் மனிதனுக்கும் பலவிதமான தொடர்பு ஏற்பட முடியும்.

சமுதாயத்தில் பலர் தங்களுக்குத் தேவையானவற்றை நுகர முடியாமல் இருக்கும் போது பொருளாதார அமைப்பில் என்ன கோளாறு என்று பார்க்க வேண்டும். இயற்கை வளங்களை ஒரு சாராரால் பயன்படுத்த முடியவில்லை. வேறு ஒரு சாரார் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றால் அவர்களுக்குத் தொழில்நுட்பம் இல்லையா? இல்லையென்றால் ஏன்? உழைக்க முன்வந்தும் இயற்கை வளங்கள் இல்லாததால் உழைப்பு வீணாகிறது. இது ஏன்? இயற்கை மீது உழைப்பை செலுத்துபவன் உற்பத்தியைப் பெறுவதில்லை ஏன்? இப்படி ஆய்வு செய்து பார்க்கும் போது உண்மை நிலவரம் புரியும்.

அரசியல் அதிகாரம் என்பது சமுதாயம் கொடுத்திருக்கிற அதிகாரம். எல்லோருமாக சேர்ந்து இந்தச் சமுதாயத்தை வழி நடத்துவதற்காக கொடுத்திருக்கிற அதிகாரம். இந்த அதிகாரம் யார் கையில் இருக்கிறது? யாருக்காக பயன்படுத்தப்படுகிறது? எப்படி பயன்படுத்தப்படுகிறது? இதற்கும் இன்று நிலவும் அமைப்புகளுக்குமுள்ள தொடர்பு யாது? என்று ஆய்வு செய்யும் போது சில உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

மூன்றாவதாக இந்தச் சமுதாயம் எவ்வாறு இயங்க வேண்டும்? வாழ்க்கையை நாம் எவ்வாறு பார்க்க வேண்டும்? என்று தீர்மானிப்பதில் சில புரிதல்கள் மறைந்திருக்கின்றன. அவை சின்னங்கள், கோட்பாடுகள், கருத்தியல்கள் வழியாக வெளிப்படுகின்றன. **கலாச்சாரத்தைப்** பகுப்பாய்வு செய்யும் போது இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த வகையில் நாம் செய்யும் பகுப்பாய்வு. இந்தியாவிலும், உலகத்திலும் முதலாளித்துவ கருத்தியல் மேலோங்கி நிற்கிறது என்பதைப் புரிய வைக்கிறது.

முதலாளித்துவத்தின் தன்மைகள்

முதலாளித்துவத்தில் முதல் அல்லது முதலீடு செய்கிற பணம் மிக மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மனிதனை விட பணம் முக்கியமானதாக எண்ணப்படுகிறது. பணம் முக்கியமானதினால் அதனைப் பெருக்க மனிதர் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

முதலைப் பெருக்குவது முக்கியமானதால், மனிதர்கள் சில தியாகங்களை செய்துதான் இந்த முதலை பெருக்க முடியுமென்றால்